Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් செப். 17-23, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 374

## யாழ்நகரில்... யுத்தம்

## தேர்தலைத் தீர்மானிக்கப்போவது

## வாக்குகளா? வேட்டுகளா?



மீண்டும் ராஜ்கிரண்

தொண்டை சமாச்சாரம்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

## வலுவடைய வழி?

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

தேர்தல் நாக்குகள்
நீளத் தொடங்கிவிட்டன.
இதுவரை,
'கதிரைகள்' பற்றிய
கனவுகள்
கதவடைக்கப் பட்டிருந்ததால்
கட்சிகளுக்கிடையிலான
மோதல்கள்
முனைப்பாய் இருக்கவில்லை.

ஆனால்,
தேர்தல் என்ற
'திருவிழா'
களைகட்டத் தொடங்கியதும்
தெருக்கடைகள்
திறந்தது போல்,
புதுக்க முளைத்த
கட்சிகளும் குழுக்களும்
சுயேச்சைக் கூட்டுக்களும்-
வெளுத்துவாங்க
ஆரம்பித்துவிட்டன-
தங்கள்
தேர்தல் முழக்கங்களை.

இந்தத் தேர்தல்தான்
இதுவரை இலங்கையில்
நிகழ்ந்த தேர்தல்களில்
அதிகூடிய வேட்பாளர்கள்
பங்குபற்றும் தேர்தலாகச்
சாதனை படைத்துமுள்ளது.

இந்தச் சாதனையில்
வேதனை என்னவென்றால்,
தமிழ் மக்களின்
நலனுக்காகவென
நாக்கூசாமல் கூறிக் கொண்டு
தமிழ் பிரதேசங்களில்
போட்டியிலிறங்கியுள்ள
தமிழ்க் கட்சிகள்
தமிழ் மக்களுக்குக்
கிடைக்கக்கூடிய
ஆசனங்களையே
நாசமாக்க விழைந்ததுதான்.

அதுவும்,
கேட்பாரற்றவாறு
கைவிடப்பட்ட நிலையில்
தமிழ் மக்கள் தவிக்கும்
பிரதேசங்களாக அமைந்துள்ள
திருகோணமலை, அம்பாறை
ஆகிய பகுதிகளில்
அவர்களுக்கென
ஏதோ ஒருபிரதிநிதியாவது
இருந்தேயாகவேண்டுமென
அவசியப்பட்டிருக்கும்
வேளையில்
பொறுப்பற்றவாறு
வீம்புத்தனம் காட்டி
'உள்ளதையும் கெடுத்தான்
நொள்ளிக் கண்ணன்'
என்பதுபோல்
குழப்பிவிட்டு நிற்கிறது
கூட்டணி.

கூட்டணியின் கூத்தால்
இந்த இரண்டு பிரதேசங்களிலும்
வாக்குகள் சிதறி
பிரதிநிதித்துவத்தை இழக்கக்கூடிய
ஆபத்தான நிலைமைக்கு
அப்பகுதித் தமிழ்மக்கள்
தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தேர்தலில்
சிறுபான்மை இனங்களின்
பிரதிநிதித்துவ பலம்
நிலைநிறுத்தப் படுவது
அத்தியாவசியமாகிறது.

ஏனெனில்
பெரும்பான்மைக் கட்சிகள்
எவற்றுக்குமே இம்முறை
மூன்றில் இரண்டு பெரும்பான்மை
கிடைக்கப் போவதில்லை.

சாதாரண பெரும்பான்மையை
ஈட்டுவதற்குக் கூட
சிறுபான்மைக் கட்சிகளின்
துணையை நாடவேண்டிய
நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

அத்தகைய நிலையில்
பலம் பெற்ற பிரதிநிதித்துவத்தை
தமிழ்த் தரப்புக் கொண்டிருந்தால்
அடுத்து நிகழவுள்ள
அரசியல் மாற்றங்களில்
தீர்க்கமான பங்கை
ஆற்ற முடியும்.

கடந்த அரசாங்கத்தில்
சிறுபான்மைக் கட்சிகளில்,
அஷ்ரப் மட்டுமே
அழுத்தம் செலுத்தக்கூடிய
அரசியற் பலத்தைக்
கொண்டிருந்தார்,
தமிழ்த் தரப்போ
கையாலாகாதவர்களாகவே
காலம் கழித்தனர்.

இந்த இயலாத்தனத்துக்கு
முற்றுப்புள்ளி வைத்து
எதிர்வரும் காலத்திலாவது
அழுத்தம் திருத்தமாக
இடித்துரைத்து
அரசியல் மாற்றங்களைச்
சாதகமாகக் கையாளக் கூடிய
பிரதிநிதித்துவத்தால் நாம்
வலுப்படல் வேண்டும்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை* ***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

## தெய்வீகம்

பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆண்டவன் ஒவ்வொரு உயிரிலும் உறைந்திருக்கிறான். எமக்குள் இறைவன் இருக்கிறான். எல்லா ஜீவராசிகளிடத்தும் இறை அம்சம் பதிந்திருக்கிறது. தங்களிடம் அமைந்திருக்கின்ற தெய்வீகத்தை யாரும் உணர்ந்து கொள்வதில்லை.


பதினெண் புராணங்களை இயற்றிய வேதவியாசர் "பரோபகார(ம்) புண்ணியாய.....!" எனும் வடமொழிச் சுலோகம் பதினெண் புராணங்களின் சாராம்சம் என்கிறார். 'பரோபகார என்பது பர+உப+கார என்று பிரிக்கப் படுகிறது. பர-இறைவன், உப-அருகில், கார-முயற்சிப்பது. இச்சுலோகத்திற்கு தான தர்மம் செய்தல் என்பது தவறான விளக்கமாகும். இறைவன் அருகில் இருக்க முயற்சிப்பது என்பதே சரியானதாகும்.

ஏன்? தெய்வீகம் எல்லோரிலும் பிரகாசிப்பதில்லை என்றால்...! எல்லோரும் ஒரேமாதிரி இருப்பதில்லை. ஒரே மின்சாரம் 'வோல்டேஜ் குறைந்த பல்பில் குறைவான ஒளியும் வோல்டேஜ் கூடிய பல்ப்பில் கூடிய ஒளியையும் கொடுக்கிறது. மனிதனின் கெட்ட செயல்களால் வோல்டேஜ் குறையும்போது தெய்வீகம் மங்குகிறது. நல்ல செயல்களால் வோல்டேஜ் கூடும் போது தெய்வீகம் பிரகாசிக்கிறது. இறைவனின் திருவருள் எம்மில் படிய வைக்க முயற்சிப்பதுதான் புண்ணியம்.

'தெய்வீகம் எமக்குள் பிரகாசிக்கட்டும்'

தம்பிலுவில் தங்கராசா தவராசா

# ஆன்மீகம்



## மற்றவர் மனதை நோகடிக்காத மாநபி

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு நாள் வயது முதிர்ந்த பெண்மணியொருவர் திராட்சைப் பழக் கொத்து ஒன்றைக் கொண்டு வந்து, அதைப் புசிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொண்டார். நபியவர்கள் அவற்றைப் புசிக்கத் தொடங்கினார்கள். பழத்தைக் கொடுத்த பெண்மணியோ பழங்கள் முழுவதையும் நபி அவர்களே புசித்து விட்டதைக் கண்டு மகிழ்வடைந்து நன்றி கூறிவிட்டு சென்றுவிட்டார்.

உடனே கூடியிருந்த தோழர்கள் நபியை நோக்கி, "வழக்கப்படி எங்களுக்கெல்லாம் கொடுக்காமல் தாங்களே புசித்து விட்டதைக் கண்டு ஆச்சரியப்படுகின்றோம்!" என்றனர். அதற்கு நபியவர்கள், "அந்த அம்மையார் அன்போடு அளித்த பழங்கள் அனைத்தும் புளிப்பாக இருந்தன. உங்களுக்கு அதைக் கொடுத்தால் பழம் புளிக்கின்றது என்று சொல்லி இருப்பீர்கள். அதைக் கண்டு அவர் வருத்தப்பட்டிருப்பார்.

ஆகவே, அன்போடு தேடிவந்து பரிசளித்த அந்த அம்மையாரின் அன்புள்ளத்தை நோகடிக்க நான் விரும்பவில்லை. அதனால் தான் பழங்கள் முழுவதையும் நானே புசித்துவிட்டேன்!, என்று கூறினார்கள். எனவே நாமும் அதை உணர்ந்து நடப்போமாக. -(அல்ஹதீஸ்)

நன்றி: 'பெருமானாரின் வரலாற்றில் 100 ஏடுகள்'

வை.எம்.தாஹிர் கரீம்-கல்முனை 06.

## சமாதானம்

சமாதானம் என்றால் வெறும் கலகம் இல்லாத,போர் இல்லாத, ஒரு நிலை மட்டுமல்ல, ஒரு மனிதனின் நல்வாழ்வையும் மேலான நிலையையும் குறிக்கின்றது. மனித வாழ்வு செழிப்பான வளம் பெற்ற ஒரு நிலை, இந்த நிலையை மக்களிடம் உண்டாக்க வேண்டியது. நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். மாறாக; சிலர் எப்போது பார்த்தாலும், மனிதர் நடுவில் பிரிவினைகளையும் பிளவுகளையும் பிரச்சனைகளையும், உண்டாக்குவதற்கு நேரத்தையும் காலத்தையும் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள்.


சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள். (மத் 5:9)

மனிதர் நடுவில் இருக்கும் பகைகளைப் போக்கி அவர்கள் நடுவில் சமாதானத்தை உண்டுபண்ணுவதும் மற்றவர்கள் நல்வாழ்வு பெற உழைப்பதும், ஆத்துமத்திலும் சரீரத்திலும் வளமும் செழிப்பும் பெற வழிவகுத்துக் கொடுப்பதும் இன்றைய அமைதியற்ற யுத்தகால சூழ்நிலையில் அவசியமானதும் அவசரமானதுமான பணியாகும்.

எனவே, சமாதானத்தின் பொருளை உணர்ந்து சமாதானத்தின் கருவிகளாக செயற்பட்டு ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளாக வாழ்வோமாக.

சகோ.எஸ்.யேசுநாதன்-துறைநீலாவணை.

## கவிதைப் போட்டி இல.374



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.09.2000

கவிதைப் போட்டி இல.374
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**இடம் உள்ளவரை இடம்**
**பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

## கவிதைப் போட்டி இல.371

### பரிசுக்குரிய கவிதை

### மறந்திட முடியவில்லை

**வானத்தைக் கடந்திடலாம்,**
**பூமியையும் புதைத்திடலாம்,**
**போர் சூழ்ந்தழிக்கையிலும்,**
**நேசத்தை மட்டுமேன்**
**மறந்திட முடியவில்லை?**
**அது தனிமையிலும்**
**தொடர்கின்றது!**

சி.மதியழகன்-திக்கம்.

### பிரிவு

அன்பாகப் பேசி
ஆதரவைப் பகிர்ந்து
பாசத்தை வாங்கி பழகிவிட்ட
இரு ஜோடிகள், விழிகளில்
கண்ணீருடன் விடைபெற
துடிக்காமல் நிரந்தரமற்ற
கொண்ட காதல்,
குதறப்பட்டு விட்டதால்,
மனம் உடைந்து, கங்கைக்
கரையோரம் நடைபிணமாய்
தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

கு.அனிதா-தலவாக்கலை.

### மறந்து விட்டேன்!

கடல் கண்ணில் பட்டு,
காதல் செய்த நான்;
இரவை கண்டவுடன்
நேரத்தை மறந்து விட்டேன்!

ந.யசோதரன்-கொத்மலை.

### என்றுதான் எம் இணைப்பு...?

ஓட்டெடுப்புக்கு நாள் குறிச்சாச்சு.....,
பொதியதை பெட்டகத்தில் போட்டாச்சு....,
தீ சாட்சியாக தீமைகள் நடக்குமுன்.....,
அக்கினி சாட்சியாக-அன்னமே....,
நாம் இணைவதெப்போ?

டினேஸ்-மஸ்கெலியா.

### விடுதலை

இருளோடு நாம் வாழும் வாழ்க்கை
நற்பெயரோடு தேரேறும் ஒரு நாள்.
நானும் நீயும் எமது மண்ணில்
உரிமைகளோடு நிச்சயமாய்
வாழ வேண்டும்! எம்
விடுதலையை இச்சமுதாயம்
நன்கு உணர வேண்டும்!

எஸ்.விமலன்-கொழும்பு 15.

### (சு)தந்திரம்

அந்திமாலையில்
அந்தரங்கள் பலபேச நினைத்து
அடுத்திருந்த கடற்கரையில்
அமர்ந்த போதுதான் புரிந்தது
சுற்றிவளைப்பின்
சுதந்திரக் கரங்கள்
சுற்றித்திரிந்தவர்களை
ஒற்றியெடுத்த விடயம்!

எம்.எம்.ஜுமானா ஹஸீன்-கல்முனை 05.



### வளரட்டும்....!

யுத்தம் ஆரம்பித்து
பிரிந்த காதலர்கள்
அனேகம், இந்
நாட்டில்-உங்கள்
காதலாவது வளரட்டும்..!

ஜெ.லக்கி-பெரியகல்லாறு.

### எப்போது

நாட்டில் எப்போது,
சமாதானம் வருகின்றதோ!
அப்போது தான்,
இருட்டினுள் இருக்கும்,
உங்கள் காதலும்,
வெளிச்சத்துக்கு வரும்!"
காத்திருங்கள்....
சமாதானம் எப்போது,
வரும் என்று!

ஜி.எச்.கே.அஜந்த-
அக்கரைப்பற்று 08.

### 'யாழ்' ஒலி

மண்வாசனை கடற்காற்று
தென்னங்கீற்றுத் தென்றலுடன்
கூடிய சுதந்திரக்காற்றைச்
சுவாசித்த யாழ்வாசிகளின்
பிணத்தில் கூட வேட்டொலி
அல்ல நித்தம் மீட்டல் ஒலியே!

கி.கஜமுகி-கண்டி.

### பரிதாப காதல்

காதலர்களே!
நீங்கள் பேசாதிருங்கள்!
மற்றவர்கள் உங்களை-பற்றி
பேசிமுடிக்கும் வரை..!

க.ஜெயந்திரகுமார்-அட்டன்.

### எதைத் தேடுகின்றீர்கள்?

நீங்கள் வாழ்க்கையை
தேடுகின்றீர்களா...?
வாழ்ந்து கொண்டிருந்த
மக்களை தேடுகின்றீர்களா...?
அவை நீண்ட தொலைவில்
சென்று விட்டன.

சி.ரமேஸ்-ஏறாவூர் 04.




# வாசக[ர்]சாலை

அன்பின் இனிய முரசே!
வாரத்திற்கு வாரம்.
'வலம் வந்து வசந்தம் அளிக்கும் உனக்கும் உனது குடும்பத்திற்கும் எனது இனிய வாழ்த்துக்கள். மேலும் உனது 'மோனிக்கா என் மோக்கா', 'பாப்பா முரசு', 'அதிரடி ஐயாத்துரை', 'ஸ்போர்ட்ஸ்', 'கடிஜோக்ஸ்' என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. மேலும் 'ஸ்போர்ட்ஸ்' செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கவும். உனது சேவை மேலும் தொடர வாழ்த்துகிறேன். வாழ்க முரசு! வளர்க தமிழ்!!

சி.லவன்-சுன்னாகம்.

தித்திக்கும் தேன் தமிழையும் திகட்டாத காவியத்தையும் தாங்கி வரும் என் இனிய முரசே! உன் ஆயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருத்தி. நீ சுமந்து வரும் சுவையான தகவல்கள் யாவும் அருமையே. தலையங்கத்தினால் எம்மை தன் வசப்படுத்துகிறாய். உன் வருகையில் என்னை தனிமைப் படுத்துவது 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'பாப்பா முரசு', 'தேன் கிண்ணம்', 'சிந்தியா பதில்கள்' போன்றவை. உன் சேவை நம் பாரினில் பல்லாண்டு பரந்தோங்க வாழ்த்தும்....! வாசகி.

வ.ஜெயராணி-டொரிங்டன்.

தித்திக்கும் தேன் முரசே!

வான் எட்டும்-உனது புகழ் வளர்கவே! முதியோர் போற்றவும் இளையவர் எதிர்ப் பார்க்கவும் தொடர்கிறது-உனது வருகை!

சுவைக்கு 'தேன் கிண்ணம், இலக்கிய நயம்' சூடாக 'அதிரடி அய்யாத்துரை' முதல் 'அரசியல்' அலசல் அனைத்துமே.... சுவாரசியமானவை. 'தகவல் பெட்டி,'

அழகுபெற்றிட 'லேடிஸ்பெஷல்' அறிவு பூர்வமாக 'பாப்பா முரசு,' 'சிறுகதை', ஏக்கத்திற்கு 'தொடர்கதை...' நட்புக்காக 'பேனா நண்பர்கள்' நகைச்சுவையாக 'கடிஜோக்ஸ்' பார்வைக்கு பளிச்சிட 'சினிவிசிட்'; சிந்தனைக்கு 'சிந்தியா பதில்கள்' அதனோடு 'ஆன்மீகம்...' இன்னுமின்னும் என்னென்னவோ அத்தனையும்-உனக்கு அம்சமானவையே. உனது ஆக்கத்தில்-எனது 'சிறு' கவித்துளிகளை தெளிப்பதற்கு நன்றிகள் பல.... துணிவுடன் நின்று தொடர்ந்து வளர்க!

என்.பி.சி.-உடப்பு.

ஐயா!

நான் முரசின் நீண்ட கால வாசகன், வாரம் தவறாமல் முரசை வாசித்துவிடுவேன். இருப்பினும், முரசின் முன்னைய ஆசிரியர் அமரர் அற்புதராஜா நடராஜா (அற்புதன்) எழுதிய 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' தொடரை தொடர்ந்து வாசித்து வந்தேன். ஆனால் அதன் பிரதிகளை பத்திரப்படுத்திக் கொள்ள முடியாமல் போய்விட்டது. தமிழர் போராட்டச் சுவடுகள் அவை காலத்தால் அழியாத வரலாறு அது. தமிழர் போராட்டம் உன்னத நிலையை அடைந்துள்ள இந்நாட்களில் அந்த கட்டுரைகளை தொகுதியாக, நூலுருவில் கொண்டு வருவது சாலச்சிறந்தது. மட்டுமல்லாமல் காலத்தின் தேவையுமாகும். அண்மைய ஆனையிறவு வீழ்ச்சி மற்றும் அதன் பிரதிபலிப்புகள் வரையாவது தொகுக்கப்பட்டால் சிறப்பாக இருக்கும், (அதிகாரப்பரவலாக்கல் விவாதம் வரை). உங்கள் அனுபவம் இதற்கு மிகவும் துணைபுரியும். தயவு செய்து எனது கருத்துக்களை ஆலோசித்துப் பார்க்கவும்.

ஆர்.மொஹமட்-மாத்தளை.

### முரசுக்கோர் முத்தாரம்!

அற்புதனின் மறைவுக்குப் பின்னே தினமுரசு முன்னையதைப் போல் தற்போது இல்லை என்பதே பரவலான கருத்து. ஆனால் அதையெல்லாம் பொய்ப்பித்து, முனைப்புடன்-முன்பிருந்ததைவிட பல மடங்கு முன்னேற்றம் கண்டு வருகின்றது...

முரசில்... கண்ணதாசன் கட்டுரை, நாட்டுச் சூழலை அப்படியே பிரதிபலித்துக் காட்டும் சிறுகதைகள்... 'சிந்தியா பதில்கள்', 'சினிமாப்பகுதி' 'அரசியல் அம்சங்கள்' என அனைத்துமே முரசின் கிரீடங்கள்.

ஒரு பல்சுவைத்திரட்டாய் ஒளிரும் தினமுரசுக்கு இணை முரசே!

முரசில் மேலும் பல புதிய அம்சங்களை எதிர்பார்க்கின்றோம். தாகத்தை- எமது முரசு தணிக்குமா?

தாராபுரம் நிலாம்.

### முரசம்!

சென்ற 03.09.200 அன்று வந்த 'ஊது குழல் தேவையில்லை' என்ற ஆசிரியரின் கருத்தை படித்தேன். என் எண்ணத்தில் தோன்றியதை நீர் துணியுடன் கச்சிதமாகவும் வெளியிட்டுள்ளீர். வாழ்க உன் தொண்டும், பணியும்.

அ.அருள்தாஸ்-மட்டக்களப்பு.

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களுக்கும் நிகர் நீயே தான். அதிலும் 372 வது மலரில் வந்த 'கள்ளத்தோணி', 'கொழுக்கட்டை', 'அன்புமகன்' ஆகிய சிறுகதைகள் நமது வாழ்விற்கு ஏற்றதாகவே அமைந்திருந்தன. இதுபோல் தொடர்ந்து நல்ல அம்சங்களுடன் வெளிவர தொடர்ந்து வாழ்த்துகின்றேன்.

த.கருணாகரன்-கண்டி.

### நடத்துநருக்கு ஒரு சபாஷ்!

பல சிக்கல்களின் மத்தியில் பயணத்தை மேற்கொள்ளும் நம்மவர்கள் இப்படி அவஸ்தைப்படும் போது, தோள் கொடுக்க இப்படி ஒரு துணிவு மிக்க பஸ் நடத்துநர். எல்லோரும் இப்படி ஒரு சாதனை படைக்க முடியுமா? தமிழ் மக்கள் சார்பிலும் தினமுரசு சார்பிலும் நடத்துநருக்கு பாராட்டுக்கள்.

அ.அம்பிகாவதி-வவுனியா.

**மடல்கள் மற்றும்**
**ஆக்கங்கள்- உட்பட சகல**
**தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**தொலைபேசி: 074-514282**
**தொலை நகல்(Fax):- 074-513266**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# யாழ் நகரில்... யுத்தம்

# தேர்தலைத் தீர்மானிக்கப்போவது

## வாக்குகளா? வேட்டுக்களா?

யாழ்குடா நாட்டில் இன்று எழுந்துள்ள சிக்கலான நிலவரத்தைப்பார்த்தால், அமைதியாக-ஒழுங்காக தேர்தல் நடைபெறுமா என்ற கேள்வியே பரவலாக எழுந்துள்ளது. அங்கு போட்டியிடும் அரசியற் கட்சிகள் வாக்கு வேட்டைக்குச் செல்வதைவிட அங்குள்ள படைகள். புலிகளை வேட்டையாட மும்முரமாக ஈடுபட்டிருப்பதையே காணக்கூடியதாகவிருக்கிறது.

வாக்காளர்களைச் சந்திப்பதற்காக வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று பார்க்கும் போதெல்லாம் பல வீடுகள் வெறிச்சோடிக் கிடப்பதைத்தான் காண்கிறார்கள். அந்த வீடுகளிலிருந்து மக்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களைத் தேடிச் சென்றிருக்கிறார்கள். இன்னும் பல இடங்களில் வீடுகளில் தங்கியிருப்போர் வாக்கு வேட்டைக்காகச் செல்லும் வேட்பாளர்களைக் கண்டு முகம் சுளித்து தங்கள் வெறுப்புக்களை அள்ளி வீசுகின்ற தன்மையையே காண்கிறார்கள்.

இரவும் பகலும் இடி போன்ற வெடியோசைகள் கேட்டவண்ணமிருக்கின்றன. புகை மண்டலங்கள் வானில் எழுந்து பகலையும் இரவாக்கிவிடுகின்றன. ஆங்காங்கே தீச்சுவாலைகள் எழுந்து சொத்துக்களைச் சாம்பலாக்கி விடுகின்றன. அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து ஒரு வேளை உணவுவை உண்ண முடியாத நிலையில் மக்கள் அல்லோல கல்லோலப்பட்ட வண்ணம் இருக்கின்றனர்.

எந்த இடத்தில் எந்தக் குண்டு வந்து வீழ்ந்து வெடிக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் நடுங்கிக் கொண்டிருக்கின்ற போது, அவர்கள் எந்த முகத்தைக் கொண்டு, வோட்டு வேட்டைக்காக வரும் வேட்பாளர்களைச் சந்திக்க முன்வருவார்கள்?

அரச தரப்பினர், யாழ் மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலைத் தடுத்து அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்காகவே மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகக் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் "உரிமைகள் யாவும் மறுக்கப்பட்ட நிலையில் உள்ள தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை இல்லாத நிலையில் தேர்தல் ஒரு கேடா" என்று கேட்டு ஈழ மக்களின் விடுதலை கிடைக்கும்வரை எமது போராட்டம் ஓயாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு போர்முனையில் வீராப்புடன் மோதுகின்றனர். பொதுத் தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன. அப்படியிருந்தும் அமைதியான சூழ்நிலை திரும்பாமல், தேர்தலை எவ்வாறு நகர்த்தப்போகிறார்கள்? வாக்காளர்கள் எவரும் தங்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி இருக்கின்றனர். பாதுகாப்பான இடங்களைத் தேடிக் குடிபெயர்ந்துள்ள அவர்களுடைய அன்றாட உணவுக்கே திண்டாட்டம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தேர்தலைப் பற்றி சிந்திக்க அவர்களால் எவ்வாறு முடியும்?

யாழ் மாவட்டத்தில் இம்முறை தேர்தல் முடிவுகளை தீர்மானிப்பதில் வோட்டுக்களை விட வேட்டுக்களே பெரும் பங்கினை வகிக்கப் போகிறது என்று கருதத் தோன்றுகிறது.

இந்த வேளையில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையம் விடுத்துள்ள ஓர் அறிக்கையை சீர்தூக்கிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். இம்மையத்தின் உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் சென்று ஆய்வுகள் பலவற்றை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் தெரிவித்துள்ள கருத்துப்படி பார்த்தால் யாழ்குடாநாட்டில் ஏறத்தாழ 612770 பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் யுத்த பீதியினால் இடம்பெயர்ந்துள்ளனர். இன்று இங்கு ஆக இரண்டு இலட்சம் வாக்காளர்கள் வரையே தங்கியிருப்பதாக அறியப்படுகிறது. இடம் பெயர்ந்த வாக்காளர்களை; போட்டியிடும் வேட்பாளர்கள் எவ்வாறு தேடிச்சென்று வாக்குச் சேகரிக்கப் போகிறார்கள்? இதுவே விசமிக்கத்தக்க ஒரு வினாவாக விளங்குகிறது. எனவே இத்தருணத்திலாவது யாழ்குடா நாட்டில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். அப்போது தான் வாக்குகளைக் கொண்டு தேர்தல் முடிவுகள் கணிக்கப்படும். இல்லையேல் துப்பாக்கி வேட்டுக்கள் தான் அரசோச்சப் போகின்றன.

# ஐரோப்பிய நாடுகளிலிருந்து தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவதேன்?

## கூட்டணி பிரமுகர் காரணமா?

'ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி' என்பதற்கொப்ப, தனது வேஷங்களை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் பிரதான தமிழ்க்கட்சி ஒன்றின் நடவடிக்கை பற்றி பலவிதமான கருத்துக்கள் வெளியாகியுள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் சென்ற தமிழ் இளைஞர்களை எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகோள் விடுத்து வருகின்றது. இக்கட்சியின் தூதுக்குழுவினர் அண்மையில் ஜெர்மனிக்கும் சென்று வந்துள்ளனர். ஆனால் கொழும்பிலுள்ள ஜெர்மன் நாட்டு தூதரகத்தில் சட்ட ஆலோசகராக விளங்கும் கூட்டணியின் பிரமுகர் ஒருவரே, இந்நாட்டின் தமிழர்களுக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை என்று அறிவுரை கூறி வருவதாக நம்பகமான வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளுக்கு அரசியல் தஞ்சம் கோரிச் சென்றிருந்த தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பலரைத் திரும்பியனுப்புவதற்கு சில நாடுகள் எத்தனித்து வருகின்றன. கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ஜெர்மன் நாட்டிலிருந்து சில இளைஞர்கள் அவர்களுடைய கோரிக்கை மறுக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பப்பியனுப்பட்டு கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதும் தெரிந்ததே. ஜெர்மனியில் இருந்து மேலும் பல தமிழ் இளைஞர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்படுவதற்கு அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்நாட்டில் இன மோதல்கள் தொடர்வதனால் அமைதியான சூழ்நிலை ஏற்படும் வரை எவரையும் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று இங்குள்ள தமிழ் அரசியல் கட்சிகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன.

மேற்கத்திய நாடுகளிலுள்ள பல தமிழ் இயக்கங்களும் அமைப்புகளும் அந்தந்த நாடுகளுக்கு வேண்டுகோள் விடுப்பதுடன் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றன.

இங்குள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு படி மேல் சென்று ஜெர்மன் நாட்டுக்கு ஒரு தூதுக் குழுவையே அனுப்பி வைத்தது. எக்காரணம் கொண்டும் இக்காலகட்டத்தில் இலங்கைக்கு எந்தவொரு அகதியையும் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று நேரடியாகவே வேண்டுகோள் விடுத்துத் திரும்பியிருக்கிறது. கூட்டணியினர் ஜெர்மன் நாடு சென்று வேண்டுகோள் விடுத்துத் திரும்பிய பின்னரும் கூட, தஞ்சம் கோரி மறுக்கப்பட்டுள்ள மற்றுமொரு குழுவினரை அங்கிருந்து திருப்பியனுப்பப் போவதாக ஜெர்மன் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

கூட்டணியினர் விடுத்த வேண்டுகோளுக்குக் கூட செவிசாய்க்காமல் ஜெர்மன் நாடு அகதிகளைத் திருப்பி அனுப்ப முன்வந்திருப்பதனால், இதற்கான அடிப்படைக் காரணம் இருக்கத்தானே செய்யும்.....!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய உறுப்பினரும் பொறுப்பான பதவியை வகுப்பவரும் சட்டதரணியுமாக விருப்பவரும் தான் இதற்குக் காரணம் என்று பலமான செய்தியொன்று கிளம்பியிருக்கிறது.

கொழும்பில் சட்டத்தரணியாக இருக்கும். இந்தப் பிரமுகர், இங்குள்ள ஜெர்மன் நாட்டுத் தூதரகத்தின் முக்கியமான சட்ட ஆலோசகராக இருந்து வருகிறார். அவர் அந்நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு வழங்கிவரும் ஆலோசனைகளின் அடிப்படையிலேயே ஜெர்மன் நாடு அங்குள்ள தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்ப முடிவு செய்திருக்க வேண்டும், என்று தகவல் வெளியாகியிருக்கிறது.

"இலங்கையில் தமிழர்களுக்கு எந்த விதமான ஆபத்துமில்லை, அவர்கள் சுதந்திரமாக இந்நாட்டில் சுற்றித்திரியலாம்" என்று அந்தச் சட்டத்தரணி ஜெர்மன் அரசாங்கத்திடம் ஆலோசனை கூறியிருப்பதனால் தான் அந்த நாட்டு அரசாங்கம் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது என்று நம்பகரமான தகவலொன்று முரசுக்கு எட்டியிருக்கிறது.

# பாதையின் சீர்கேடு

திருமலை செல்வநாயகபுரம் ஊடாக அன்பு வழிபுரத்தை இணைக்கும் பிரதான பாதை போக்குவரத்துக்கு உதவாத நிலையில் காணப்படுகிறது.

இரண்டு தமிழ்க் கிராமங்களை இணைக்கும் பாதை வருடக்கணக்காக ஏனோ தானோ என்று கவனிக்காமல் விடப்பட்டதனால் இன்று மக்கள் நடந்து கூடச் செல்ல முடியாத அளவுக்குச் சீர் கெட்டுக் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. பல வருடங்களுக்கு முன் இப்பாதையைத் திருத்தவெனக் கொண்டுவந்து குவிக்கப்பட்ட கற்குவியல்கள் படிப்படியாகத் திருப்பிக் கொண்டு செல்லப் பட்டுவிட்ட நிலையில் தங்கள் கிராமத்துப் பாதைக்கு விடிவே இல்லையா என்று இப்பகுதி மக்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள்.

இப்பகுதி வாழ் பிரமுகர்களும், அமைப்புகளும் இக் குறைபாடுபற்றிப் பலரிடம் ஏடுத்துக் கூறியும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் படவில்லையெனக் குறிப்பிடப்பட பிரமுகர் ஒருவர் முரசுமூலம் இப்பிரச்சனை வெளிக்கொணர்ந்து மக்களுக்கு உதவுங்கள் என்றும் முரசு நிருபரிடம் கேட்டுக் கொண்டார்.

# புலிகளின் பெயரால் போலி எச்சரிக்கை!

கிழக்கில் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்காக வாதப் பிரதிவாதங்கள், பழிவாங்கல்கள் மிகக் கடுமையாகச் சூடு பிடித்துள்ளன.

இதுவரை மூவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதனிடையே புலிகளின் பெயரைப் பயன்படுத்தி மட்டக்களப்பு, காத்தான்குடிப் பகுதியைச் சேர்ந்த அரச ஆதரவுக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு புலிகளின் கடிதத் தலைப்பில் எச்சரிக்கை அச்சுறுத்தல்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இக்கடிதம் எழுதப்பட்ட விதம் ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது, புலிகள் இயக்கத்தினரால் எழுதப்பட்டவை அல்ல என்பது தெட்டத் தெளிவாகியிருப்பது தெரியவருகிறது.

குறித்த முஸ்லிம் பகுதியின் போட்டி அரசியல் வேட்பாளர்களை அச்சுறுத்துவதற்காகவே மாற்று அரச ஆதரவுக் கட்சியினர் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

# மலையக மாணவர் பாதிக்கப்பட்டால் வடக்கு நிலைதான் ஏற்படும்!

(கண்டி நிருபர்)

"வட பிரதேச யாழ் மாணவர்களின் உயர்கல்விக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டதால் தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தினர். மலையகத்தில் வாழும் தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு பாதிப்புக்கள் ஏற்படுமாயின் இதே நிலை மலையகத்திலும் ஏற்படலாம்."

இப்படிக் கூறினார் மத்திய மாகாண தமிழ் கல்வி, இந்து கலாசார, கைத்தொழில், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வே.இராதாகிருஷ்ணன். மத்திய மாகாண சபையில் திரு.எச்.எம்.ஜயவீர பண்டாவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மத்திய மாகாண பாடசாலைகள் தொடர்பான முறையற்ற பலதரப்பட்ட விவகாரம் குறித்த தீர்மானம் தொடர்பான விவாதத்தில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

24ம் திகதி பல்லேகல மாகாண சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு திரு.மகிந்த அபயக்கோன் தலைமை தாங்கினார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, 442 தமிழ் பாடசாலைகள் மத்திய மாகாணத்தில் உள்ளன. இவற்றில் 5598 ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும். ஆனால் இருப்பவர்களோ 4305 பேர். இதனால் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை 1793 பேர் ஆவர். கண்டியில் உயர்கல்வி கற்கக்கூடிய தனியான பாடசாலை ஒன்றில்லை. குறிப்பாக விஞ்ஞானக் கல்வியில் உயர் கல்வி பெற ஒரு பாடசாலையாவது இல்லை. இந்தக் குறைபாடுகளை நாம் அடிக்கடி சுட்டிக்காட்டியே வந்திருக்கிறோம். விஞ்ஞானக்கல்வியைக் கற்க கண்டியில் தமிழ் சிங்கள மொழி மூலப் பாடசாலை ஒன்றில் இருவகுப்புக்களை ஆரம்பிக்க உதவுமாறு அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவையும் கேட்டோம். அப்பாடசாலையின் பெற்றோர் விரும்பாததை அடுத்து அந்த முயற்சியும் கைவிடப்பட்டது. இது எப்படி என்றால் வடக்கில் தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு விதிக்கப்பட்ட தடைக்கல் போல் தான் அமைகின்றது. எனவே இதன் பிரதிபலிப்பாக வடக்கே ஏற்பட்ட நிலையே மலையக மாணவர்கள் மத்தியிலும் துளிர்விடக் கூடாது." இப்படி அவர் மேலும் கூறினார்.

அமைச்சர் இராதாகிருஷ்ணனின் கடமைத்திறன் குறித்து முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் நுவரேலிய மாவட்ட உறுப்பினர் திரு.ஏச்.ஆர்.பியதாச உட்பட பலர் புகழாரம் சூட்டினர்.

# வீதித் தடைகள் நீக்கம்!

1990ஆம் ஆண்டு முதல் பொதுப் போக்குவரத்திற்கு தடை செய்யப் பட்டிருந்த மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலையில் வெலிக்கந்தையில் ஏற்படுத்தப் பட்டிருந்த வீதித் தடை நீக்கப்பட்டுள்ளது.

இதனால் வெலிக்கந்தைச் சந்தைப் பகுதிக்கூடாகச் சுற்றி வளைத்துச் செல்ல வேண்டியிருந்த அசௌகரியம் நீங்கியுள்ளது.

இதேவேளை, அதே நெடுஞ்சாலையில் பிள்ளையாரடி எனுமிடத்திலிருந்த பொலிஸாரும் விலக்கப் பட்டுள்ளதால் அவ்விடத்திலிருந்த வீதித் தடையும் நீங்கியுள்ளது.

மட்டக்களப்புப் பகுதியில் இராணுவ முகாம்களுக்கு முன்னால் வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த திட்டிகளும் சமீப சில நாட்களுக்கு முன்னர் அகற்றப்பட்டுள்ளன.

# சுவரொட்டிகளை ஒட்டியவருக்கு பனை மட்டை அடி?

தேசிய ஐக்கிய முன்னணி என்று தமது கட்சிப் பெயரை மாற்றிக் கொண்டு தேர்தலில் போட்டியிடுகிறது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் ஆளுகையின் கீழுள்ள சில பகுதிகளுக்கு பிரதியமைச்சர் ஒருவரின் முயற்சியில் மின்சாரம் வழங்கப்பட்டது தெரிந்ததே.

அதனால் அப்பகுதியில் பிரதியமைச்சரைத் தாங்கிய சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு சிலர் முயற்சி எடுத்தனராம்.

இதனையறிந்த புலிகள் சம்பந்தப் பட்ட நபர்களுக்கு எச்சரிக்கை விடுத்ததுடன் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தேர்தல் பிரச்சாரங்களுக்குப் பாவிக்க வேண்டாமென்று கூறியுள்ளனர். அத்தோடு சம்பந்தப்பட்ட நபர்களுக்குப் பனைமட்டை அடி கொடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் இந்தத் தேர்தல்களில் நம்பிக்கை வைக்கவில்லை என்பதையே அவர்களது செயற்பாடுகள் தெளிவுபடுத்துவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# அரசியல் ஆரவாரமில்லாத அமைதியான ஊர்கள்!

தேர்தல் என்றாலே வன்முறை, அமளிதுமளி என்று மாறிவிட்ட இந்ததறுவாயில் இலங்கையில் விசித்திரமான ஊராக மட்டக்களப்பு-ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதி காணப்படுகிறது.

ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லிம் பகுதிகளில் இதுவரை எந்தவொரு அரசியல்வாதியினதும் சுவரொட்டிகளோ, கட் அவுட்களோ, கட்சிப் பதாகைகளோ, கொடிகளோ காணப்படவில்லை. அந்த வகையில் இந்த ஊர்கள் சூழல் அசுத்தமின்றி அழகாகவும் அமைதியாகவும் காணப்படுகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த வரலாறு தொடக்கம் இந்த ஊர்களிலிருந்து எந்தவொரு அரசியல் பிரதிநிதியும் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லை. அதனால் உள்ளூர் அரசியல் வாதிகளைத் தவிர வேறெவரையும் இம்முறை இவ்வூரில் வேறு பிரதேச அரசியல்வாதிகள் யாருக்கும். ஒரே கட்சியைச் சேர்ந்தவராயினும் ஆதரவு தெரிவிப்பதில்லை என்று இவ்வூர் மக்கள் முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த முடிவினை அடுத்து வெளியூர்களைச் சேர்ந்த எந்த அரசியல்வாதியினதும் சுவரொட்டிகளோ, படங்களோ, கட் அவுட்களோ, பதாகைகளோ, கொடிகளோ, கூட்டங்களோ காணப்படவில்லை.

சென்ற முறைப் பொதுத் தேர்தலின் போது ஓட்டமாவடி, ஏறாவூர் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இரண்டாண்டுகள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியிருந்ததும் பின்னர் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# அரிசி ஆலை உரிமையாளர் சுட்டுக் கொலை!

கல்முனை-சாய்ந்தமருதைச் சேர்ந்த அரிசி ஆலை ஒன்றின் உரிமையாளரான முஸ்லிம் நபர் 09ம் திகதி நள்ளிரவு 1.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

எம்.வை.எம்.முபாறக் (34) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவராவார்.

அரிசி ஆலை முதலாளிகளுக்கிடையே ஏற்பட்ட சச்சரவே இந்தக் கொலையின் பின்னணியாக இருக்கக் கூடுமென்று ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

கொலையாளி இன்னாரென இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

# "அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்துக!" டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

யாழ்குடா நாட்டில் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்கள் மற்றும் வைத்திய சாலை, போன்ற பகுதியில் விமானங்கள் தாழப் பறந்து செல்வதற்கு, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் அவர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் "தமிழ் மக்களுக்கு நிரந்தரமான கௌரவமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும் நடைமுறைச் சாத்தியமான வழியில் யுத்தத்தை நிறுத்தி மக்களின் இயல்பு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் நாம் பாடுபட்டு வருகின்றோம். இந்த வேளையில் தேவையற்ற யுத்தத்தில் இரு தரப்பினரும் ஈடுபட்டு உயிர்களைப் பலி கொடுப்பதை வெறுக்கும் அதே வேளை எமது மக்களை நிம்மதியற்ற அவல வாழ்வுக்குத் தள்ளிவிடுகின்றது. உடனடியாக இந்த அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்தி இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்ப பாதிக்கப்பட்ட மக்களும் எம்மோடு சேர்ந்து ஆட்சேபத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

விமானங்கள் தாழப்பறந்தால் ஏற்படும் நிலமைகள் குறித்து விமானப்படைத் தளபதி ஜெயலத் ஜெயக் கொடியுடன் நான் பேச்சு நடத்தினேன். மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் இனிமேல் தமது நடவடிக்கைகளை மாற்றியமைப்பதாக உறுதியளித்துள்ளார் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாவதுபிறந்தநாள் வாழ்த்து



கரவெட்டி மேற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அருந்தவராஜா (சுவம்) விஜயசிறி (விஜயா) தம்பதிகளின் செல்வப் புதல்வன் சந்தோஷ் தனது முதலாவது பிறந்தநாளை 17.09.2000 ஞாயிற்றுக்கிழமை அன்று சுவிஸில் St.Margarethen என்னும் இடத்தில் வெகு விமர்சையாக கொண்டாடு கிறார். சந்தோஷ் குட்டியை அன்பு அப்பா, அம்மா, சித்தப்பா,

**அருந்தவராஜா சந்தோஷ் | 17.09.2000**

குவேந்திரன்,கொலண்டில் இருக்கும் மகேந்திரன் சித்தப்பா, விமலா அத்தை, பெரியமாமா சந்திரன், சின்ன மாமாராசன், தீசன் மாமா, ஜெகன் மாமா, குகன் மாமா, பிரசா சித்தி, பெரிய அத்தை, நந்தா, உதயா அத்தை, சூரி அத்தை, அத்தான்மார், சதுர்ஷன், விதுர்ஷன், ஜெயதீவன், பிரதீபன், சுவிஸில் இருக்கும் சுதா மாமா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணன்மார், மாமாமார், அத்தைமார், அத்தான்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவரை பிள்ளையார் அம்மன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: ஏ. அருந்தவராஜா, சுவிஸ். T.P. 0041,717446 828


உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984


# 31ம் நாள் நினைவு அஞ்சலி



மலர்வு
25.10.1965

உதிர்வு
09.08.2000

**திருமதி.பத்மாவதி சிவகுமாரன்**

வாழ்க்கையில் வசந்தமென
வாசல் தேடி வந்தவளே
வாழ்ந்தது போதுமென்றோ
வானுலகு சென்று விட்டாய்
உற்ற துணை பெற்ற அன்னை
உடன் பிறந்தோர் ஏங்கிநிற்க
நீ சென்ற மாயமென்ன?
நீங்காதம்மா உன் நினைவலைகள்
எம் நெஞ்சைவிட்டு என்றென்றும்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும் கணவன், மகள், தாயார், மாமாமார்கள், சகோதரர்கள், மைத்துனர்மார், மைத்துனி, பெறாமக்கள், மருமக்கள்.

தகவல்: எஸ்.பகீரதன்-இலண்டன்.


**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

**SHAKTHY SARAVANA,**
48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை

"உங்களது பெரிய பிரச்சனை, நடுத்தர பிரச்சனை சின்னப் பிரச்சனை. நம்பிக்கையாக உங்களுக்கு செய்து தரப்படும். 100% உத்தரவாதம். உங்கள் பிரச்சனைக்குரிய விடை உடனடியாக. உங்கள் பிரச்சனை எதுவாகினும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் செய்து தரப்படும். பெண் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, வாழ்க்கையில் வெற்றி, பணக்காரனாக வேண்டுமா? தொடர்பு கொள்ளுங்கள்."

தொடர்பு கொள்ளும்இடம்:

விலாசம் :
PR.DANSOKHO ALI, 55. Rue des Poissonniers,
75018 Paris, France.
தொலைபேசி-0142552036



**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இந் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

**நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா? அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரால் இருப்பதால் கவலைப்படு கிறீர்களா? கவலை வேண்டாம்!**

ஒவ்வொரு மருந்தும் பல மருத்துவ ஆராய்ச்சிகளிற்கும் வைத்திய பரிசோதனைகளிற்கும் உட்படுத்தப் பட்டு, அது பூரண திருப்தியளிக்கும் பட்சத்திலேயே பாவனைக்கு உகந்தது என அங்கீககரிக்கப்படுகிறது. Baraka கருஞ்சீரக எண்ணெயும் மேலுள்ள படிகளைத் தாண்டியதே.

நவீன மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் கருஞ்சீரகமானது ஒமேகா-3, கொழுப்பமிலம், புரதம், கனியுப்பு, விற்றமின், போன்றவற்றைக் கொண்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளதோடு அது நாளாந்த பாவனைக்கு உகந்தது எனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மேலும் நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்எனவும்நிருபணமாகியுள்ளது.

- ✓ புரதம்
- ✓ விற்றமின்கள்
- ✓ கனியுப்புகள்




ஆயுர் வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது

நாடு முழுவதிலும் உள்ள எல்லா பாமசிகளிலும் கிடைக்கிறது.

*Baraka*

**பாவித்து உங்களது வாழ்வை சுகமாக கழியுங்கள்.**

- *உணவு நிகரியாகவோ*
- *நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கவோ*
- *குருதிச் சீனியை கட்டுப் படுத்தவோ*
- *கொலஸ்ரோலின் அளவைக்கட்டுப்படுத்தவோ பாவிக்கலாம்.*

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேசிய மருத்துவப்பிரிவினால் (IIM) நடாத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் இருந்து கருஞ்சீரத எண்ணெய்யை தொடர்ந்து பாவிப்பதன மூலம் இரத்தத்திலுள்ள சீனியின் அளவையும், கொலஸ்ரோலின் அளவையும் கட்டுப்படுத்த முடியும் என நிரூபிக்கப்பட்டு ள்ளது.

EXPA LANKA

இன்னும் **Baraka** ஆனது சுகாதார, சுதேசிய வைத்திய அமைச்சின் ஆயுள்வேத மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு பல வைத்தியர் களினாலும் சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது.

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,*
Customer Care, Baraka,No 11A, Mile Post Avenue, Colombo - 03.


# வயதறியா மரம்



மன்னார் பள்ளிமுனையில் வீதியோரமாகப் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் இம் மரம் 'பெருக்க மரம்' என்றழைக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் BAOBAB என்று கூறுகிறார்கள். மாந்தை துறைமுகம் பிரபலமாக இருந்த காலத்தில் வந்த அராபிய வியாபாரிகளால் இம் மரம் நடப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இம் மரத்தின் விதைகள் அராபியர்களின் குதிரைகளுக்கு உணவாகக் கொடுக்கப்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

படமும் தகவலும்: டனிஸ்ரன்-பள்ளிமுனை-மன்னார்.

# 1வது பிறந்த நாள் வாழ்த்து

**செல்வன் கதுர்ஷன்**

**05.09.2000**



நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த நவீந்திரராசா-இந்திராணி தம்பதிகளின் புதல்வன் கதுர்ஷன் 1வது பிறந்த நாளை 5.09.2000ல் அலுத்மாவத்த 301/18B இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடினார். டோகாவில் இருக்கும் அப்பா, பெரியப்பா குடும்பம், ஜெர்மன் பெரியப்பா தவராசா குடும்பம் கொழும்பு, பெரியப்பா கிருஷ்ணமூர்த்தி குடும்பம் திருகோணமலை, லீலாவதி குடும்பத்தினர், கணேசமூர்த்தி குடும்பத்தினர் (பிரான்ஸ்), கருணாகரன் குடும்பத்தினர் (பிரான்ஸ்), அத்தான் (பிரான்ஸ்), கருணாவதி குடும்பத்தினர் (ஜெர்மனி) அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் நாச்சியம்மாள் அருள் பெற்று பலகலைகளும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்.

தகவல் : இசக்கிமுத்து தம்பதியினர். கொழும்பு 15.


**மனோதத்துவ வைத்தியம்**

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் செப்டெம்பர் 24 முதல் 30 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில், செப்டெம்ர் 09,10 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் அறிவிக்கப்படும் திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNIINN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

**தெய்வீக மருத்துவம்**

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SERVICES

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல்,கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலு சோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி, மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

**தேர்தல் என்று வந்துவிட்டால் கூடவே வன்முறைகளும் தலை காட்டும் வாய்வீச்சுக்களும் வாள் வீச்சுக்களைப்போல் எங்கும் பரந்துபடும்.**

**1994ம் ஆண்டு இடம் பெற்ற பொதுத் தேர்தலின் நடவடிக்கைகள் தொடர்பாக அப்போது 'நாரதர்' வழங்கிய எக்ஸ்ரே ரிப்போர்ட்டின் ஒரு பகுதியை இங்கு தருகிறோம். அன்றைய தேர்தலுக்கு இந்த ரிப்போர்ட் எவ்வாறு பொருத்தமாக அமைந்ததோ அதே போன்று இம்முறை தேர்தலையொட்டி இடம் பெறும் சம்பவங்களுக்கும் பொருத்தமாக உள்ளது என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வீர்கள்.**




அதிர்ச்சியாக இருந்தாலும்அதுதான் உண்மை. கடந்த தேர்தல்களைவிட இம்முறைதான் வன்முறை அதிகம்.

வன்முறைக்கு காரணம் யார் என்பதில் ஒவ்வொரு கட்சியும் மறுதரப் பின்மீது குற்றம் சாட்டிவிட்டு தாம் மட்டும் தப்பிக்கொள்ளப் பார்க்கின்றன.

பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வந்தவுடன் வன்முறையும் பிடறியை சிலிர்த்தபடி எழுந்துவிட்டது.

தெற்கில் தான் வன்முறைகள் அதிகம் தலைவிரித்தாடின.

தேர்தலுக்கு முன்புவரை வடக்கு-கிழக்குதான் இலங்கையில் வன்முறை நடக்கும் பகுதிகளாக சிவப்பு மையினால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நிலமை அடியோடு மாறியது.

தென்னிலங்கையில் வன்முறை அமோகமாக அரங்கேறி உயிரிழப்புக்களையும் அறிவிக்கத் தொடங்கியது.

17 வருட பொறுமை உடைந்து, சந்திரிக்கா அலை தந்த உற்சாகத்தில் எதிரணிகள் ஒரு புறம்;

17 வருடகால ஆட்சியில் பெற்ற சுகங்களையும் சலுகைகளையும் இழக்க விரும்பாத ஐ.தே.கட்சி மறுபுறம்;

இரு அணிகளும் சந்தித்துக் கொள்ளும் போது பூக்களுக்குப் பதில் பொறிகளே பறந்தன.

பொலிசாருக்கும் தலைவலி. ஆளும் கட்சி உறுப்பினர்களை பிடித்து உள்ளே வேண்டிய கட்டாயம். இந்நிலையில் மேலும்அடிபாடுகளில் ஈடுபட்டால் பதில் சொல்லவே முடியாமல் போய்விடும் என்று நம்அமைப்புகளுக்கு தெரியாமலா போயிருக்கும்....?

ஆனால் - கிழக்கில் - குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பகுதிகளில் இம்முறை வன்முறையின் ஆதிக்கம் காணப்பட்டது.

முஸ்லிம் காங்கிரசும், ஐ.தே.கட்சியும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டபோதும் இரு கட்சிகளுமே வன்முறையும் தேவை என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொண்டது தான் உண்மை நிலவரம்.

வன்முறைகளால் தாம் பாதிக்கப் படாத போது பொதுமக்களில் சிலர் வன்முறைப் பலம் கொண்டவர்களை பிரமிப்போடு பாராட்டுவதும் வன்முறை அதிகரிக்க காரணமாகிறது. அதே ஆட்கள் தாம் பாதிக்கப்படும்போதுதான் வன்முறையின் கொடுமையை உணர்ந்து காலம் கடந்த ஞானம் பெறுவார்கள்.

இம்முறை தமிழ் கட்சிகள் இடைக் கிடையே வீர முழக்கங்களை எழுப் பியதை அவதானிக்க முடிந்தது.

தமிழ் மண், தமிழர் தாயகம் ஆண்ட பரம்பரை, சேர-சோழ-பண்டியர் என்று 77 பொதுத் தேர்தலில் கூட்டணி மேடைகளில் ஒலித்த அதே முழக்கங்கள் 94லும் கேட்டுள்ளன.

அன்றைய பொறிகள்.

நாம் யாரையும் படிப்பைக் கைவிட்டு வருமாறு கூறவில்லை என்று கூட்டணித் தலைவர்கள் பேசுவது சட்டவாதத்திற்கு சரியாகலாமே தவிர மனச் சாட்சிக்கு முன் சரிப்படாது.

"பத்துத் தடவை பாடை வராது. பதுங்கிப் பாயும் புலியே தமிழா, செத்து மடிதல் ஒரு தரமன்றோ, சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா" புலிகள் இயக்கம் உருவாக முன்னரே கூட்டணியின் இளைஞர் பேரவைத் தூண்களில் ஒருவராக இருந்த காசி ஆனந்தன் எழுதிய கவிதைதான் அது.

கூட்டணி மேடைகளில் அவ்வாறான கவிதை முழக்கங்கள் கேட்டபோது தலைவர்கள் தடுக்கவில்லை. சிரித்தபடி இரசித்தார்கள்.

"செத்துமடிதல் ஒருதரம். சிரித்தபடி வா" என்று அழைத்துவிட்டு இப்போது "நாம் எங்கே படிப்பை விட்டு வரச் சொன்னோம்?" என்று சட்ட ரீதியாகப் பேசுவது பொறுப்பில்லாத பேச்சாகும்.

"படித்துவிட்டு வாடா தமிழா" யார் தான் சொன்னார்கள்? ஒருவரும் அப்படிச் சொல்லவில்லை.

கூட்டணித் தலைவர்கள் தம் பொறுப்பை தட்டிக்கழிக்க தப்பிக் கொள்ளும் பேச்சுக்களை பேசும் நேரத்தில், கூட்டணி மட்டுமே இளைஞர்களை



# வன்முறை + வதந்தி = தற்கால அரசியல்

# தமிழ்க்கட்சிகளின் முழக்கங்கள்

போடுவதும் சங்கடமான விசயம்.

அடுத்து யார் ஆட்சிக்கு வரப் போகிறார்கள் என்பதே குழப்பமாக இருந்தமையால் எதிரணி முக்கியஸ்தர்கள் மீது கை வைக்கவும் யோசிக்க வேண்டிய நிலை.

இரு தரப்புமே பொலிசார் மீது அதிருப்தி தெரிவித்துக்கொண்டது தான் இன்னும் கொடுமை.

"அடுத்து ஆட்சிக்கு வரப்போவது நாம்தான் என்பது நினைவிலிருக் கட்டும்!" என்று எதிரணி மேடைகளில் பேசப்பட்டது. பாரபட்சமாக நடந்து கொள்ளும் பொலிஸ் அதிகாரிகளை தாம் வந்தால் பதவி நீக்கம் செய்யப் போவதாக எதிரணித் தலைவர்கள் பகிரங்கமாகவே கூறிக்கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து அதிகார பலத்துடன் வரும் வன் முறையை தடுக்க, தம்மிடமும் அதிகாரம் வரும் என்ற பேச்சுத்தான் எதிரணிக்கு தற்காப்பு ஆயுதமாக மாறியது.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுஜன முன்னணியையும்,

பொதுஜன முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியையும் மாறி மாறி குற்றம் சாட்டிய போதும், இரண்டு அணியுமே தமக்குள்ளிருந்த வன்முறை பலத்தை முடியுமானவரை பயன்படுத்தியே உள்ளன.

வன்முறை கூடாது. அரசியலில் நாகரிகம் காக்கப்படவேண்டும். என்பதெல்லாம் சம்பிரதாயமான பேச்சுக்களாக மாறியுள்ளன.

இரு ஜென்ம விரோதிகள் எங்காவது பொது நிகழ்ச்சிகளில் சந்தித்தால் ஒப்புக்காக சிரிப்பது போலத்தான், அரசியல்வாதிகள் மேடையில் பேசும் வன்முறை கூடாது என்ற பேச்சும் மாறியிருக்கிறது.

"நாங்கள் மட்டும் அடிப்போம். நீ வாங்கிக்கொள்ள வேண்டும். திருப்பியடிக்கக் கூடாது. அப்படி அடித்தால் வன்முறைக்கு நீயே காரணம்" என்பது போலத்தான் ஒவ்வொரு அணியும் நடந்து கொள்கின்றன.

வடக்கு-கிழக்கை என்ன செய்யப் போகிறீர்கள்? பிரிக்காமல் விட்டுவிடாதீர்கள் என்று அக்கறையோடு பேசிய பௌத்த பீடாதிபதிகள்கூட பௌத்த தர்மத்திற்கு விரோதமான வன்முறை பற்றி பெரிதாக வருத்தம் தெரிவிக்க வில்லை.

இன்றைய அரசியலுக்கு வன்முறை என்பது அத்தியாவசியப் பாவனைப் பொருள்.

அரசியல் கட்சிகள் தொண்டர் பலத்தை விட குண்டர்பலத்தையே தேர்தல் காலங்களில் விரும்புகின்றன.

அரசியல் என்பதும் ஒரு தொழிலாக மாறிவருவதால் எப்படியாவது வெற்றி பெற்றேயாக வேண்டும் என்ற வேகமும் அரசியல்வாதிகளிடம் காணப்படுகிறது.

போட்ட மூலதனத்தை திருப்பி எடுத்துவிட வேண்டும். திருப்பி எடுக்கும்போது இலாபத்துடன் எடுக்க வேண்டும். அதற்காக செய்யப்படும் முயற்சிகளில் நேர்மையை எதிர்பார்ப்பது திருவாளர் பொதுஜனத்தின் தவறோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இம்முறை தமிழர் பகுதிகளில் தேர்தல் கால வன்முறைகள் அதிகமில்லை என்பது ஒரு ஆறுதல்.

அடிபட்டுக்கொண்டால் இருக்கும் ஆதரவும் இல்லாமல் போய்விடுமோ என்று சில அமைப்புகளுக்கு இருந்த பயமும் வன்முறை தலைவிரித்தாடாமைக்கு காரணம் எனலாம்.

ஏற்கனவே- ஆயுத அத்துமீறல்கள், அராஜகம், அடாவடித்தனம் பற்றிய மக்களது வெறுப்புக்கு பதில் சொல்ல

இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளில் சமஷ்டி தீர்வு பற்றிய பேச்சுக்களை கேட்க முடிந்தது.

அடுத்த தேர்தல் தமிழீழத்தில் என்று 77ல் வாக்கு வாங்கிய கூட்டணி 94ல் வந்து சமஷ்டி பற்றிப் பேசுகிறது.

ஆயுதம் ஏந்திவிட்டு இப்போது ஜனநாயக அரசியலுக்கு வந்துள்ள அமைப்புகள் சில இம்முறை வீர முழக்கம் எழுப்பி வாக்குக் கேட்டுள்ளன.

நமது அரசியலில் பேச்சுக்கும்-செயலுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை.

அட, முன்னர் இப்படியெல்லாம் பேசினோமோ மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்அரசியல்வாதிகள் யோசிப்பதும் இல்லை.

தமிழரசுக் கட்சி காலத்தில் சமஷ்டி கேட்டுப் பின்னர் கூட்டணியாகித் தமிழீழம் கேட்டு, எதற்கும் தருவதை வாங்குவோம் என்று மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்று, பின்னர் மாகாண சபையும் பெற்று இப்போது மீண்டும் சமஷ்டியில் வந்து நிற்கிறோம்.

இன்று சமஷ்டி கோருவோர் தமிழீழத்துக்காக அன்று பேசிய பேச்சுக்களும் தூண்டிவிட்ட உணர்ச்சிகளுமே இன்றைய காட்டுத் தீக்கான

## -நாரதர்-

நடுவீதிக்கு கொண்டுவந்து நிறுத்தியது போன்று சில இயக்கத் தலைவர்கள் பேசுவதும் ஏற்கப்படக்கூடிய ஒன்றல்ல.

ஆயுதப் பயிற்சி என்றுகூறி பள்ளிக் கூடத்தில் இருந்து நேரடியாக தம் முகாமுக்கு ஆள்பிடித்துச் சென்றதில் சகல இயக்கங்களுக்கும் பங்குண்டு.

பின்னர் பாதைமாறி, இன்று பாராளுமன்றப் பாதைக்கு திரும்பிவந்து நின்றுகொண்டு கூட்டணியை மட்டும் குறை கூறுவது அர்த்தமில்லாதது.

பாராளுமன்றத்திற்கு போகவேண்டாம் என்று கூட்டணித் தலைவர்களை தடுத்த இயக்கங்கள் இப்போது தாம் அங்கு போவதை கூட்டணி தடுக்கிறதே என்று கோபப்படுகிறார்கள்.

ஆக மொத்தத்தில் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்தாயிற்று.

அப்படியிருந்தும்கூட விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்று சொல்வதுமாதிரி ஒருவரை ஒருவர் முழக்கங்களால் திட்டித் தீர்க்கிறார்கள். □

# செய்திச் சிதறல்

☆ **பொ**துத் தேர்தலையொட்டிய அசம்பாவிதங்களில் இதுவரை (11.09.2000 இன்றுடன்) எட்டுப்பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

☆ **பொ**துசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மூன்று பேரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மூன்று பேரும், ஜே.வி.பி.யைச் சேர்ந்த ஒருவரும், புளொட் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவருமாக் மொத்தம் எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

☆ **ம**ட்டக்களப்பு- மாவடிவேம்பு கிராமத்தில் வீட்டுக்கு வீடு தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்த புளொட் இயக்க உறுப்பினர்கள் இருவர் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். லிங்கம் என்றழைக்கப்படும் சி.சுந்தரலிங்கம் (27) என்ற குடும்பஸ்தரே கொல்லப்பட்ட நபராவார். இச்சம்பவம் கடந்த 11ம் திகதி பி.ப. 1.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

☆ **பொ**துதேர்தலுக்காக வினியோகிக்கப்படும் வாக்காளர் அட்டைகளில் இடம் பெற்று வந்த மோசடிகளைக் களையும் நோக்குடன் அட்டைகளின் மீது தனியான ஸ்டிக்கர்களை ஒட்டுவதென தேர்தல்த் திணைக்களம் எடுத்த முயற்சி பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. தேர்தல் ஆணையாளர் இந்த ஸ்டிக்கர்களை அச்சிடுவதற்கு ஒரு தனியார் அச்சகத்திடம் ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த அச்சக உரிமையாளரும் பங்காளியும் தமிழர்கள். தேர்தல் மோசடியொன்றுக்கான நடவடிக்கைகள் குறிப்பிட்ட அந்த அச்சகத்தில் இடம் பெறுவதாக பொலிஸ் குற்றப்புலனாய்வுத் துறையினர் அச்சகத்திற்குள் புகுந்தனர். இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையினால் பல சிக்கல்கள் எழுந்தன. அச்சிடப்பட்ட ஸ்டிக்கர்களும் ஏனைய ஆவணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு விசாரணைகள் தொடர்ந்தன.

☆ **தே**ர்தல் மோசடிகளைத் தடுப்பதற்காகவே தான் ஸ்டிக்கர்களைத் தயாரிப்பதற்கு அனுமதி கொடுத்ததாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். இந்தப் பணியை அரசாங்க அச்சகத்திடம் ஒப்படைக்காமல் தனி நபர்களிடம் ஏன் ஒப்படைக்க வேண்டும் என்று சிலர் தற்போது புயலைக் கிளப்பியிருக்கின்றனர். தேர்தல் நடை பெறுவதற்கு முன்னரே தேர்தல் ஆணையாளரை அரசியல் கட்சிகள் பதவியிலிருந்து இறக்கி விடுமோ என்ற ஐயப்பாடு தற்போது நிலவிவருகிறது.

☆ **இ**ம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வந்த அரசியற் கட்சிகள் தத்தமது அனுமதியில்லாமலே அவர்களுடைய பெயர்களையும் வேட்பாளர் பட்டியலில் இணைத்திருப்பதாகக் கூறி பலர் தன்நிலை விளக்கமளித்து விலகிக் கொண்டு விட்டதாக அறிக்கைகள் விட்டவண்ணமுள்ளன. அரசியற் கட்சிகளுக்கு இது ஒரு பெரும் தலையிடியாக விளங்குகிறது.

☆ **தே**ர்தலில் போட்டியிட முன் வந்த பலருக்கு அனாமதேய எச்சரிக்கைக் கடிதங்கள் வந்துள்ளன. அவர்களுடைய எச்சரிக்கையை மீறி தேர்தலில் குதித்துள்ள சிலர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வருகின்றனர்.

☆ **தி**ருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் ஆயுதப்படையினருக்குமிடையில் சிற்சில இடங்களில் மோதல்கள் ஏற்பட்ட வண்ணமுள்ளன, கிண்ணியாவிலுள்ள சூரன்கண் என்ற இடத்தில் இடம் பெற்ற மோதலில் படையினர் மூவர் கொல்லப்பட்டனர். நால்வர் காயங்களுக்குள்ளாயினர். புலிகள் தரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. புல்மோட்டையில் பொலிஸார் இருவரும் குடியானவர் ஒருவரும் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

☆ **ம**ட்டக்களப்பு ஏறாவூருக்கு அருகிலுள்ள மாவடிவேம்பு என்ற இடத்தில் புளொட் உறுப்பினர் ஒருவரை புலிகளின் பிஸ்டல் குழுவினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

☆ **ம**ட்டக்களப்பு படுவான் கரைப் பிரதேசத்திலுள்ள வவுணதீவு பிரதேச செயலகத்திற்கருகில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் தாக்கியதில் படையினர் மூவர் பலியாயினர். அப்பாவிப் பொது மகன் ஒருவரும் இதில் கொல்லப்பட்டுள்ளார். □

# அண்டை மண்டலத்தில்....

**தமிழ் நாடு மற்றும் கர்நாடக மாநில அரசுகளை மட்டுமல்லாமல் இந்திய அரசாங்கத்தையே ஆட்டிப்படைக்கும் ஒரு பிரமுக ராக மாறிவிட்ட சந்தனக் கடத்தல் வீரப்பனை அவனுடைய ராஜ்ஜியமான அடர்ந்த காடுகளுக்குள் பல தடவைகள் சென்று பார்த்துவிட்டு வரும் தமிழ்நாட்டு அரசின் 'தூதுவ'னாகக் கருதப்படும் நக்கீரன் கோபால் தரும் விவரணம் இது. முன்பிருந்ததைவிட கைதேர்ந்த அனுபவமுள்ள அரசியவல்வாதிபோல் காணப்படும் வீரப்பனுடைய மாற்றம் நக்கீரன் கோபாலையே திகைப்படைய வைத்திருக்கிறது.**

## வீரப்பன் போக்கில் ஏற்பட்ட வியத்தகு மாற்றம்!

மாற்றங்கள் எப்போதும் எதிலும் நிகழ்ந்துகொண்டு தானிருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்ததுதான். ஆனாலும், மூன்று வருடங்களுக்குள் வீரப்பன் இப்படி மாறியிருப்பான் என்பதை கொஞ்சமும் நான் எதிர்பார்க்கவில்லை.

என்னை எதிர்கொண்டு வரவேற்றதிலிருந்து, நடை, உடை, பாவனை, உச்சரிப்பு, வார்த்தைப் பிரயோகம் அத்தனையிலும் மிகப்பெரிய மாற்றத்திற்கு ஆளாகியிருந்தான் வீரப்பன்.

"நாட்டுமக்களுக்கு என் வணக்கம்! கடவுளே! ஆண்டவா! முருகா! நான் வீரப்பன் பேசுகிறேன்..... அதாவது...." என்று எப்போதும் தனது பேட்டியைத் துவக்கும் வீரப்பன். இப்போது சுத்தமாக எழுதப்பட்ட காகிதங்களோடு, பேட்டிக்குத் தயாரானான். "ரிக்கார்ட் பூர்வமதாக எழுதிக்கொண்டு வந்திருக்கிறேன். அதை வாசிக்கிறேன்," என்று மெல்லிய குரலில் கூறிவிட்டு, 'நிமிர்ந்து உட் கார்ந்து, "மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய என் தமிழ்நாட்டு மக்களுக்கு வணக் கம்! இதுவரையில் நீங்கள் பார்த்த வீரப் பன் வேறு; இப்போது நீங்கள் பார்க்கும் வீரப்பன் வேறு. இப்போது நான் புதிய பாதையில் அடியெடுத்து வைத்துள்ளேன்!" என்ற மேடைத்தமிழோடு தனது பேட்டியைத் துவக்கி, எனது வியப்புக்கு முற்றுப்புள்ளி வைத் தான்.

"பிணைக்கைதிகளாக நீங்கள் கடத்தி வைத்திருக்கும் டாக்டர் ராஜ்குமாரையும் மற்ற மூவரையும் விடுவிக்க, நீங்கள் நிபந்தனைகளாக விதித்துள்ள 10 கோரிக்கைகளையும் இரண்டு அரசாங்கங்களும் பரிசீலித்து ஏற்கத்தக்க நிவாரண பதில்களை அளித்துள்ளன. அந்தப் பதில்களை நீங்கள் வானொலி மூலம் கேட்டிருப்பீர்கள்!" என்றபடி; அரசுகள் கொடுத்த ஒவ்வொரு பதிலுக்கும் வீரப்பன் புரிந்து ஏற்றுக் கொள்ளத்தக்க விளக்கங்களை விரிவாக கூறத்தொடங்கினேன்.

காவிரி நீர்ப்பிரச்சனை பற்றி தெளிவாகவே வீரப்பனுக்கு விளக்கினேன். இதற்கு முன்பு ஒரே கூட்டணியைச் சேர்ந்த கட்சிகள் இரண்டு மாநிலங்களிலும் ஆட்சி செய்தபோதிலும் காவிரி நீர் பங்கீட்டில் முரண்பட்டு நின்றன. ஆனால் இப்போது எதிரெதிர் கூட்டணிகளைச் சேர்ந்த கட்சிகள் தமிழகத்திலும் கர்நாடகத்திலும் ஆட்சி செய்தாலும் இந்தப் பிரச்சனைக்கு ஒரு சமரசமான முடிவு காண்பதில் வெற்றி பெற்று வருகின்றன. இந்த இந்த மாதங்களில் இத்தனை யித்தனை டி.எம்.சி. தண்ணீர் திறந்து- விடப்பட்டிருக்கிறது. இப்படி ஆரோக்கியமாகச் சென்று கொண்டிருக்கும் பிரச்சனையை சர்வதேசம் அது, இதுவென குழப்ப வேண்டுமா? யோசிக்க வேண்டாமா? சர்வதேசம் என்றால் என்ன என்பதை புரிந்து கொண்டுதான் சொல்கிறீர்களா?" என்று நான் கேட்டபோது வீரப்பனின் முகத்தில் கடுமை தோன்றியதை நான் கவனிக்கத் தவறவில்லை.

காவிரிப்பிரச்சனையால் கர்நாடகத்தில் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு கோரிக்கை பற்றி அரசு அளித்த பதிலை விளக்கமாகக் கூறிய நான், உச்சநீதிமன்ற நீதிபதிகள், பரிந்துரை செய்யும் நபர்களுக்கு, கர்நாடக அரசு நஷ்டஈடு வழங்கத் தயாராகிக் கொண்டிருக்கும் நிலையைக் கூறி, இதிலொரு நெருக்கடியையும் சிக்கலையும் தரவேண்டிய அவசியமென்ன என்று வீரப்பனிடம் கேட்டேன். அத்தனை பேருக்கும் உடனே எப்படி, எந்த அடிப் படையில் செயல்படுத்துவது? என்றபோது...

"ஏன் ஒட்டுப்போட திராணமாட்டாங்களா? விளம்பரம் செய்தால் பாதிக்கப்பட்டவர்கள் உடனே வருவார்கள்! கொடுத்து விட வேண்டியதுதானே....?" என்ற ரீதியில் தனது பதிலுக்கான பதிலை கூற ஆரம்பித்து விட்டான்.

"கர்நாடக மாநிலத்தின் இரண்டாவது ஆட்சிமொழியாக தமிழைக் கொண்டு வரவேண்டுமென்ற நிபந்தனையால், உங்களைப் பற்றி தமிழக மக்கள் வைத்திருக்கும் அபிப்பிராயத்தில் ஒரு வேறுபாடு ஏற்படுகிறது. இப்படி எங்கோ இடிக்கிற அளவு ஒரு கோரிக்கையை வைப்பதற்கு முக்கிய காரணம் என்ன?" என்று கேட்டதற்கு, வீரப்பன் பளிச்சென பதில் சொன்னான்.

"அங்கே தமிழ் ஆட்சிமொழியாக இருந்திருந்தால், தமிழர்கள் என்பதற்காக 19 பேரை கர்நாடக அரசாங்கம் வேலைக்கு எடுக்கமாட்டோம் என்று திரும்பி அனுப்பியிருப்பார்களா? அதனால் தான் கேட்டேன். ஒரே நாடு என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா?" என்றான் வீரப்பன் அழுத்தமாக!

'வீரப்பன் வேட்டை' என்ற பெயரில் அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட மலை மக்கள் பற்றிய பிரச்சனையில் நான் மனம் திறந்து அவனிடம் பேசினேன். "சதாசிவம் கமிஷன் அமைக்கப்பட்டதே உங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக கருதுகிறேன்" என்றேன். அந்த விசாரணை நடந்த பகுதிகளுக்கு நானே நேரில் சென்றதையும், நீதிபதி சதாசிவம் அவர்கள் அதிரடிப்படையினரிடம் காட்டிய கடுமையையும், பாதிக்கப்பட்டவர்களை அங்கே பரிசோதித்த பெண் மருத்துவரின் நேர்மையையும் கூட விலாவரியாக வீரப்பனிடம் கூறினேன். நீதிமன்றத்தின் நேர்மையையும் மரியாதையையும் வீரப்பனுக்கு எடுத்துக் கூறிய பின், நீதிமன்ற நடவடிக்கையில் யாரும் தலையிட முடியாது என்பதையும் கூறி, இத்தனைக்குப் பிறகும் அந்த விஷயத்தில் ஏற் பட்ட 'தடையை' நீக்கும் வழிவகைகளை விரைந்து கர்நாடக முதல்வர் செய்வதாக கூறியிருக்கும் பதிலையும் எடுத்துக் காட்டினேன்.



"அப்படியானால் கோபிசெட்டிப்பாளையம், கொளத்தூர் பகுதி மலை மக்களுக்கு...." என்று பிடிவாதத்தை கிளப்பத் தொடங் கினான்.

"கர்நாடக சிறையிலுள்ள கைதிகள், நான் சென்னை திரும்பு முன் வெளியே வந்திருப்பார்கள்," என்று நான் தெளிவுபடுத்தியபோது வீரப்பனின் முகத்தில் கொஞ்சம் அமைதி திரும்பியிருந்தது.

கோலார் பகுதியில் 7 தலித்துக்கள் படுகொலை பற்றி மேலோட்டமாகவே அறிந்திருந்தான் வீரப்பன். சிந்தாமணி தாலுகா கம்பாளபள்ளியில் நடந்த அந்த காதல் விவகாரத்தையும் அதனால் ஏற்பட்ட பகையையும், உயர்சாதிப்பெண்ணை காதலித்த தலித் வாலிபர் உயிருக்கு பயந்து புகைக்கூண்டு ஒன்றில் ஒளிந்திருக்கையில் பாறாங்கல்லை தலையில் போட்டுக் கொலை செய்ததையும், அதற்குப் பிறகு ஏற்பட்ட கொலைகளையும் ஒன்றுவிடாமல் வீரப்பனிடம் எடுத்துச் சொன்னேன்.

அந்தப் படுகொலைச் செய்தி பரபரப்பான பிறகு கர்நாடக முதல்வர், முன்னாள் பிரதமர் தேவகௌடா, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் அங்கே சென்றதையும், பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈட்டுத் தொகை தரப்பட்டதையும், இவை அத்தனையும் விபரமாக நக்கீரனில், கர்நாடகாவில் ஒரு கீழவெண்மணி, என்ற தலைப்பில் வந்ததையும் சொல்லி, இப்படிப்பட்ட சாதித்தகராறுகள், கொலைகள், தினம் தினம் ஏதாவது ஒரு பகுதியில் நடந்து கொண்டிருப்பதையும், சுட்டிக்காட்டினேன். எனது நீண்ட விளக்கம் வீரப்பனை கொஞ்சம் யோசிக்க வைத்தது.

நாலரை ரூபாயாக இருந்த தேயிலை விலை ஏழு ரூபாயாகவும்,



உங்கள் கோரிக்கைக்கு பிறகு அது ஒன்பதரை ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இதுவே ஒரு நல்ல முன்னேற்றம் தான் என்று சொல்லி விட்டு, "அது சரி, இந்த விஷயமெல்லாம் உங்களுக்கு எப்படித் தோன்றியது? உங்கள் எல்லை 6 ஆயிரம் கிலோ மீட்டர் பரப்புதானே?" என்ற எனது கேள்விக்கு "ஆமாம்....நான் ஊட்டிக்குப் போகிறேன். அந்த மக்களின் அவதியை நேரில் பார்த்தேன். அதனால் தான் அந்த கோரிக்கையை வைத்தேன்" என்றான்.

மாஞ்சோலைத் தோட்டத்தொழிலாளார் பிரச்சனைகளை முதலில் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது நக்கீரன் தான். தாமிரபரணி படுகொலையில், உயிரைப் பணயம் வைத்து அவற்றைப் படமெடுத்து, உலகத்தின் பார்வைக்கு கொண்டு வந்ததும். நமது நிருபர்தான் என்பதை எல்லாம் வீரப்பனுக்கு விளக்கி, தற்போது 'எல்லாமாக சேர்த்து மாஞ்சோலைத் தொழிலாளிக்கு 139 ரூபாய் கூலி கிடைப்பதையும் சொன்னேன்.

பத்துக்கோரிக்கைகளைப்பற்றியும் நீண்ட நேரம் விவாதித்தபின், "ஒரு விஷயம்- இன்னுமொரு மூன்று கோரிக்கைகள் இருக்கு; இதையும் கொண்டு போய் இரண்டு முதல்வர்களிடமும் கொடு!" என்று புதிய அதிர்ச்சியையும் தந்தார்.

"என்ன இது வேதாளம் கதையாகவே இருக்கே? இதைப்பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள், என்று நீங்கள் யோசிக்கவில்லையா? வீரப்பன் திருந்தவே மாட்டான் என்று மக்களும் அரசும் முடிவுசெய்யமாட்டார்களா?" என்று என் அதிர்ச்சியை தெரிவித்தபோது "இல்லை இல்லை- இவையும் ரொம்ப முக்கியம் தான்" என்று பட்டியலில் இணைப்பைப் பற்றி படிக்க ஆரம்பித்தான்.

வாச்சாத்தி, சின்னாம்பதி, பத்தாம் வகுப்புவரை தமிழ்மொழிக் கல்வி என்று புதிய மூன்று கோரிக்கைகள் இதில் வாச்சாத்தி மற்றும் சின்னாம்பதி பாண்டியன் வல்லுறவு கொடுமைகள் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் நடந்து கோர்ட் உத்தரவுப்படி நஷ்டஈடு வழங்கப்பட்டதையும் காட்டிலாக்கா ஊழியர்கள் 269 பேர் நீதிமன்ற படிக்கட்டுகளில் காத்து நின்றதையும், அவர்களுக்கான தண்டனை காத்துக்கொண்டிருப்பதையும் வீரப்பனிடம் விளக்கியபோது, "அப்படியா.... இதைப் பற்றியும் எங்கள் அரசியல் குழு விவாதிக்கும்" என்று தன்னை புதிய வீரப் பனாகக் காட்டிக் கொண்டார்.

தமிழ் மொழிக் கல்விக்கான வீரப்பனின் கோரிக்கைக்கு அரசளித் தபதிலை விளக்கிய தோடு, ஆங்கில மாயைக்கு அடிமையானவர்களும், கல்வி வியா பாரிகளும், அரசின் 5ம் வகுப்பு வரையிலான தமிழ்க் கல்வி ஆணைக்கு 'தடை' வாங்கி இருப்பதை வேதனையோடு எடுத்துச் சொல்லி, "உங்களைக் காட்டிலும் தமிழக அரசு இந்த விஷயத்தில் போராடிக்கொண்டிருக்கிறது. உச்ச நீதி மன்றத்தை நாடி இருக்கிறது அரசு" என்றேன்.

வீரப்பனின் கோரிக்கைகளுக்கு அரசுகள் இணைந்தளித்த பதில்களை, அந்த இக்கட்டான சூழலிலும் அவனுக்கு புரியும் விதமா விளக்கிவிட்டு வந்தேன். அரசுகள் வானொலி மூலம் அளித்த பதில்களுக்கும், எனது விளக்கங்களுக்கும் பிறகு, வீரப்பன் சொன்னவற்றை அரசுகளின் தூதராகச் சென்று வந்த, நான் இரு மாநில முதல்வர்களிடமும் ஒலிப்பேழையாக ஒப்படைத்திருக்கிறேன்.

அரசு தூதருக்கான எனது கடமையை என்னால் முடிந்தளவு நிறைவேற்றியிருக்கிறேன்.

நல்லதே நடக்குமென்று நம்புவோம்.

**நன்றி 'நக்கீரன்'**

---

### மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

## திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரங்கள் 14

**வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் பதின்மூன்று பகுதிகளையும் கடந்த வாரங்களில் இங்கு தந்திருந்தோம். அறிக்கையின் இறுதிப் பகுதி இது:**

பாதுகாப்புப் படையினருக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன. இதன் அடிப்படையில் அவர்கள் எவரையும் கைது செய்யவும் தடுத்து வைக்கவும் முடியும். அவர்களுக்கு வழங்கப்பட்ட அளவுக்கு மீறிய அதிகாரத்தினால் மனித உரிமை மீறல்களும் அடாவடித்தனங்களும் இடம் பெறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தொடர்ந்து பல வருடங்களாக இந்நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சனை வன்முறைக் கலாசாரத்தை பெருமளவு வளர்த்து விட்டுள்ளது. இதனால் இலங்கை ஒரு பாரிய பாதிப்புக்குள்ளான நாடாக விளங்குகிறது. அரச படையினரின் நடவடிக்கைகளின் பாரிய தன்மையும் சுதந்திரமாக தகவல்களைச் சேகரித்து வெளியிட முடியாத செய்தித் தணிக்கையும் மேலும் சிக்கல்களை உருவாக்கியுள்ளன. சம்பவங்கள் நடைபெறுகின்ற இடங்களுக்கு ஊடகவியலாளர்கள் சென்று உண்மையான செய்திகளைத் திரட்டி வெளியிட முடியாதபடி அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையினால், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் மனித உரிமை அமைப்புகளும் சம்பவங்களை ஆய்ந்து நீதியாகவும் பக்கச் சார்பில்லாமலும் தகவல்களை வெளியிடும் பொறுப்பினை ஏற்றுள்ளன.

மனித கௌரவத்துக்கான எமது அமைப்பு மனித உரிமைகள் மீறப் படுவதைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்குமோர் அமைப்பாக விளங்குவதால் அதற்குரிய பொறுப்புகளைத் தட்டிக் கழித்து விட முடியாது.

அரசாங்கமாயினும் சரி அதன் எதிரிகளாயினும் சரி, எவர் மனித உரிமை மீறினாலும் நிச்சயம் எமது அமைப்பு தலையிடவே செய்யும்.

கைதுசெய்யப்பட்ட சித்திரவதை செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படும் தமிழர்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்பட்டு இங்கு வந்து சேர்ந்ததும் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, தடுத்து வைக்கப்படும் எல்லாத் தமிழர்களுமே குற்றவாளிகளல்ல என்பது சுட்டிக்காட்டப்படக்கூடிய ஒன்றாகும்.

இவர்கள் எத்தகைய குற்றமும் செய்யாத அப்பாவிக் குடிமக்களே. அப்பேற்பட்டவர்கள் சாதாரண குற்றவாளிகளைப் போல் மனிதாபிமானமற்ற வகையில் துன்புறுத்தப்படுவது துர்ப்பாக்கியமானதே.

இத்தகைய நடவடிக்கைகளினால் இவர்களில் பெரும்பாலானோர் மனநோயாளிகளாகவும் மாறிவிட நேரிடும் என்பதில் ஐயமில்லை. இது சாதாரணமாக சமுதாய நலனுக்கு ஏற்றதல்ல.

முடிவாக, மனித கௌரவத்துக்கான எமது நிறுவனம் மேற்கு நாடுகளுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுக்கவிரும்புகிறது.

இன்றைய நிலையில் இலங்கையில் நடைபெற்றுவரும் சம்பவங்களை மேற்கத்தைய நாடுகள் மிகக் கவனமாக ஆய்ந்தறிந்து, அந்நாடுகளில் தஞ்சம் கோரிவரும் இலங்கைத் தமிழர்களை, இலங்கையில் ஓர் அரசியல் தீர்வு ஏற்பட்டு செயற்படுத்தப்படும் வரை-திருப்பி அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**மகேஸ்வரி வேலாயுதம்**
**செயலாளர்**
**மனித கௌரவத்துக்கான அமைப்பு**

மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் 20.04.2000 அன்று வெளியிட்ட அறிக்கையின் தமிழாக்கத்தை இங்கு தொடர்ந்து பிரசுரித்து வந்தோம். இது தொடர்பாக மேலும் விபரங்களை அறிய விரும்புபவர்கள் கீழே தரப்பட்டுள்ள முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

THE SECRETARY,
FORUM FOR HUMAN DIGNITY
44A 2/1, DICKMAN'S ROAD,
COLOMBO-05,
SRI LANKA.
Tel: 074-514823
Fax: 595378
E-mail: dignity@slt.lk

# ஏக காலத்தில் சூடுபிடிக்கும்

# 'பிரசார - பீரங்கி' யுத்தங்கள்

## அலசுவது - இராஜதந்திரி

யாழ்ப்பாணக்குடாநாடு சிறிதும், பெரிதுமாகப் பலதரப்பட்ட இராணுவநடவடிக்கைகளுக்கும் பரிச்சயப்பட்டதாகவே இருக்கின்றது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் 'ரிவிரச' இராணுவநடவடிக்கை குடாநாட்டில் பிரமாண்டமான முறையில் மேற்கொள்ளப்பட்டது. பெருமளவிலான படையினரும், படைக்கலங்களும் ஈடுபடுத்தப்பட் ஓர் இராணுவ நடவடிக்கையாகவே அது விளங்கியிருந்தது.

பலாலி இராணுவத்தளத்திலிருந்தும் வெளியேறி யாழ்குடாநாட்டினுள் முழுஅளவிலான விஸ்தரிப்பை மேற் கொள்வதே ரிவிரச படையெடுப்பின் நோக்கமாக இருந்தது.

ரிவிரச படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்டபோது யாழ்குடாநாட்டு மக்கள் மோசமான மோதல்கள் வெடிக்கலாமென்ற அச்சத்தின் காரணமாக தமது வீடு, வாசல்களிலிருந்தும் வெளியேறி யாழ்குடாநாட்டின் தென்மராட்சிப் பிரதேசத்துக்குச் சென்றிருந்தனர்.

சுமார் மூன்று இலட்சத்துக்குமதிகமான யாழ்குடாநாட்டு மக்கள் ரிவிரச படையெடுப்பின்போது இடம் பெயர்ந்திருந்தனர்.

ஆட்டிலறிப் பீரங்கிகள், கனரக யுத்தடாங்கிகள் சகிதம் பலாலியிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ரிவிரச படையெடுப்பு மோதல்களின் போது, குடாநாட்டு மக்கள் மேற்கொண்ட இடம்பெயர்வு, பெருமளவு உயிர்ச்சேதங்கள் ஏற்படுவதைக் கூடத் தவிர்த்திருந்தது.

இல்லையேல், படையினர் மற்றும் புலிகள் பரஸ்பரம் கனரக ஆயுதங்களுடன் நடத்திய தாக்குதல்களில் நிச்சயம் பாரியளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்குமென்றே கருத முடியும்.

1987ம் ஆண்டிலேயே யாழ்ப்பாணக்குடாநாட்டில் முதல் தடவையாக விரிவான இராணுவ நடவடிக்கையொன்று திட்டமிடப்பட்டிருந்தது. வடமராட்சி ஒப்பரேஷன் அல்லது 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்பதே அந்த இராணுவ நடவடிக்கைக்குச் சூட்டப்பட்ட பெயராகும்.

இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட தளபதிகள் பலரும் பங்குபற்றிய ஒரு பெரும் இராணுவ நடவடிக்கையாக வடமராட்சி ஒப்பரேஷன் விளங்கியிருந்தது.

யாழ்குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியை மையமாக வைத்தே இந்த ஒப்பரேஷன் ஆரம்பமாகியிருந்தது.

முப்படையினரும் பங்குபற்றிய வடமராட்சி ஒப்பரேஷன் படிப்படியாக முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தருணத்திலேயே இந்திய இராணுவ விமானங்கள் யாழ்குடாநாட்டினுள் பிரவேசித்து உணவுப் பொட்டலங்களைப் போட்டு, அந்த ஒப்பரேஷனின் நோக்கத்தை திசைதிருப்பிவிட்டிருந்தன.

இதன் பின்னர் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, இந்திய அமைதிப்படை இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு வந்திருந்தது.

இந்தியப் படையினரும் அமைதி நடவடிக்கை என்ற ரீதியில் வந்திருந்தபோதிலும், நாளடைவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்திய இராணுவத்துக்குமிடையேயும் மோதல்கள் வெடித்திருந்தன.

இம்மோதல் சுமார் இருவருடங்கள் வரை நீடித்ததுடன் 1989ம் ஆண்டில் இந்தியப்படையும் தனது பணிகளை முடித்துக்கொண்டு நாடு திரும்பியிருந்தது.

இருந்தபோதிலும் இலங்கையின் வடக்கு-கிழக்கில் அமைதி என்பது தொடர்ந்து 'கானல் நீராகவே' இருக்கலாயிற்று.

1987ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வடமராட்சி ஒப்பரேஷன் இராணுவநடவடிக்கை, 1996ம் ஆண்டு இடம்பெற்ற ரிவிரச இராணுவநடவடிக்கை யாழ்குடாநாட்டிலிருந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளை வன்னிப்பிரதேசத்தினுள் பிரவேசிக்க வைத்திருந்தது.

ரிவிரச இராணுவநடவடிக்கையை மேற்கொண்டதன் மூலம் யாழ்குடாநாட்டில் இராணுவம் தனது மேலாதிக்கத்தைப் பெரிதும் நிலை நாட்டியிருந்தது.

ஆயினும் கடந்த ஓரிருவருடங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக அடிக்கடி மேற்கொண்டுவரும் தாக்குதல்கள், குடாநாட்டினுள் படையினருக்கு பெருமளவிலான அழுத்தங்களைக் கொடுப்பதாகவே இருக்கின்றன.

புதிய இராணுவத்தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல பதிவியேற்றதையடுத்து. வடக்கே 'ரிவிகிரண' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தின் கொழும்புத்துறைப் பகுதியில் ஆரம்பித்த ரிவிகிரண தாக்குதல் நடவடிக்கையின்போது தென்மராட்சியின் நுணாவில், மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளிலிருந்தும் படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான படையினர் அண்மையில் வாங்கப்பட்ட பலகுழல் பீரங்கி, ஆட்டிலறிப் பீரங்கிகள் சகிதம் மேற்கொண்ட ரிவிகிரண தாக்குதல் நடவடிக்கையின் போது இருதரப்பிலும் கணிசமானளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

எதிரி தாக்குவதற்கு முன்னர் எதிரியைத் தாக்குவது என்ற ரீதியிலேயே ரிவிகிரண தாக்குதல் இராணுவத்தினரால் நடத்தப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

பொதுத்தேர்தல் நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ள தருணத்தில் யாழ்குடாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்தல்களைக் குழப்ப எத்தனிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

அத்துடன் யாழ்குடாநாட்டினுள்ளே தென்மராட்சிப் பிரதேசத்தில் புலிகளின் நடமாட்டங்களும் அதிகரித்தமைக்கான அறிகுறிகளும் தென்பட்டதையடுத்தே, எந்தவொரு தாக்குதல்களையும் புலிகள் தொடுக்கு முன்னர் படையினர் தமது பலத்தை ரிவிகிரண ஒப்பரேஷன் மூலம் பிரயோகித்திருந்தனர்.

ஆயினும் ஓரிருதினங்களே இடம்பெற்ற இத்திடீர் இராணுவ நடவடிக்கையில் இரு தரப்பிலுமே பெருமளவிலான இழப்புக்கள் தோன்றியுள்ளன.

நூற்றுக்குமதிகமானவர்கள் கொல்லப்பட்டும் படுகாயங்களுக்குமுள்ளாகியுள்ளனர்.

இடையறாது இராணுவத்தினரின் ஆட்டிலறிப் பீரங்கி இந்த ரிவிகிரண இராணுவ நடவடிக்கையின் போது முழங்கியிருந்தன. அச்சமயம் நன்கு சூடேறிய ஆட்டிலறிப் பீரங்கியொன்று வெடித்துப்பிளந்துள்ளது. இதனால் அதனை இயக்கிக் கொண்டிருந்த இரு படைவீரர்கள் இருந்த இடமே தெரியாமல் உடல்சிதறி மாண்டுள்ளனர்.

காயமுற்ற படையினரில் பலர் அங்கவீனர்களாகும் அபாயத்துக்குள்ளாகியுமுள்ளனர். கை, கால்களை இழக்கவேண்டிய நிலை காயமுற்றவர்களில் பலருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிவிகிரண இராணுவ நடவடிக்கையின் இழப்புக்கள் இராணுவ தலைமைப் பீடத்திலும் சர்ச்சையைக்கிளப்பிவிட்டுள்ளது, முப்படைத்தளபதி என்ற ஸ்தானத்திலிருக்கும் ஜெனரல் ரொஹான் தலுவத்த தமது பதவியைக்கூட இராஜினாமாச் செய்ய முன்வந்திருந்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரை ஒரு புறம் தமிழ் அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் குதித்துள்ளன. மறுபுறத்தே யுத்த மேகங்கள் கருக்கட்டியுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளில் ஜனநாயக அரசியல் பலப்படுத்தப் படுவதன்மூலமே யுத்தக்கெடுபிடிகளைத் தொலைவில் வைத்திருக்கமுடியும். ஆனால் ஜனநாயக ரீதியான தேர்தல் நடவடிக்கைகள் என்பது வடக்கு-கிழக்கில் பெயரளவில் மட்டுமே காணப்படுகின்றதே தவிர யுத்த அபாயம் வடக்கு-கிழக்கு மக்களை தேர்தல்களுக்கு முகங் கொடுப்பதிலிருந்து பெரிதும் விலகிச்செல்ல வைத்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

வடக்கே ரிவிகிரண தாக்குதல் நடவடிக்கை இடம்பெற்று இழப்புக்கள் பலமாகவே காணப்படும் அதேசமயம் கிழக்கில் முக்கிய அரசியல் புள்ளியான செழியன் பேரின்பநாயகம் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

காலஞ்சென்ற செழியன் பேரின்பநாயகம் ஒரு பத்திரிகையாளர். அத்துடன் மட்டக்களப்பு மாநகரின் மேயராகவும் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாநகரமேயராக சிலவருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலிலேயே அவர் தெரிவாகியிருந்தார். அத்துடன் அவர் அந்த மேயர்பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்யும் வரை எந்தவொரு பயமுறுத்தல்களுக்குமுள்ளாகவில்லை.

ஆனால் இத்தடவை திரு. செழியன் பேரின்பநாயகம் பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடமுன்வந்திருந்தார்.

இதனையடுத்து திரு. செழியன் பேரின்ப நாயகமும், அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேச பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளருமான எஸ். மனோகரன் பிள்ளை என்பவரும் துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த மிதவாத தமிழ அரசியல்வாதிகள் தமிழ் தீவிரவாதம் ஆரம்பித்த காலம் முதல் கொலைசெய்யப்பட்டுவரக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் தமிழ் அரசியல் கோதாவைப் பொறுத்த வரை மூத்த அரசியலாளர்கள் என்றிருந்தவர்கள் பலரும் தற்போது உயிரோடில்லாத துர்ப்பாக்கிய சூழ்நிலையே காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் மிகவும் ஆரோக்கியமான, உறுதியான அரசியல் தலைமைத்துவங்களே காணப்பட்டிருந்தன.

ஆனால் காலப்போக்கில் இத்தலைமைத்துவங்கள் பலவீனமுற்றதுடன், வடக்கு-கிழக்குப் பிரதேச அரசியல் நடவடிக்கைகளிலும் தலையீடுகள், குறுக்கீடுகள் என்பவை ஏற்பட்டு காத்திரமற்ற சூழ்நிலைகளே தோன்றலாயின.

இன்று வடக்கு-கிழக்கில் ஜனநாயகம் என்பது பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதோடு இப்பிரதேசங்களில் பரந்துபட்ட அரசியல் நடவடிக்கைகளும் கேள்விக்குரியதாகவே மாறியுள்ளது.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்சனை தீர்க்கப்படாதவரை இப்பிரதேசங்களில் இடம் பெறும் எந்தவொரு தேர்தலோ அல்லது அத்தேர்தல்கள் மூலம் ஏற்படுகின்ற பிரதிநிதித்துவங்களோ எவ்வித பலனையும் கொண்டுவரப் போவதில்லை என்பதையே அனுமானிக்க முடிகின்றது.

இத்தடவை தேர்தலில் நாற்பதுக்குமதிகமான அரசியல் கட்சிகளும் என்றுமில்லாதவாறு பெருந்தொகையான சுயேச்சை வேட்பாளர்களும் போட்டிபோடுகின்றன. ஆனால் நாட்டின் பிரதான பிரச்சனையான வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு தீர்வு காண்பது பற்றி தேர்தல் பிரசாரங்களில் அழுத்தம் திருத்தமாக எதுவும் குறிப்பிடப்படாமலிருப்பதையே காணமுடிகின்றது.

வடக்கு-கிழக்கு பிரச்சனையின் விளைவாகத் தோன்றிய கொடிய யுத்தத்தை வடக்கு-கிழக்கு மக்கள் மட்டுமல்ல, தென்னிலங்கை மக்கள் கூட மிகவும் வெறுக்கவே செய்கின்றனர்.

யுத்தமென்பது படிப்படியாக விஸ்வரூபமெடுத்து, தற்போது தேர்தல் களத்தின் முக்கியத்துவத்தைக் கூட யுத்த முஸ்தீபுகள் குலைத்து விடுவதாகவே இருக்கின்றன.

ஏக காலத்தில் தேர்தல்களத்தில் பிரசார யுத்தமும் யுத்தகளத்தில் பீரங்கிகளின் யுத்தமும் சூடுபிடித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் எதிர்கால அரசியலைப் பொறுத்தவரை இத்தகைய நிலை முழுநாட்டையுமே மேலும் சீரழிவுக்குள்ளாக்கி விடுவதாக இருக்குமென்றே கருத முடிகின்றது.

உலகின் முக்கிய ஜனநாயக வல்லரசாக இருந்துவரும் அமெரிக்காவிலும் இன்னும் சில மாதங்களில் ஜனாதிபதித்தேர்தல் இடம் பெறவிருக்கின்றது.

அங்கே குடியரசுக்கட்சி, மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகளை விரிவுபடுத்தி வரக் காணப்படுகின்றனர்.

ஒரு திருவிழாக்காலம் போல அமெரிக்க தேர்தல்களம் களை கட்டியுள்ளது. மக்கள் குதூகலத்துடன் தாம் விரும்புகின்ற வேட்பாளர்களுக்காக அமைதியான முறையில் பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

அச்சமோ, பீதியோ இன்றி தத்தமது வேட்பாளர்களுக்காக அமெரிக்க மக்கள் ஆதரவு திரட்டி, வருகின்றனர்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை தேர்தல்கள் என்ற வார்த்தை மக்கள் மத்தியில் அச்சத்தையும், பீதியையும் கொண்டுவருவதாகவே இருக்கின்றது.


இதன் மூலம் இலங்கையில் பெயரளவில் மட்டுமே ஜனநாயகம், தேர்தல்கள் என்றிருக்கின்றதே தவிர, நடைமுறைச் சாத்தியமாக காட்டுமிராண்டித்தனமாகவே தேர்தல் நடவடிக்கைகள் இருப்பதைக் காணமுடிகின்றது.

திரும்புமிடமெல்லாம் ஒரு நேர்மையான, சுதந்திரமான அப்பழுக்கற்ற தேர்தல் நடக்குமா? என்பதே மக்களின் கேள்வியாக இருக்கின்றது.



நன்றி-டெய்லி மிரர்

## அதிரடி அய்யாத்துரை



**வடக்கே வானில் பறக்கும்** குண்டு வீச்சு விமானங்களால் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ள தாக சொல்லப்பட்டுள்ளது. சாதாரண விமானங்களல்ல; சுப்பர் சோனிக் விமானங்களின் இரைச்சலே தனிரகம். வயிற்றுக்குள் இருக்கும் குடலையே பிடுங்குவது போல சத்தம். ஏற்கனவே பாதிக்கப்பட்ட நோயாளிகளின் வேதனை கூட சுப்பர் சோனிக் வேகத்திலேயே உயருது.

**கட்அவுட், போஸ்ட்டர்களுக்காக** கோடிக்கணக்கில் பணம் செலவு செய்திருந்தார்கள் வேட்பாளர்கள். ஆனால் பொலிஸார் அவற்றை கழற்றி எறிவதில் மும்முரமாக இருக்கிறார்கள். எத்தனையோ ஜீவன்கள் ஒரு நேர உணவுக்காக கையேந்தி நிற்கும் இக்காலத்தில், இக் கோடிக்கணக்கான வீண் விரயம், அரசியல் எவ்வளவு தூரம் ஒரு சூதாட்டமாக மாறிவிட்ட தென்பதையே சுட்டிக் காட்டுகிறது.

**முற்போக்கு, சோசலிஸம், மாக்ஸிஸம்** என்று பேசிய ஜே.வி.பிகாரரும் பௌத்த பீடாதிபதிகளிடம் சரணடைந்துள்ளார்கள். என்னதான் சொன்னாலும் அவர்களை அனுசரித்தால்தான் அரசியல் நடத்தலாமென்று ஜே.வி.பி.காரரும் கண்டி பீடாதிபதிகளிடம் மண்டியிட்டு தம்மையும் சராசரி அரசியல் வாதிகள் பட்டியலில் சேர்த்துப் போட்டார்கள்.

**முப்படைத்தளபதி** ஜெனரல் ரொஹன தலுவத்த மிகவும் சோகத்துடனிருக்கிறார். அவருடைய புதல்வி ஒரு நல்ல நீச்சல் வீராங்கனை. இத்தடவை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றும் இலங்கை அணியில் அவருக்கு இடம் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கிடைக்கவில்லை. வேறொரு பெண்ணுக்கே கிடைத்துள்ளது. தலுவத்த நீதிமன்றம் சென்றும் பயனில்லை. தெரிவான பெண் நன்றாகவே நீந்துகிறாராம். நீதி, நியாயத்துக்கு முன்பாக தலைகுனிய வேண்டியிருக்குது தலுவத்தவுக்கு.

**தலைநகரில் நம்மவர்களின்** நடன அரங்கேற்றங்கள் அடிக்கடி நடக்குது. கலை, கலாசாரம் பேணப்படவேண்டும். ஆனால் அதற்காக கண்கடைதெரியாமல் செலவு செய்து இந்த அரங்கேற்றங்கள் நடப்பது தான் கவலையாக இருக்குது. ஆனந்தக் கூத்தாடும்போது அநாதைகளாக்கப்பட்டு தவிப்போரையும் மனதில் நிறுத்தவேண்டும்.

> **அழகிகளை ஆயுதமாகப் பயன் படுத்தி ஆட்சி பீடங்களின் அடி அத்திவாரத்தையே ஆட்டங்காண வைத்த கதை அனேகம். இரண்டாவது உலகப்போரில் அமெரிக்க ஆட்சிக்கு வேட்டு வைக்க முன்வந்த அழகியின் கதையின் முடிவு இது.**

# வேவுக்காரி லில்லி

02

ஏராளமானவர்கள் அந்த வியன்னா அழகியின் அருகே நின்று சிரித்துப் பேசி வெல்லப்பாகு உருகியது போல் கரைந்தார்களே தவிர அவளுக்கு வேண்டிய செய்தியைச் சொல்லவே இல்லை!

இப்படி நியூயார்க்கில் அவள் தெண்டச் செலவு செய்து கொண்டிருந்த நேரம் ஒருவன், திடீரென்று கடைக்குள் வந்தான். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு தனது மாறுவேடத்தை கலைத்தான்!

லப்ட்மான்!

அவளுக்கு கிலியடித்தாற் போலாகி விட்டது!

"அனுப்பின வேலை எதுவுமே நடக்கவில்லை! இந்த அலங்காரக் கடையை நம்பிக் கொண்டிருந்தால் எவன் தருவான் தகவல்? நீ உன் அழகை நம்பிச் செயல்படு. இது அடால்ப் ஹிட்லரின் ஆணை! சீக்கிரம் தகவல் வேண்டும்....!" என்று மிரட்டிவிட்டுப் போனான் அந்தத் தளபதி. லில்லி அப்புறம்தான் வேகமானாள்; விரைந்தாள்!

இராணுவ அதிகாரிகளின் அருகே அழையாத விருந்தாளியாக போய் அறிமுகமானாள். இராணுவ முகாம்களின் அருகே உலாத்த ஆரம்பித்தாள்! சோம்பலாக உடம்பை முறித்துக் கொண்டிருந்தவர்களின் எதிரில் ஒரு சுறுசுறுப்பு டானிக் போல் தோற்றம் காட்டினாள்!

அப்போதுதான் ஒரு மேஜர் ஜெனரல் மாட்டினான்!

அப்புறமென்ன?

விருந்து கொடுக்க அழைத்தாள்; பறந்து பறந்து ஆடினாள். பிறகு பழைய பாட்டை பாடினாள்!

அவ்வளவுதான்!

மேஜர் ஜெனரல் அம்பேல்! துப்பாக்கியும், குண்டும், பீரங்கியும், விமானமுமாக கேட்டுக் கொண்டிருந்த சப்தங்களிலிருந்து சற்று நேரம் விலகி வெறுமையானான். பொறுமையாக அவனுடன் ஒத்துழைத்தாள் லில்லி.

யுத்தம் நின்றுபோன அமைதியில், மகா யுத்தத்தின் ரகசியங்களை தேடத் துடித்தது மனசு. சற்றுநேரம் கண்களை மூடி தூங்குவது போல் பாசாங்கு செய்தாள். செல்லமாக சிணுங்கி, மேஜரின் மார்பின் மீது கையைத் தழுவியபடியே கிடந்தாளே தவிர அவள் தூங்கவே இல்லை!

ஒரு மணி நேரம்.....

மெல்ல மெல்ல விலகினாள் லில்லி! அப்புறம் தான் சுறுசுறுப்பானாள்.

மேஜர் கொண்டு வந்திருந்த பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய் ஒரு ஒதுக்குப்புறமாக அமர்ந்தாள். கள்ளச் சாவிக்குச் சுழன்றது பெட்டி. உள்ளே

ஏதேதோ பைல்கள்!

எடுத்துப் படித்தாள். அத்தனையும் வேவு பார்த்துச் சொல்லப்பட வேண்டிய சமாச்சாரங்கள்!

விமானக் கம்பனியின் பெயரும், விபரமும், அவர்கள் தயாரித்திருக்கும் குண்டு வீச்சு விமானத்தின் வரைபடம்.

அடடா! முதன் முதலாக கிடைத்தது எவ்வளவு முக்கியமான தகவல்?

அவ்வளவையும் தனது ஸ்பை கேமிராவினால் படம் பிடித்தாள். தகவல்களை எல்லாம் பரபரப்பாக எழுதிக் குறித்துக் கொண்டாள். எடுத்தது தெரியாமல் பெட்டியை அப்படியே பழையபடி பூட்டினாள். கொண்டு போய் எடுத்த இடத்தில் வைத்தாள். படுத்த இடத்திலேயே படுத்தாள்.

அமெரிக்கா பிடித்து வைத்துக் கொண்டிருந்த ஜெர்மனியின் ஒரு பகுதியில் இருந்தது ஒரு கறிகாய்கடை! அந்த கடை விலாசத்துக்கு உடனே ஒரு கடிதம் எழுதினாள்-அது மட்டும் தான் தெளி வாக தெரிகிறமை! உள்ளே எழுதி வைத்த விபரங்கள் அத்தனையும் எழுதினால் மறைந்துவிடும் ரகசிய மையால் எழு தப்பட்ட சங்கேத குறிப்பு!

இராணுவமேஜர் போன பிறகு லில்லி செய்த இந்தச் செயல் நியூயார்க் வந்த பின் அவளுக்கு ஏற்படாத ஒரு புளங்காகிதத்தைக் கொடுத்தது! பூரித்துப் போனாள்.

அப்புறமும் இதே முயற்சிகள்!

அவள் பயின்று வந்த பயிற்சிகளுக்கு இப்போது தான் வேலையும் பரபரப்பாகி வந்தது!

அமெரிக்க விமான பலம், அவர்கள் அமைக்கிற தளங்கள், புதிய புதிய கண்டுபிடிப்புகள் எல்லாமே சுலபமாக அவள் கைக்கு வந்தன! ஆனால், அனுப்பும்போது தான் மிக மிகச் சங்கடப்பட்டாள்!

ஏனென்றால் அவளது நடமாட்டங்களை அமெரிக்க ஒற்றர்கள் கண்காணித்தால் நிலைமையே ஆபத்தாக முடியுமே!

இதைப் பற்றியும் மேலிடத்துக்கு சங்கேத மொழியில் எழுதியிருந்தாள் லில்லி.

இதை படித்த பிறகுதான் லப்ட்மான் ஒரு நாள் அவளோடு ⁚போனில் பேசினான் போலும்.

"இன்று இரவு ஒரு நபர் வருகிறார். அவரைக் கவனிக்கவும்,!" என்றது அந்த உத்தரவு!

அது 1940ம் வருடம் பெப்ரவரி மாதத்தில் ஒரு நாள்!

வந்தான் வில்லியம்.

அமெரிக்காவிலிருக்கும் ஜெர்மனிய வேவுக்காரர்களுடன் சேர்ந்து பணியாற்ற வந்திருந்தவன் அவன். ஒரு குட்டி ரேடியோ,



ஸ்டேசனை அமைத்துக் கொண்டு செய்திகளை உடனுக்குடன் ஹம்பர்க் அனுப்பப் போவதாக சொன்னான்.

இதைக் கேட்டதுமே பாதி தொல்லை போனமாதிரி பரவசப்பட்டாள் லில்லி.

1941ல் உலக யுத்தத்துக்கு அமெரிக்காவின் பங்கு அதிக அளவில் இணைந்தது. உடனே ஹிட்லரிடமிருந்து லில்லிக்கு ஒரு புதிய உத்தரவு வந்தது!

'அமெரிக்க இராணுவ சங்கேத மொழியை கற்றுக் கொள்ளவும். இராணுவ ஜெனரல்களிடம் மட்டுமே தொடர்பு கொண்டு உளவு அறியவும்,' என்பது உத்தரவு.

அதன்படி பலரையும் சினேகம் பிடித்துக் கொண்டாள் லில்லி.

அவர்கள் தந்த தகவல்களும் முக்கியத்துவம் பெற்றவையாயிருந்தன! எனவே, அந்தந்தத் தளபதியரின் இடங்களுக்கே போய் லில்லி தன்னையும், அவர்களையும் திறந்தாள். அவர்களிடமிருந்து வருகிற குறிப்புகளை மனசுக்குள் வாங்கினாள். உடனுக்குடன் வில்லியமுக்கு சொன்னாள்!

அந்த வில்லியம் ஜெர்மனில் ஒற்றனாகப் பயிற்சி பெற்று அமெரிக்காவுக்காக வேவு வேலை பார்க்கிறவன் என்பது லில்லிக்குத் தெரியாது! அவன் தகவல்களை திரித்தும் மனம் போனபடியும் அனுப்பிய விபரமும் அவளுக்கு தெரிய வருவதற்கு முன்-

1941 ஜூன் 8ம் திகதி....

ஓர் இராணுவ தளபதியின் அறையில் பொழுதைக் கழித்துவிட்டு வந்த லில்லியை தொடர்ந்து ஒரு வாலிபன் நிழலாக நடந்தான்!

"ஹலோ லில்லி!"

அவள் நின்றாள். திரும்பிப் பார்த்தாள்.

"நீங்கள் தானே லில்லி பார்பாரா கரொல் ஸ்டெயின்?" கேட்டான் அவன்.

அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். ஏனென்றால் தன் பெயரை இத்தனை பூரணத்துவமாக அழைக்கிறவர்கள் நாஜிப் படையைச் சேர்ந்தவர்களாகத்தான். இருக்க வேண்டும் என்பது அவள் ஊகம்.

"ஆமாம், நானே தான்! நீங்கள் யார்?"

"நான் அமெரிக்க ஒற்றன். அயல் நாட்டுக்கு வந்து வேவு பார்த்த குற்றத்துக்காக உங்களை கைது செய்கின்றேன்....." என்றான் அவன்.

"யார் சொன்னது?"

"லாஸ் ஐலேண்டிலிருந்து உங்களுக்காக செய்திகள் அனுப்பிய வில்லியம் சிபால்ட்! அவரும் எங்கள் ஒற்றர் தான்!"

அதிர்ந்து போனாள், அடால்ப் ஹிட்லருக்கு விசுவாசமாக வேவு பார்த்த லில்லி பார்ப்பாரா கரோல் ஸ்டெயின்!

கைது ஆகி, தூக்குத்தண்டனையும் பெற்றாள்.

**-ஐ.கே-**

[முற்றும்]

# பரபரப்பு பமீலா



பிரபல கவர்ச்சிப் புயல் 'பேவோட்ச்' புகழ் பமீலா அண்டர்சன் லீ சமீபத்தில் நடு வீதியில் நின்று ஆர்ப்பாட்டம் நடத்திப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

போராட்டம் நடத்தக் கூடிய அளவுக்கு அப்படி என்ன பிரச்சனை?

பமீலாவுக்கு விலங்குகள் என்றால் உயிர். தனது வீட்டில் கூட நாய், பூனை, முயல் என்று விதவிதமான விலங்குகளைச் செல்லமாக வளர்த்து வருகிறார்.

மொனாக்காவின் மாண்டி கார்லோ நகரில் நடந்த சர்க்கஸ் திருவிழாவில் அப்பாவி விலங்குகள் கடுமையாகச் சித்திரவதை செய்யப்படுவதை கேள்விப்பட்ட பமீலா கொதித்துப் போனார். ஏதுமறியாத விலங்குகளைக் கொடுமைப் படுத்தும் அவர்களுக்குப் பாடம் புகட்ட நினைத்தார்.

இதற்காக விலங்கு வதையைத் தீவிரமாக எதிர்த்துப் போராடி வரும் 'பீட்டா' என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் உடனடியாக ஆலோசனை நடத்தினார். அவர்களுடன் மொனாக்கா வீதியில் குதித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

விலங்குகளை வைத்து வித்தை காட்டுபவர்களை மட்டுமன்றி அதைப் பார்த்து இரசிப்பவர்களையும் கிழிகிழியென்று கிழித்து விட்டார்.


பமீலா இப்படி பரபரப்பாக போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்க மறுபக்கத்தில் பத்திரிகைகள் இவரைப் பற்றிப் பரபரப்பான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

அடிக்கடி காதலர்களை மாற்றிக் கொள்ளும் பமீலா தற்போதைய கணவர் லீயை விட்டு விட்டு இளம் வாலிபருடன் சுற்றித் திரிகிறார். இந்த வாலிபரின் பெயர் மார்க்கஸ் ஸ்கென்சன்போர்க்.

மொடலிங்கில் தற்போது முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் மார்க்கஸிடம் தன் மனதைப் பறிகொடுத்து விட்டார் பமீலா.

அண்மையில் அமெரிக்க நகரான லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற போட்டியொன்றைக் காண சிக்கென்ற உடையில் மார்க்கஸுடன் வந்திருந்தார் பமீலா.

# திருடியிடம் தோற்ற வீரர்



தென்கொரியத் தலைநகர் சியோலில் 1988ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் 100 மீட்டர் ஓட்டத்தில் முதலாவதாக வந்ததன் மூலம் 'உலகின் மிக வேகமான மனிதர்' என்ற பெயரைப் பெற்றிருந்தார் பென் ஜோன்சன்.

அந்தப் பெயரை சில மணிநேரங்கள் மட்டுமே அவரால் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது. வேகமாக ஓடுவதற்காக ஏதோ ஒரு போதைவஸ்தை உட்கொண்டதாகக் கூறி அவரது பதக்கமும் பறிக்கப்பட்டது.

அவர் என்ன இந்த ஒலிம்பிக்கில் ஏதாவது செய்யப்போகிறாரா? இல்லை. ஓட்டப்பந்தயங்களில் ஆயுட்காலத்தடை விதிக்கப்பட்டிருக்கும் பென் ஜோன்சன் அண்மையில் ஒரு பெண்ணிடம், ஓடித் தோற்று விட்டார்.

இத்தாலியின் தலைநகர் ரோமிற்கு சில வாரங்களுக்கு முன் சென்ற பென் ஜோன்சனின் பையை ஒரு பெண் எடுத்துக் கொண்டு ஓடினார்.

இவர் தான் ஓட்டப்பந்தய வீரராச்சே. அந்தப் பெண்ணைத் துரத்தியபடி பின்னால் ஓடினார். ஆனால் அந்தத் திருட்டுப் பெண்ணின் வேகத்திற்கு இவரால் ஈடு கொடுக்க முடியவில்லை.

# பெண்களுக்கு நடக்கும் கொடூரம்



நவீன காலத்தை நோக்கி உலகம் பீடு நடை போட்டுக் கொண்டிருக்கையில் இந்த உலக மகா கொடுமை வெளியே தெரியாமல் இன்னமும் நடந்து கொண்டு தான் இருக்கின்றது.

பெண்களின் ஜனன உறுப்பைச் சேதமாக்கும் ஒரு காட்டு மிராண்டித் திருவிழா உலகின் 28 நாடுகளில் வாழும் மலைவாழ்சாதியினரிடம் நடந்து வருகிறது.

வயதுக்கு வந்த இந்த மலைவாழ் இனப் பெண்களுக்கு நாள் குறிக்கப் பட்டு அவர்கள் அடர்ந்த காட்டுப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அங்கு ஏனையோர் ஒரு வித சத்தத்தை எழுப்ப, நீண்ட கத்தி மற்றும் கொடூரமான ஆயுதங்களால் இந்தக் கொடுமை அரங்கேறுகிறது.

பாதிக்கப்பட்ட பெண்கள் வலி தாளாமல் கதறி அழ, மற்றவர்களோ ஆடிப்பாடி மகிழ்வார்கள். அந்தப் பெண்களுக்கு அணிகலன்கள், புதுத்துணிமணிகள் அணிவிக்கின்றனர்.

இந்த விழா ஆபிரிக்க நாடுகளின் பல பகுதிகளில் நடக்கிறது. சூடான், டோகோ, மாலி ஆகிய இடங்களில் இந்தக் கொடுமை அதிகமாக நடந்து வருகின்றது.

இது பற்றி வியன்னா மற்றும் கெய்ரோ நாடுகளில் நடந்த தேசிய மாநாடுகளில் பேசியும், தடை செய்ய முடியவில்லை என்று கூறப்படுகிறது.

"இப்படிச் செய்வது உயிருக்குப் ஆபத்தாக முடியும். கர்ண கொடூரம் நிறைந்த ஒரு மகா கொடுமை" என்று இதைப்பற்றிக் கூறியுள்ளார் கொலம்பியா பல்கலைக்கழக பொது நல பேராசிரியர் நகீத் தோடி என்பவர்.

# கோபுரத்தில் தீ

கடந்த மாதம் ரஷ்யாவுக்குப் பெரும் சோதனைகளைக் கொடுத்த மாதம் என்று கூறலாம் போலுள்ளது.

கடந்த மாத நடுப்பகுதியில் ரஷ்ய அணு நீர் மூழ்கிக் கப்பல் வட அத்திலாந்திக் பெருங்கடலில் மூழ்கி அதில் இருந்த 116 மாலுமிகளும் உயிரிழந்தார்கள்.

அதன்பின் கடந்த மாத இறுதியில் மொஸ்கோவில் உள்ள ஒஸ்டான்கினோ என்ற கோபுரத்தில் தீ பரவிக் கொண்டது.

ரஷ்ய தொலைக்காட்சி ஒலிபரப்புக்குத் துணைபுரியும் இந்தக் கோபுரம்தான் ஐரோப்பாவிலேயே மிக உயரமான தாகும். உலகில் இது இரண்டாவது இடத்தில் இருக்கிறது. 540 மீட்டர் உயரமுள்ள இந்தத் தீ விபத்தால் பெரும் பொருட்சேதம் ஏற்பட்டது.





# பாசமும் நேசமும்

சுகயீன முற்றிருக்கும் இந்தக் குரங்காருக்கு வைத்தியர் மருந்து கொடுக்கிறார். சுகயீனமடைந் திருந்தாலும், தன் குட்டியை விடவேயில்லைப் பார்த்தீர்களா?

குட்டியை இறுக்கிப் பிடித்தபடி மருந்து குடிக்கும் இந்தக் குரங்காரின் படம் சீனாவில் உள்ள வனவிலங்கு சரணாலயத்தில் பிடிக்கப் பட்டது. பாசமும், நேசமும் மனிதர்களுக்கு மட்டுமல்ல உலக ஜீவராசிகள் அனைத்திற்கும் பொதுவானது.

(பட உதவி: அஹமட் நியாஸ்-சியோல்.)

# குண்டுப் பெண் நடனம்

படத்தைப் பார்த்துப் பயந்து விடாதீர்கள். குண்டுப் பெண் ஒருவர் நடனமாடுகிறார் அவ்வளவு தான். எதற்காக நடனமாடுகிறார் என்கிறீர்களா?

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை அண்மையில் கோடை விடுமுறையைக் கொண்டாடியது.

அந்த விழாவில் குண்டுப் பெண்களின் போட்டி நடனமும் ஓர் அங்கமாக இருந்தது. விழாவில் நடனமாடிய குண்டுப் பெண்களில் ஒருவர்தான் இவர். பார்த்தால் ஏதோ நாலைந்து குழந்தைகளின் அம்மா என நினைக்கத் தோன்றும். இந்தப் பெண்ணின் வயது வெறும் 20 மட்டுமே.





# பிரிந்தோரம் சேர்ந்தோம்

ஜப்பானின் ஆதிக்கத்தில் 1904ம் ஆண்டு முதல் இருந்துவந்த கொரியாவை இரண்டாம் உலகப் போருக்குப் பின், அமெரிக்கா, கொரியாவையும், ரஷ்யா வட கொரியாவையும் ஆக்கிரமித்துக் கொண்டன.

அமெரிக்க-ரஷ்ய ஆதிக்கத்தில் இருந்து விடுபட்ட பின் வட கொரியாவும் தென் கொரியாவும் 1950ல் இருந்தே பிரிந்திருந்தன. 1980 முதல் இரண்டு கொரியாக்களும் இணைய பேச்சுவார்த்தைகள் நடந்தன.

இப்போதுதான் இவை இரண்டும் இணைந்துள்ளன. இதனால் இரு நாட்டுத் தலைவர்களும் கட்டித் தழுவது போல இராட்சத பொம்மைகளை அங்கு அமைத்துள்ளனர்.

## தகவல் பெட்டி


# காதோடு சொல்லுகிறோம்

தன்னை வஞ்சித்த நடன இயக்குநரை வெறுப்பேற்றுவதற்காக, தெலுங்கு சூப்பர் ஸ்டாரின் தம்பியுடனான நெருக்கத்தை இறுக்கமாக்கிக் கொண்டுள்ளாராம் 'சிம்ம' நடிகை. காதல் கலையில் கரைகண்ட தம்பி நடிகரோ, நடிகையுடன் தினம் 'ஆனந்த மழை'யில் நனைந்து வருகிறாராம்.

மப்பும் 'மந்தா'ரமுமாக இருக்கும் அந்த முன்னழகி நடிகை, தன்னுடன் அன்பாக நடந்து கொண்டமைக்காகத் தொழிலதிபர் ஒருவர் தொகை எழுதப்படாத செக் ஒன்றை கொடுத்தாராம். நடிகை அதில் முக்கால் கோடி ரூபாய் போட்டு நிரப்பி, வங்கிக்குச் சென்று பணம் எடுக்க முயல, பிரச்சனையாகி விட்டதாம். போலீஸ் தரப்பின் கடும் எச்சரிப்புக்குப்பின் நடிகை விடுவிக்கப் பட்டாராம்.

உயரமான வில்லன் நடிகர் சில வருடங்களுக்கு முன் 27 நட்சத்திரங்களில் ஒரு நட்சத்திரத்தின் பெயரைக் கொண்ட முன்னாள் கதாநாயகி நடிகையைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். சந்தோஷமாகப் போய்க் கொண்டிருக்கும் இவர்களது குடும்ப வாழ்க்கையில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என யாரோ வதந்தியைப் பரப்பி விட, இப்படிச் செய்தி போட்டு விட்டார்களே என எல்லோரிடமும் புலம்பி வருகிறாராம் நடிகர்.

மனைவிகள் இருவரும் பிரிந்து போன நிலையில், மனமொடிந்து போன 'கார்' நடிகர் நட்சத்திர ஹோட்டலில் வாசம் செய்து வருகிறார். வீட்டுப் பக்கமே போவதில்லை. இந்நிலையில் விநாயகரின் பெயரைக் கொண்ட நடிகரின் உடன்பிறப்பு சொத்தில் தனக்கும் பங்கு வேண்டும் எனக் கொடி பிடிக்கிறதாம். நடிகர் தான் முழுக்க முழுக்க சம்பாதித்தது என்றாலும் நடிகரின் தற்போதைய நிலையைப் பயன்படுத்திக் குரலை உயர்த்துகிறதாம் உடன்பிறப்பு.



நடன மாதுகளுடன் சூர்யா
படம்: உயிரிலே கலந்தது



# மன்னிப்புக் கேட்டார் பிரபு

செல்லையாவின் 'தாய்மாமன் மகள் பெரிய மனுஷியாகிவிட அவளுக்குச் சீர் செய்கிறான் செல்லையா.

அதே நேரம் இன்னொரு வழியில் முறைமாமன்களான தங்கமுத்துவும் சிங்கமுத்துவும் தம்மை செல்லையா அவமானப்படுத்தி விட்டான் என்று பஞ்சாயத்தில் புகார் செய்தனர்.

இதற்காக அக்கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டின் முன்பும் நின்று மன்னிப்புக் கேட்கும்படி பஞ்சாயத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதைக் கேட்ட செல்லையா சிரித்தபடி ஒவ்வொரு வீட்டின் முன்பும் நின்று மன்னிப்புக் கேட்டான்.

இந்தக் காட்சி 'மிட்டா மிராசு' படத்திற்காகப் படமாக்கப்பட்டது.

இதில் செல்லையாவாக பிரபு நடித்தார். மு.களஞ்சியம் இயக்கும் இப்படத்தில் நெப்போலியனும் முக்கியவேடம் ஒன்றில் நடித்துவருகிறார்.

சா... '...

...ரில ... 'சிங்க... மாற்ற... இ... நடித்த... புதுமு... இ... ரெட்டி... நோரு... சீ... டத்தை ... னார ... வசனம் ... ரவிச்...

# சீக்...

அ... நடித்து ... பிடிப்பு ... வருகிற ... பட... யாரும் ... அனுமதி...

அஜித் நடிக்கும் வேடங்க... அடித்து விடக்கூடாது ... இரகசியம்.

பவித்திரனி... சரவணசுப்பை... இயக்கி வ...

# அகத்தியன் படத்தில் அஜித் அர்ஜுன்

'காதல் கோட்டை' வெற்றிப் படக்கூட்டணியான தயாரிப்பாளர் பாண்டியன், இயக்குநர் அகத்தியன் அஜித் ஆகியோர் மறுபடி இணைந்து புதிய படம் ஒன்றை உருவாக்க இருந்தனர்.

இதில் அப்போது ஒரு மாற்றம். தயாரிப்பாளர் பாண்டியன் தயாரிப்பில் அகத்தியன் இயக்க அஜித்திற்குப் பதிலாக அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

# நடிக்கும் 'நாகலட்சுமி' சுகன்யா

நீண்ட இடைவெளிக்குப் பின் சுகன்யா கதாநாயகியாக நடிக்கும் படம் 'நாகலட்சுமி'.

பாம்பைத் தெய்வமாக வழிபடும் ஒரு பெண்ணின் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளும், அவற்றில் இருந்து அப்பெண் எவ்வாறு விடுபடுகிறாள் என்பதை சொல்லுவதாக இப்படத்தின் கதை அமைக்கப் பட்டுள்ளது.

சுகன்யா கதாநாயகியாக நடிக்க இவருடன் நிழல்கள் ரவி, வை.விஜயா, செந்தில், வடிவேலு, கோவை சரளா ஆகியோரும் பங்கு பெறுகின்றனர்.

இப்படத்திற்குத் திரைக்கதை அமைத்து இயக்குகிறார் கௌதமன் என்னும் புதிய இயக்குநர். இவர் இராம. நாராயணனின் பல படங்களில் படத்தொகுப்பாளராகப் பணியாற்றியவர்.

# மீண்டும் ராஜ்கிரண் சினிசிட்

'ராசாவின் மனசிலே', 'அரண்மனைக்கிளி', 'எல்லாமே என் ராசாதான்' ஆகிய தொடர்ச்சியான 3 வெள்ளி விழாப்படங்களைக் கொடுத்ததால் ஒரு படத்திற்கு ஒரு கோடி இந்திய ரூபாய்களை ஊதியமாக வாங்கியவர் ராஜ்கிரண்.

அதன் பின் வெளியான 'மாணிக்கம்', 'பொன்னு வௌயிற பூமி', 'பாசமுள்ள பாண்டியரே' ஆகிய 3 படங்களின் படுதோல்வி இவரை அதலபாதாளத்திற்குள் தள்ளிவிட்டது.

இப்போது இவரை நாயகனாகப் போட்டு பாரதிராஜா படமொன்றை இயக்குவதற்காகப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இப்படத்தின் மூலம் மறுபடி பாரதிராஜா-வைரமுத்து-இளையராஜா இணையவுள்ளதாகவும் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

இவை சாத்தியப்படுமானால் மீண்டும் ராஜ்கிரண் பழைய நிலைக்கு வந்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



நவீன்...
படம்: சின்னச் ...

# ஜோடி மாற்றம்

பிரபல மலையாள இயக்குநர் ஷாஜி கைலாஷ் இயக்கத்தில் விஜயகாந்த் நடிக்கும் 'வாஞ்சிநாதன்' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக சாக்ஷி நடிப்பதாக இருந்தது.

இப்போது இதில் மாற்றம் சாக்ஷிக்குப் பதிலாக சௌந்தர்யா நடிக்கவுள்ளார். விஜயகாந்த்-சௌந்தர்யா ஜோடியாக நடிக்கும் முதல் படம் இது.

# முரளி-மனோஜ் மோதல்

அண்மையில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'வெற்றிக்கொடி கட்டு' உட்பட பல வெற்றிப் படங்களைத் தயாரித்த சிவசக்தி பாண்டியன் தற்போது தயாரித்து வரும் படம் 'கடல்பூக்கள்.'

பாரதிராஜா இயக்கத்தில் முரளி-மனோஜ் இணைந்து நடிக்கும் இப்படத்தின் படப்பிடிப்புகள் தமிழ்நாட்டில் உள்ள முட்டம் என்ற கடற்கரைப் பிரதேசத்தில் படமாக்கப்பட்டு வருகின்றன.

இங்கு முரளியுடன் மனோஜ் மோதும் பயங்கர சண்டைக்காட்சியும் இப்படத்திற்காகப் படமாக்கப்பட்டது.

'கிழக்குச் சீமையிலே' படத்தின் கதாசிரியர் ரத்னகுமார் இப்படத்திற்கு கதை வசனத்தை எழுத, பாரதிராஜா திரைக்கதை அமைத்து இயக்கி வருகிறார்.

# மம்முட்டி-ரம்பா லடாய்

கேரள சூப்பர் ஸ்டார் மம்முட்டிக்கும் ரம்பா கிருஷ்ணனுக்குமிடையே 'துபாய்' மலையாளப்படத்தின் படப்பிடிப்பின் போது லடாய் ஏற்பட்டுள்ளது.

மம்முட்டி-முரளி இணைந்து நடிக்க சூப்பர் குட் ஃபிலிம்ஸ் ஒரு படத்தை தயாரிக்கவுள்ளது. விக்ரமனிடம் உதவியாளராக இருந்த லிங்குசாமி இயக்குநர் அவதாரம் எடுக்கும் இப்படத்திற்கு 'ஆனந்தம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

மம்முட்டிக்கு ஜோடியாக ரம்பாவையும், முரளிக்கு ஜோடியாக ரோஜாவையும் நடிக்க வைக்க நினைத்தார் இயக்குநர்.

ரம்பாவுடன் மம்முட்டி நடிக்க மறுத்து விட்டதால் வேறொருவர் நடிக்கவுள்ளார்.



பிரேம்-ராதிகா சௌத்ரி
படம்: குரோதம் 2

முகப்பில் ராஜ்கிரண் ம பா

# தமிழில் 'கொமோடோ'

ஹாலிவுட் படங்கள் இந்திய மொழிகளில் மொழி மாற்றப்பட்டு வருவது சாவசாதாரணமாகி விட்டது. ஸ்டீவன் ஸ்பீல்பேர்கின் 'ஜுராஸிக் பார்க்' தான் முதன் முதலில் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய இந்திய மொழிகளில் மொழிமாற்றப்பட்டு வெளியாகிய முதல் ஹாலிவுட் படம்.

இந்த வரிசையில் தற்போது தமிழ் பேச இருக்கும் ஆங்கிலப் படம் 'கொமோடோ'. மிகவும் பயங்கரப் பிராணியான வைத்துத் தயாரிக்கப்பட்ட படத்திற்கு 'கொமோடோ' என்றே பெயரும் வைத்து விட்டனர். 'அனகொண்டா' படத்தின் கதையை எழுதிய டோனி ஜக்வித் அலன் ரிச் என்பவரே இதன் கதையையும் எழுதியுள்ளார். படத்தை மைக்கல் லோன்டிலி இயக்கியுள்ளார்.

# தாஜ்மகாலில் 'வானவில்'

கடந்த சில வருடங்களாக உலகின் ஏழாவது அதிசயமான தாஜ்மகாலில் படப்பிடிப்புக்கள் நடத்த அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. ஆனால் எப்படியோ இந்திய மத்திரி அரசிடம் அனுமதி வாங்கிப் படப்பிடிப்பை நடத்தியுள்ளார் இயக்குநர் மனோஜ்குமார். இவர் இப்போது அர்ஜுன்-புதுமுகம் அபிராமி இணைந்து நடிக்கும் 'வானவில்' படத்தை தயாரித்து இயக்கிவருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பையே தாஜ்மகாலில் நடத்தினார்.

* இன்றைய இந்தி... ஸ்டாரான ஹ்ரித்திக் ரோ... படமெடுக்கும் முயற்சியில் ... மணிரத்னம்.

* பார்த்திபன் தயா... லோ பாய்ஸ்' என்ற பெய...

* தமிழில் முன்னணி... படமொன்றில் ஒரேயொரு...

* 'குபேரன்' படத்தை... மீண்டும் நடிக்கப் போகி...

* மனோஜுடன் இணை... பாடிய மீனா, விரைவில் ...

* கமலின் 'தெனாலி'... மலையாள சூப்பர் ஸ்டா... இணைந்து தமிழ்ப்படம் ...

* என்னம்மாக் கண்ணு... களுக்கு 'சுபேச்சை', 'நாக...

* தமிழ்-தெலுங்கு-மலை... இவர் இப்போது மலையா...

* சின்னி ஜெயந்தின் ... படமொன்றில் நடித்து ... நடித்த ராணி முகர்ஜி ...

* ஹொலிவுட் படங்க... இப்போது 'ஹொலிவுட்' ... உபேந்திரா இப்படத்தின் ...

## ...குமார் நடிக்கும் ...ங்கத் தமிழன்'

...கில் 'சிவன்னா' என்ற பெய ...யாகி ஓடிய படம், தமிழில் ...ழன்' என்ற பெயரில் மொழி ...டு வருகிறது.

... சாய்குமார் கதாநாயகனாக ...ார். இவருக்கு ஜோடியாக ...மான்யா நடித்திருக்கிறார். ...னுடன் பொன்னம்பலம், ராமி ...னேஷ், சாருஹாசன், போன் ...டித்துள்ளனர்.

...ன் இசையமைத்துள்ள இப்ப ...கேஸ்வரராவ் இயக்கியுள் ...த மொழிமாற்றுப்படத்திற்கு ...றுதுகிறார் சாய்குமாரின் தம்பி

## அறிமுக நாயகியின் 'அல்வா'

'விரும்புகிறேன்' படத்தின் அறிமுக நாயகி ஸ்நேகா முதல் படம் வெளியாகும் முன்னரே பிரச்சனைக்குரிய நடிகை என்று பெயர் எடுத்து விட்டார். அதுவும் இவரை அறிமுகப்படுத்திய இயக்குநருக்கே 'அல்வா' கொடுத்து விட்டார்.

பிரசாந்த் நாயகனாக நடிக்கும் 'விரும்புகிறேன்' படத்தை மணிரத்னத்தின் சிஷ்யா சுசி கணேசன் இயக்குகிறார். இவரை நடன இயக்குநர் கலா சிபார்சு செய்ததால் ஒப்பந்தம் எதுவும் போடாமல் நடிக்க வைத்தார் சுசிகணேசன்.

ஸ்நேகா இரண்டாவதாக ஒப்பந்தமான படம் 'சுகம்'. 'அலைபாயுதே' மாதவன் நடிக்கும் இப் படத்தில் நடிக்கப் போய்விட்டதால் 'விரும்புகிறேன்' படம் அப்படியே முடங்கிக் கிடக்கிறது.

## புத்திசாலிப் பேர்வழிகள்

இப்போதிருக்கும் நடிக, நடிகையர் படுபுத்திசாலிப்பேர்வழிகள். தாங்கள் சம்பாதிக்கும் பணத்தை பங்களாக்கள், ஹொட்டல்களாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மார்க்கெட் போனாலும் இவற்றை வைத்துப் பிழைத்துக் கொள்ளலாமல்லவா?

விஜய், தேவயானி, பிரசாந்த், மீனா ஆகியோர் சென்னை நகரில் பங்களாக்கள் ஹொட்டல்கள் கட்டி வருகிறார்கள்.

## மறுபடி ஆரம்பம்

புது இயக்குநர் அன்பழகன் முரளி-லைலா நடிக்க 'காம ...ராக' என்ற படத்தை ...குமார் ஒன்றரை வரு...டங்களுக்கு முன் தொடங்கினார். இயக்குநரைப்பற்றி ...சிலர் படத்தின் தயாரிப்பா...ளர் ஆர்.பி.சௌத்ரியிடம் இல்லாததும் பொல்லாததும் சொல்லி விட அப்படியே கிடப்பில் போட்டு விட்டார் தயாரிப்பாளர்.

கிட்டத்தட்ட முக்கால்வாசிக்கு மேல் முடிவடைந்திருந்த அந்தப் படத்தை சில தயாரிப்பாளர் விடம் போட்டுக் காட்டினார் அன்பழகன். அவர்களுக்குப் படம் பிடித்துப் போக இதன் பாக்கி வேலைகள் மறுபடியும் ஆரம்பமாக உள்ளன.

## "அந்த மாதிரியான காரியம் பண்ணமாட்டேன்"-ரம்பா

தமிழகத்திரையுலகில் சில வருடங்கள் அதிக இரசிகர்களைத் தன்வசம் ஈர்த்துக் கொண்டவர் ரம்பா என்பதை மார்க்கெட் தொய்வு காரணம்? அவரே கூறியவை:

'தமிழில் சரத் ஜோடியாக 'கேசவன்', முரளி ஜோடியாக 'தென்றலைத் தூது விட்டு', அருண் குமார் ஜோடியாக 'அன்புடன்', 'தெலுங்கில் இரண்டு படங்கள் இந்தியில் 4 படங்களில் நடித்து வருகிறோம் என் மார்க்கெட்டில் தொடர்பு கிடையாது.

எனது தொடைகளை இன்சூரன்ஸ் செய்திருப்பதாகக் கூறுகிறார்கள். இதைப்பற்றிக் கூறுவதற்கே கேவலமாக இருக்கிறது. அந்த மாதிரியான காரியம் எதுவும் பண்ணமாட்டேன்," என்று தெரிவித்துள்ளார் ரம்பா.

## ...ட் 'சிட்டிசன்'

... பல்வேறு கெட்-அப்களில் ...ும் 'சிட்டிசன்' படத்தின் படப் ...ன் படு இரகசியமாக நடந்து ...

...டிப்பு ஆட்களைத் தவிர வேறு ...டப்பிடிப்புத் தளத்தினுள் ...க்கப்படுவதில்லை. படத்தில் ...ப பார்த்து யாரும் கொப்பி ...பதற்காகத்தானாம் இத்தனை ...

... உதவியாளராக இருந்த ... என்பவர் இப்படத்தை ...கிறார்.



## 'பலான' படம்

'இது முடிவதில்லை' என்ற படத்திற்கு 'நோ எண்டஸ்' என்று ஆங்கிலத் தலைப்பும் வைத்திருக்கிறார்கள். படத்தைப் பற்றிக் கூறிய சினிமா நிருபர் ஒருவர் இதற்கு 'நோ ட்ரெஸ்' என்று பெயர் வைத்திருக்கலாம் என்று கிண்டலடித்துள்ளார். அந்தமாதிரியான படம் தான் இது.

பல தொலைக்காட்சித் தொடர்களை இயக்கித் தோல்வி கண்ட அருந்த... ராஜா என்பவர் இப்படத்தை இயக்கியுள்ளார்.



சுமந்த்-அந்த்ரா மாலி
படம்: காதல் வானிலே

...ந்த்ரா
...ன்னக் கண்ணிலே

திரையுலக மறுபக்கம் 166
தமிழ்நாட்டிலிருந்து மயன்

# மனதைக் கனக்க வைக்கும் நடிகையின் சோக வாழ்க்கை

நடிகைகள் என்றால் கார், பங்களா, ஏகப்பட்ட பணம் என்று உல்லாச வாழ்க்கை வாழ்வதாகப் பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பெரும்பாலான நடிகைகள் பணத்துடன் பெரும் சோகத்தையும் சம்பாதிக்கின்றனர்.

பழம் பெரும் நடிகை விஜயகுமாரி தன் வாழ்க்கையைப் பற்றி எழுதிய ஒரு கட்டுரையில் இருந்து ஒரு சிறு பகுதி இது.

'பச்சை விளக்கு' எனக்கு நல்ல பெயரையும், புகழையும் அள்ளிக்கொடுத்த படம். அந்தப்படத்தில் டாக்டராக இருந்தாலும் கணவரது மனம் புண்படக் கூடாதெனத் துடிக்கும் பெண்ணின் பாத்திரத்தில் நான் நடித்தேன்.

அதில் நான் தத்ரூபமாக நடித்திருந்ததாகப் பலர் பாராட்டினார்கள். என் உள்ளப் புலம்பலின் எதிரொலிதானே அந்தக் கதாபாத்திரம்.

அமைதியான இல்லற வாழ்க்கைக்காகத் தன் படிப்பு, பட்டம், வேலை எதையும் துறக்கத் துணிந்த அப் பெண்ணின் தூய நேசத்தை அவன் கணவன் அந்தப்படத்தில் அலட்சியப்படுத்தியதுபோல ...

...காக (எஸ்.எஸ்.ராஜேந்திரன்) எனக்குக் கிடைத்த பல அரிய வாய்ப்புக்களை, அமைதியான வாழ்க்கையை இழந்திருக்கிறேன்.

'நெஞ்சில் ஓர் ஆலயம்', 'கற்பகம்' போன்ற வெற்றிப்படங்களில் நடிக்க என்னை அழைத்தும் அவருக்காக நான் விட்டுக் கொடுத்தேன். ஆனால் என் தூய நேசத்தைப் புரிந்து கொள்ள அவரால் முடியவில்லை.

'மதுவை நாடுவதும், மாதுவைச் சேருவதும் கேடு தரும்' என்று நான் அவருக்கு எடுத்துச் சொன்ன அறிவுரைகள், போதையில் மூழ்கித்திளைத்த அவர் காதுகளுக்கு எட்டவில்லை.

அடுத்தடுத்து அடி உதைகள் வாங்கியும், அவருக்குக் கட்டுப்பட்டு, அவர் அணைப்பில் சுகம் காண நினைத்த நான், நடிப்பையும் கைவிட்டு விட்டு அவர் நிழலில் தங்கி, அவரைத் திருத்த முயன்றேன். ஆனால் அப்போதுதான் அவர் என் மீது வைத்திருக்கும் நேசத்தை விட, என் பணத்தை நாடும் ஆசைதான் அதிகம் என்பதைப் புரிந்து கொண்டேன்.

நான் நடிப்பதை நிறுத்திய இரு வருடங்களில் வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுப்பதைக் கூட அவர் பாரமாக நினைத்தார்.

இத்தனை நாள் சம்பாதித்த பணத்தை எண்ணிக் கூடப் பாராது அப்படியே அவரிடம் கொடுத்து வந்த எனக்கு, சாப்பாட்டிற்குக் கூட அவர் பணம் கொடுக்காதபோது நொந்து போனேன். என் மன வேதனையை வெளியிட முடியாது தவித்து நின்றேன்.

அவரைப் பிரிந்து என் பழைய வீட்டிற்கே திரும்பிய நிலையில், என்னை நம்பியிருந்த தங்கையைத் திருமணம் கொடுக்க நான் அவ்வீட்டை விற்க நேர்ந்தது.

அதற்குப் பின் எனக்கு நிழல் தேடிக் கொள்ள வாழ்வைத் தொடர, அதற்குத் தேவையான பணம் தேடிக் கொள்ள மீண்டும் படங்களில் நடிக்க ஆரம்பித்தேன்.

படித்தால் மனசைக் கனக்க வைக்கும் இந்தக்கட்டுரை இப்படியே சோகமாகத் தொடர்கிறது.

## மினி சினி

...திரையுலகின் இளம் சூப்பர் ...ஜனை நாயகனாக வைத்துப் ...றங்கியிருக்கிறார் இயக்குநர் ...

... இயக்கி நடித்த 'ஹவுஸ் ஃபுல்' படம் 'பாரத் டாக்கீஸ்' ... இப்போது தெலுங்கில் மொழி மாற்றப்பட்டு வருகிறது.

... வந்து கொண்டிருக்கும் லைலா சத்தமில்லாமல் தெலுங்குப் ... பாடல்காட்சியில் தோன்றி நடனமாடி உள்ளார்.

... தொடர்ந்து இராமநாராயணனின் படமொன்றில் கார்த்திக் ...

... 'பதினாறு வயதினிலே' ஆல்பத்தில் சொந்தக் குரலில் ... படத்திலும் பாட இருக்கிறார்.

... படத்தில் ஜெயராம் வேடத்தில் முதலில் நடிக்கவிருந்தவர் ... ஒருவரான மோகன்லால். விரைவில் இவர் கமலுடன் ... நடிக்கவுள்ளார்.

... வெற்றிப்படத்தின் பின் சத்யராஜ் நடிக்கவிருக்கும் 3 படங் ... கோமாளி', 'ஜூட்டடி' எனப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

... ளைப் படங்களில் வில்லனாக நடித்தவர் கேப்டன் ராஜு ... படம் ஒன்றை இயக்கி வருகிறார்.

... உனக்காக மட்டும்' படத்தில் அறிமுகமான ஆதித்யா இந்திப் ...கிறார். இதில் இவருக்கு ஜோடியாக 'ஹேராம்' படத்தில் ...நடிக்கிறார்.

... பார்த்து இந்தியப் படங்கள் தயாராகி வருவதுண்டு. ... என்ற பெயரில் கன்னடப்படமொன்று தயாராகிறது. ... நாயகன்.



அலெக்ஸ்-ஷாலு
படம்: வைஷ்ணவி

## டி.ஆர். படத்தில் முஸ்லிம் பெண்ணாக குஷ்பு

சகலாகலா வல்லவன் என அழைக்கப்படும் டி.ராஜேந்தரின் 'சொன்னால்தான் காதலா' படத்தில் பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்து வருகின்றனர்.

இப்படத்தில் வரும் குஷ்பு, முஸ்லிம் பெண்ணாக நடித்து வருகிறார். இதில் 7 பாடல்கள் இடம்பெறுகின்றன. பதிவு செய்யப்பட்டிருக்கும் இப்பாடல்களின் படப்பிடிப்புகள் யாவும் இயற்கை எழில் கொஞ்சும் இந்திய நகர்களில் படமாக்கப் படவுள்ளன.



# கண்ணிவெடியில் சிக்கிய யானை


காட்டு யானைகளைக் கொன்று அவற்றின் தந்தங்களைக் களவெடுத்து விற்றுப் பணம் சேர்க்கும் கொடியவர்கள் வாழும் இந்தப் பூமியில், கண்ணி வெடியில் சிக்கி தனது ஒரு காலை ரணமாக்கிக் கொண்ட ஒரு யானைக்கு சத்திர சிகிச்சை செய்து குணமாக்கி நடமாட விட்டுள்ளார்கள். இந்தச் சாதனை நிச்சயமாக எமது நாட்டில் இடம் பெறவில்லை. தாய்லாந்தில்தான் யானைக்கான சத்திரசிகிச்சை நடைபெற்றிருக்கிறது.

காட்டு மரங்களை வெட்டி அவற்றை வேறிடங்களுக்குக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட மோதலா என்ற யானை, காட்டில் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் தனது முன்னங்கால் ஒன்றை வைத்து விட்டது. எலும்பு முறிந்து சதைகள் பிளந்து காணப்பட்ட இந்த யானை படும் வேதனையைக் கண்டு மனமுருகிய சிலர், அதனைக் கொன்று விடுவதே நல்லது என்று தீர்மானித்தனர். தாய்லாந்திலும் உலகின் வேறுபல பாகங்களிலும் இந்தத் தகவல் பரவியதும், இந்த யானையைக் காப்பாற்ற பலர் பொருளாதார உதவிகளை செய்ய முன்வந்தனர்.

தலைநகரான பாங்கொக்கிலுள்ள சியான் மாய் பல்கலைக் கழக மிருக வைத்திய நிபுணர்கள் ஒன்று சேர்ந்து யானைக்கு சத்திரசிகிச்சை செய்தனர். எலும்புகள் பொருத்தப்பட்டன. 30 சென்ரி மீட்டர் அளவிலான அழுகிய சதை அகற்றப்பட்டது. 3 மணிநேரம் மட்டுமே சத்திரசிகிச்சை நீடித்தது. இப்பொழுது மோதலா குணமாகி விட்டது. போதுமான உணவை உட்கொண்டு மெல்ல மெல்ல நடக்க ஆரம்பித்து விட்டது.

38 வயதான மோதலா ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பிப் பிழைத்தது. தாய்லாந்து மக்கள் யானையைத் தம் மதிப்புக்குரிய விலங்காகக் கணித்து வருகின்றனர்.

இந்த யானை பிழைத்து விட்டதனால் நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ■



## சத்தியம் தழைக்கச் செய்வோம்!

ஆட்சி பிடிக்கும் நோக்கில்
அரசியல் கட்சி எல்லாம்
மீட்சி செய்வோம் என்று
மீண்டும் தேர்தல் என்னும்
காட்சிக் கண்கள் காண
களத்தில் இறங்கிக் கொண்டு
நாட்டில் பொய்யால் நல்ல
நாடகம் போடுது அன்றோ!

செத்தவர் வாக்கைக் கூட
செறிப்புடன் வாங்கிக் கொள்ள
உத்தமர் வேசம் போட்டு
உறுதிகள் செய்யும் இந்தச்
சித்தரின் வாக்கை நம்பி
சிறப்புடன் வாக்கைப் போட்டால்
எத்தராய் மாறி வதைக்க
எத்தனை தேர்தலில் கண்டோம்....?

"பாராளுமன்றம் சென்று
பாட்டாளி குறைகள் தீர்க்க
சீரான வழிகள் செய்வோம்.
சிந்தனை செய்து வாக்கை
நேராக எமக்குப் போட்டால்,
நித்தமும் நீங்கள் வாழ
ஏராளம் செய்வோம்" என்றோர்
ஏமாற்றம் தானே தந்தார்!

இத்தனை கண்ட பின்பும்
என்னதான் செய்ய வென்று
புத்தனை மறந்து விட்டு
போர்க்கொடி தூக்கும் நாட்டில்
மெத்தனப் போக்காய் அன்றி
மிதவா தத்தோடு வாக்கை
சத்தியம் தழைக்க வென்று
சகலரும் போட்டால் நன்றே!

பூண்டுலோயா மெய்யன் நட்ராஜ்.

## காதலிக்க விடுங்கள்

காதலிக்கவிடுங்கள்,
பெற்றோர்களே......
மற்றோர்களே......!
எங்களைக் காதலிக்கவிடுங்கள்!
***
திருமணத்திற்கு
சீதனம் கேட்கமாட்டோம்;
சீதனமாக....
பெண்ணையே கேட்போம்!
***
சீர்வரிசையாக
அவள் சிரிப்பைமட்டுமே கேட்போம்;
எங்களை காதலிக்கவிடுங்கள்!
***
தாலிக்கயிற்றுக்குள்
எங்கள் எண்ணங்களை
தூக்கிடாதீர்கள்!
***
மோதிரத்திற்குள் விரலாக
எங்களை....
முடக்கிவிடாதீர்கள்!
***
திருமணத்தால்....
இரு உடல்களை இணைக்கமுடிந்த
உங்களால்–எங்கள்
மனங்களை இணைக்கமுடிவதில்லை!
***
எம் இரு மனங்களை இணையவிடுங்கள்
பின்.....
திருமணத்தை நிகழ்த்துங்கள்!
***
'கௌரவத்திற்காக என் காதலை
பிரிக்கத் தெரிந்த என் பெற்றோருக்கு
மகளுக்கு மணம் என்றால்
சீர்தேவை என்பது மட்டும்
புரியாத புதிரானதால்...
இன்று நானொரு
ஐம்பது வயதுக் கன்னி!'
என்று.....
முதிர்கன்னிகள் புலம்பும் ஓசை
உயிரை உரசும் நிலைவராது
எங்களை காதலிக்கவிடுங்கள்!
***
காதலர் நாம்
பிழைவிடமாட்டோம்;
காதலை நீங்கள்
கௌரவித்து ஏற்றுக்கொண்டால்!
***
இளமையின் தேவை மட்டுமல்ல
இந்த உலகின்
இயக்கமும் காதலே!
அதனால்....
எங்களைக் காதலிக்கவிடுங்கள்!
பெற்றோர்களே...!
மற்றோர்களே....!
எங்களை காதலிக்கவிடுங்கள்!

சு. கமலகாந்தன்–வவுனியா.

## 'போஸ்ரர்கள்'

பெரிய வீடு கட்டினேன்–அதனை
சூழ்ந்து பெரிய
மதில்களைக் கட்டினேன்.
மதில்களுக்கு,
பெயின்ற் அடிக்க எண்ணி,
மறு தினம்
மதில்களைப் பார்த்தேன்–ஆனால்
அத்தனையும் பல்வேறு
நிறமயம்...(?)
ஓ....!
தேர்தல் காலமல்லவா?
அது தான்....
நிறமயமான 'போஸ்ரர்கள்'
மறுதினம்... அதனை
அகற்ற எண்ணினேன்–ஆனால்
அத்தனையும் அகன்று போயின
சிலரது வாக்குறுதிபோல்....(?)
அந்த ஊர்
'ஆடு'களினாலும், 'மாடு'களினாலும்!

க. கோகுலதாஸ்–வவுனியா.

## தேன் கிண்ணம்

## பேனா நண்பர்கள்



பெயர்: எம். நஜ்மி,
வயது: 23
முகவரி: 33, அல்-மனார்,
மண்டலக் குடா, கல்பிட்டி.
பொழுது போக்கு:
பேனா நட்பு



பெயர்: ஷி. வனிதா,
வயது: 17
முகவரி: பிரதான வீதி,
தம்பட்டை-1, தம்பிலுவில்.
பொழுது போக்கு:
வழமையானவை

## நில்–கவனி–முன்னேறு



வாழ்க்கையிலே ஈடுபாடில்லாமல் மேலோட்டமாய்ச் சோம்பித் திரிவதால் எவ்வளவோ சந்தர்ப்பங்களையும் இன்ப நலன்களையும் நாம் இழந்து விடுகிறோம். வாழ்வு சப்பிட்டுப் போகிறது. எதிலும் ஆழப் பதியாத காரணத்தால் ஒன்றிலும் நிலைத்து நிற்கிற விருப்பமில்லாமல் போய்விடுகிறது.

வாழ்க்கையில் மேலுக்கு வர வேண்டுமென்று எவ்வளவோ பேர் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தாங்கள் செய்து வரும் வேலையில் முழு ஈடுபாட்டோடு ஆழப்பதிந்திராத காரணத்தால் அவர்களுடைய முழுத் திறமையும் பயன்படுத்தப் பெறாமலேயே வியர்த்தமாகி விடுகிறது. தாம் பார்த்து வரும் தொழிலில் வெற்றி கிடைக்கும் என்ற நிச்சயம் அவர்களுக்கு இருப்பதில்லை. இடுக்கண் நேர்ந்தால் மனம் தளர்ந்து விடுகிறது. சமாளித்துக் கொள்ள வேண்டுமென்ற சிரத்தையில்லை. சிரத்தை இல்லாததால் முழு ஆற்றலும் பிரயோகமாவதில்லை. ஆகக்கூடி கடைசியில் தோல்வியும் ஏமாற்றமுமே மிச்சம். இதைச் செய்தால் லாபம் வருமா? அவன் அதைச் செய்து பணம் சேர்ந்து விட்டானே, நாமும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்று சதா சபலப்பட்டுக்கொண்டே இருப்பதால், ஒன்றையும் சிறப்பாகச் செய்துவிட முடியாது. நம்முடைய குறிக்கோள் சரியானது என்ற நம்பிக்கை பிறந்துவிட்டால் அதில் திடமாக ஈடுபட்டுவிட வேண்டும். குரங்குப் பிடியாய் நின்று முன்னேற வேண்டும். நமக்கு வேண்டாதவர்கள் நம்மை முட்டித் தள்ளுவார்கள். கேலி செய்வார்கள். நயவஞ்சகம் புரிவார்கள். நாம் தொல்லை தாங்காமல் தெறிபட்டு ஓடிப்போய் நமக்குப் பிடிக்காத இடங்களில், சூழ்நிலையில் மாட்டிக்கொண்டு தவிக்கும்படி செய்வார்கள். சந்தர்ப்ப பேதங்கள் எவ்வளவோ மனக் கசப்பையும், அசௌகரியங்களையும் அவமானங்களையும் பொறுக்க முடியாத அளவில் நம் மேல் வாரி வாரி இறைக்கும். இவற்றைக் கண்டு வெகுண்டடித்து ஓடிவிடக்கூடாது. இவற்றையெல்லாம் சமாளிக்கச் செய்ய வல்லவை சரியான தெளிவான குறிக்கோளும், அதை அடைய உதவுகிற அசைக்கமுடியாத, ஆழ்ந்த ஈடுபாடும் ஆகும். ஈடுபட்டு ஒரு காரியத்தைச் செய்யும்போது, இதற்கு முன் நாம் கண்டிராத ஒரு புதுச் சோபை அதில் ஒளிர்வது நமக்குப் புலனாகும். அப்போது பயம், சந்தேகம், திறமையின்மை எல்லாம் பறந்தோடிப் போகும். தன்னம்பிக்கை பிறந்துவிடும், வாழ்வின் தேக்க நிலை மாறி, சுறுசுறுப்பும், இயக்கச் சூழலால் உண்டாகும். இன்பவெறி நிலையும் உண்டாகி, மேலும் மேலும் நமது குறிக்கோளை நெருங்க நமக்கு ஆக்கம் உண்டாகிவிடும். உயிரும், உணர்வும், அறிவும், ஆற்றலும் ஒருங்கே படியும் வண்ணம் ஒரு காரியத்தில் ஆழ இறங்கி முயலும்போது நமக்கு உண்டாகும் உற்சாகம் மகா இன்பகரமானது. இந்த இன்ப நிலை நீடித்து நின்றால் ஒழியப் பயன் இல்லை. உற்சாகமும் விடா முயற்சியும் சேர்ந்தால் ஈடுபாடு உண்டாகும். நிலையான ஈடுபாடு நமது குறிக்கோளை அடைய உதவுகிற மகா சக்தி வாய்ந்த ஒரு கருவி.

சிலவேளை, நம் மனதில் உற்சாகம் பொங்கித் ததும்பும். அப்போது எந்தக் காரியத்தையும் அனாயாசமாகச் செய்து முடித்துவிடலாம் போல் தோன்றும். இதே நிலை நீடித்து நிற்கும்படி நாம் அறிவையும், மனத்தையும் பழக்கிக் கொண்டு விட்டோமானால், வாழ்க்கையில் எத்தனையோ மகத்தான காரியங்களைச் சாதித்துக் கொண்டு விடலாம்.

அறிவைத் தாபத்தோடு தேடியலைவதால் அறிவாளியாகலாம். நன்மையைத் தாபத்தோடு தேடியலைவதால் ஞானியாகலாம். உயர்ந்த செயல்களையும், லட்சியங்களையும் தாபத்தோடு தேடியலைவதால் கர்மவீரனாகலாம். ■

## இந்தவாரம் உங்கள் பலன்

17.09.2000 முதல் 23.09.2000வரை

ஜோதிடர் 'கானா'

### மேடம் :

பிரஸ்தாப நிலையுடன் பலவித மாற்றம், பணச்செலவுடன் வீண் அலைச்சல், தூரதேச உறவினர்கள் வருகை ஏற்படும். எடுத்த கரும நிலை தடை. பெண்களுக்கு வார இறுதியில் சுபசெய்தி கிடைக்கும். தொழில் இல்லாதோருக்கு, தொழில் வசதி கிடைக்கும். அச்சுவினிக்காரர் எதிலும் கவனம் தேவை.

அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 20, 23.

### இடபம் :

தொழில் கஷ்டமும், பணவிரயமும் சண்டைச்சசரவுடன் வெளியோரால் கெட்டபெயர் உண்டாகும். எதிலும் சலிப்பான நிலை, தூர இடத்தொடர்பு முறிவுகள் ஏற்படும். தொழில் நுட்பத்துறை சார்ந்தோர் உயர்வுகளைப் பெறுவார்கள். ரோகிணி நட்சத்திரருக்கு பல பிரச்சனைகள் வரும்.

அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 17, 21.

### மிதுனம் :

அலைச்சலுடன் தொழிலில் தடை. பணவரவுகள் தாமதப்படும் சகோதரரால் சில உதவிகள் கிடைக்கும். பெண்களுக்கு திருமண முயற்சிகள் தொடரும். திருவாதிரை ஆண்கள் எதிலும் பொறுப்புடன் நடக்கவும்.

அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 20, 21.

### கடகம் :

புதிய சிந்தனை, செலவுகள் அதிகரித்த நிலை. தூரதேச உறவினர் வருகை அல்லது நோய்துன்ப நிலை மாற்றம். வெளியோர்களின் தலையீடு கல்வி, பொன் தொழில் செய்வோர் அதிக உயர்வு பெறக்கூடிய பலன் உள்ளது.

அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 18, 21.

### சிம்மம் :

தூர இடத்துத் தொடர்புகள் கிடைக்கும். எதிர்பார்த்த நன்மைகள் தொடர்ந்து கிடைக்கப்பெறும், திருமண, காதல் தொடர்புகளால் பல நன்மைகள் தொடரக்கூடிய பலன் உள்ளது. தொழில் உயர்வு பெறும் பயணமுயற்சிகள் தொடரும்.

அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 19, 23.

### கன்னி :

பெண்களுக்கு பொறுப்புக்கள் கூடும். திட்டமிட்ட கருமம் தாமதப்படும். தூர இட துக்க செய்திகள் தொடரும். கல்வி, கலைத் துறை உள்ளோருக்கு உயர்வு பெறப்பலன் உள்ளது. உத்தர பெண்களுக்கு ஓரளவு நற்பலன் சேரும்.

அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 21, 23.

### துலாம் :

மனதில் மகிழ்ச்சியுடன் பணப் பொருள் வசதிகள் திட்டமிட்ட விடயங்கள் கைகூடும். சகோதரரின் உதவிகள் குடும்பத்தில் நல்ல உயர்வுகள் கிடைக்கும். சுவாதி பெண்கள் பல நன்மைகள் பணப்பொன் வசதிகள் பெற உள்ளனர்.

அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 19, 23.

### விருச்சிகம் :

வெளிப்படையான செயற்பாடும் செயல் ஊக்கமும் பல வெற்றி வாய்ப்புக்கள் வந்து சேரும். புதிய முயற்சிகள் பணவரவுடன் வார இறுதியில் புகழும் உண்டாகும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணமுயற்சி வெற்றி அளிக்கும். அனுஷ நட்சத்திரர் நன்மை புகழ் அடைவர்.

அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 18, 21.

### தனுசு :

இடைவெளியாக இருந்த கல்வி முயற்சி வெற்றிபெறும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும். வெளியிட முயற்சிகள் நன்றாக அமையும். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். வாகன தொழில் செய்வோர் ஏற்றம் பெறுவார்கள்.

அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 20, 22.

### மகரம் :

பயணமுயற்சிகள் பிள்ளைகளின் முடிவுகளில் மாற்றம். எதிர்பார்த்த தொழில் அல்லது திருமண முயற்சிகளில் மாறுபட்ட நிலை. உடலில் நோய் துன்பம் வந்து சேரும். மாமன் வழி உதவிகள் வார இறுதியில் தொடரும். சிறுபிள்ளைகளுக்கு நற்பலன் ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 20, 22.

### கும்பம் :

ஒப்பந்த தொழில் ஏஜென்சிக்காரருக்கு தடைகள் ஏற்படும். தூர இடத்து உறவினரால் பிரச்சனைகள் குடும்பத்தில் பிள்ளைகளால் கவலை. பணப் பொருள் விரயமும் மருத்துவச் செலவும் சலிப்பான நிலைதென்படும்.

அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 18, 22.

### மீனம் :


பெரியோர்களின் ஆசிர்வாதமும் ஆலயதரிசனமும் கிடைக்கும். கல்வி, இடமாற்ற முயற்சிகள் என்பனவும், தூர இட சகோதரர்களால் உதவியும் பண வசதிகள் ஏற்படும். உத்தரட்டாதி நட்சத்திரர் நன்மைகள், மகிழ்ச்சி அடைவார்கள்.

அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : மரூண் வர்ணம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 19, 21.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பொன்னான கால்கள் புண்ணாகலாமா?



உங்கள் பொன்னான மேனியைப் பாதுகாப்பது போலவே பாதங்களையும் பாதுகாக்க வேண்டாமா? பெண்கள் பலர் தமது பாதங்களைப் பற்றி அவ்வளவாக அக்கறைப்படுவதில்லை.

பாதங்களைப் பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்?

★ பாதங்களைத் தினமும் இருதடவைகள் சவர்க்காரம் போட்டுக் கழுவி நன்றாகத் துடைக்க வேண்டும்.

★ இரவு படுக்கைக்குச் செல்லும் முன் தேங்காய் எண்ணெயைச் சிறிது எடுத்துப் பாதங்களில் நன்கு தேய்த்து மசாஜ் செய்து விட்டுப் பிறகு படுக்கைக்குச் செல்லுங்கள்.

★ வாரத்தில் ஒரு முறை ஒரு பிளாஸ்டிக் பாத்திரத்தில் குளிர்ந்த நீர் எடுத்து அதில் சிறிது ஷம்பூவைக் கலக்கி 10-15 நிமிடங்களுக்குப் பாதங்களை அதில் மூழ்க வைத்திருங்கள். பிறகு நகங்களை வெட்டிச் சுத்தப்படுத்துங்கள்.

★ தினமும் சற்று நேரமாவது நடவுங்கள். இது பாதங்களைப் பலப்படுத்தும்.

★ மிகச் சரியான அளவு காலணிகளை அணியுங்கள். காலணிகளைச் சுத்தமாக வைத்திருப்பது மிக முக்கியம்.

★ 15 நாட்களுக்கு ஒரு முறை கால் நகங்களுக்கு நகப் பொலிஷ் இடுங்கள். அழகு பளிச்சிடும். ▫

## கண்கண்ட கை வைத்தியம்

☛ ஆறாத வெட்டுக்காயம் இருந்தால் அதன் மீது சிறிது வேப்பிலை மஞ்சள் போன்றவற்றை மை போல் அரைத்துப் பூசி வர காயம் குணமாகி விடும்.

☛ உடல் சூட்டினால் வயிற்றுவலி ஏற்பட்டால், ஒரு டம்ளர் தண்ணீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து, சிறிது சோடா உப்புக் கலக்கிக் குடியுங்கள். உடனடி நிவாரணம் கிடைக்கும்.

☛ பெண்கள், அரிசிக் கஞ்சியோடு சிறிது வெந்தயத்தையும் சேர்த்துக் காய்ச்சி சாப்பிட்டு வந்தால் அதிகம் பால் சுரக்கும்.

☛ நீரழிவு நோயைக் குறைக்க தினந்தோறும் முருங்கைக் கீரையை நெய் விட்டு வதக்கிச் சாப்பிட்டால் போதும்.

☛ படை-தேமல் இருந்தால் எலுமிச்சம்பழச் சாற்றுடன் உப்புக் கலந்து பூசி வர சரியாகி விடும்.

☛ வெங்காயத்தை நசுக்கி மயங்கிக் கிடப்பவரின் மூக்கு அருகே காட்டினால் மயக்கம் தெளிந்து எழுந்து விடுவார்.



☛ இளம் வயதுக் குழந்தைகளுக்கு வல்லாரைக் கீரையும் பருப்பும் கலந்து கடைந்து கொடுத்தால் ஞாபக சக்தி பெருகும்.

☛ வெங்காயத்தை நெய்விட்டு வதக்கிச் சோற்றில் பிசைந்து சாப்பிட்டால் வாய்ப்புண் பறந்து போகும்.

## தொடை சமாச்சாரம்

முகப்பில் ரம்பாவின் படத்திற்கு அருகில் 'தொடை சமாச்சாரம்' என்ற தலைப்பு போடப்பட்டிருந்ததைப் பார்த்ததும் ஏதோ ரம்பாவின் தொடை சம்பந்தப்பட்ட சுவாரஷ்யமான விஷயம் என்று நினைத்திருப்பீர்கள். அந்த விஷயமல்ல.

ஆன்மீக விஷயம் இது. ஆன்மீகப் பெரியவர் ஒருவர் சொன்ன சங்கதியைப் படியுங்கள்.

மனிதனின் உடம்பில் அஷ்டலட்சுமி களும் கீழ்க்கண்டவாறு வாசம் செய்கிறார்கள்.

கால் பாதம்-ஆதிலட்சுமி, பாதத்துக்கு மேல் முழங்கால் வரை-கஜலட்சுமி, தொடை-தைரியலட்சுமி, மர்ம ஸ்தானம்-சந்தானலட்சுமி, வயிறு-தான்யலட்சுமி, நெஞ்சு-வீரலட்சுமி, கழுத்து-வித்யாலட்சுமி, முகம்-சௌபாக்ய லட்சுமி.

தைரிய லட்சுமி தொடையிலே தான் இருக்கிறார். அதனால் தான் வீரர்கள் தொடை தட்டிப் பேசுகிறார்கள். கோழைகளை 'தொடை நடுங்கி' என்கிறார்கள்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IF

பெயர்:......................

முகவரி:......................

......................

தொழில்:......................

கையொப்பம்:......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-09-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## வழங்குவது புவனா 54

# மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்காவுக்கு லிண்டா ட்ரிப்பினுடைய நடவடிக்கைகளில் அடிக்கடி சந்தேகம் ஏற்பட்ட வண்ணமே இருந்தது. தன்னுடைய அந்தரங்கங்களை எல்லாம் லிண்டா வெளியிட்டு விடுவாளோ என்ற அச்சம் அடிக்கடி ஏற்பட்டது. இருப்பினும் அவளைப் பூரணமாக விலக்கி விட மோனிக்காவினால் முடியவில்லை.

மோனிக்காவை விட்டு தூரத்தில் இருக்கும் போது அவளுடனான உறவைத் துண்டித்து விடுவதே நல்லது என்று கருதுவாள். ஆனால் லிண்டாவை நேரடியாக காணும் போதெல்லாம் அவள் மீது பாசத்தைப் பொழிவாள். மோனிக்காவை லிண்டா காணும் போதெல்லாம் கிளின்ரனைப் பற்றி லிண்டா ஏதாவது சொன்னதும், மோனிக்காவின் வைராக்கியம் பறந்துவிடும். கிளின்ரனைப் பற்றி லிண்டாவிடம் இனிமேல் எதுவும் கூறுவதில்லை என்று தீர்மானிப்பாள். ஆனால் லிண்டா நேரடியாக அவளுடன் உறவாடும் போது கிளின்ரனைப் பற்றி ஒரு வார்த்தை கூறினாலும் மோனிக்கா மளமளவென்று பல விசயங்களைக் கூறி விடுவாள்.

மோனிக்கா தனது உடல் பருமனையும் எடையையும் குறைப்பதற்காக சில மருந்துகளையும் பயன்படுத்தி வந்தாள். கூடவே தேகப்பயிற்சியும் செய்வாள். மருந்தை உட்கொண்டு தேகப்பயிற்சி செய்யும் போது அவளுடல் மெலிவடையும்-இருப்பினும் அவளால் மருந்து எடுப்பதையும் பயிற்சி செய்வதையும் தொடர்ந்து செய்ய முடிவடைவதில்லை. இதனால் அவளுடைய உடல் பருமன் ஊதுவதும் மெலிவதுமாக மாறிக் கொண்டேயிருந்தது.

லிண்டாவும் தன்னுடைய உடலை மெலிவடையச் செய்வதற்கு மோனிக்காவின் ஆலோசனைகளையும் பெற்று வந்தாள். இதனால் மோனிக்காவைவிட சற்று குண்டாயிருந்த லிண்டா ட்ரிப் தன்னுடைய உடல் பருமனைச் சற்றுக் குறைத்துக் கொண்டாள். இதனால் லிண்டா வழக்கமாக அணிந்து வந்த உடைகள் அவளுக்குப் பொருத்தமாக இருக்கவில்லை.

மோனிக்கா தன்னிடம் இருந்த மேலதிகமான, ஆடைகள் சிலவற்றை லிண்டாவுக்குத் தருவதாக வாக்களித்தாள். இதன்படி ஓர் ஓய்வுநாளன்று லிண்டாவைத் தனது இல்லத்துக்கு அழைத்துச் சென்றாள். உடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பீரோக்களைத் திறந்து காட்டினாள். லிண்டாவுக்குத் தேவையான உடைகளை எடுத்துக் கொள்ளும்படி கூறினாள்.

இந்தக் காலகட்டத்தில், மோனிக்கா ஒரு பெரும் தவறைச் செய்தாள். ஜூலை மாதத்தில் ஒரு நாள் வெள்ளை மாளிகை சென்றிருந்த சமயம் அவள் கிளின்ரனுடன் நடத்திய காதல் லீலைகளின் போது, அவள் அணிந்திருந்த உள்ளாடை ஒன்றை எடுத்து லிண்டாவிடம் காண்பித்தாள். அந்த ஆடையை தான் அன்று அணிந்ததன் பின்னர், அதனை அணியவில்லை, சலவைக்குப் போடவுமில்லை என்று கூறினாள். அந்த ஆடையை மிகவும் பத்திரமாக மடித்து பொலிதீன் பையில் வைத்திருந்தாள்.

அந்த ஆடையில் காணப்பட்ட ஒரு கறையையும் லிண்டாவிடம் சுட்டிக்காட்டி தனக்கே உரிய புன்முறுவலால் விளக்கம் கொடுத்தாள். மோனிக்காவின் விளக்கத்தைப் புரிந்து கொண்டது மட்டுமல்லாமல், தனது கைப் பையை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு, குறிப்பிட்டத் தினத்தன்று நடைபெற்ற சம்பவங்களை விவரமாக கூறுமாறு மோனிக்காவைத் தூண்டினாள்.

லிண்டாவின் கைப்பைக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்த அதி சக்தி வாய்ந்த சின்னஞ்சிறிய ஒளிப்பதிவுக் கருவி, இரசனையுடன் கூடிய மோனிக்காவின் வர்ணனைகள் அத்தனையும் பக்குவமாகப் பதித்துக் கொண்டது. இதனை மோனிக்கா அறிந்திருக்கவில்லை.

வாஷிங்டனைவிட்டு வெளியேறி நியூயோர்க்கிலுள்ள தனது தாயாரிடம் சென்றுவிடுவதற்கு மோனிக்கா தீர்மானித்ததற்கு லிண்டா மென்மேலும் தூண்டு கோலாக இருந்தாள். தனது மகளுக்கு நியூயோர்க்கில் தகுதியானதொரு வேலையை ஏற்பாடு செய்து கொடுப்பதற்காக மோனிக்காவின் தாயார் மார்ஸியா பல பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தாள்.

நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் தனக்கு ஒரு வேலையை ஏற்பாடு செய்து தரும்படி ஏற்கனவே மோனிக்கா கிளின்ரனிடம் கேட்டிருந்தாள். ஐ.நா.சபையில் அமெரிக்கத் தூதுக்குழுவின் தலைவராக தூதுவர் பில் ரிச்சார்ட்சன் இருந்தார். கிளின்ரன் அவரிடம் தனது காரியதரிசி பெட்டிகியூரியின் மிக நெருக்கமான சிநேகிதி ஒருத்திக்கு ஒரு வேலை ஏற்பாடு செய்து தரும்படி கூறியிருந்தார்.

இதே காலகட்டத்தில் நியூயோர்க்கில் பிரபலமான வர்த்தகராகவிருந்த வேணன் ஜோர்டன் என்பவரிடமும் மோனிக்காவுக்கு ஏற்ற ஒரு வேலை ஏற்பாடு செய்து தரும்படி அவளுடைய தாய் மார்சியாவும் கூறியிருந்தாள்.

அக்டோபர் மாத இறுதில் மோனிக்கா, வுக்கு தூதுவர் ரிச்சார்ட்சனின் அலுவலகத்திலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. தொலைபேசியில் அழைத்தகுரல், "மோனிக்கா சற்றுப் பொறுத்திருத்திரு. உன்னுடன் தூதுவர் ரிச்சார்ட்சன் பேசப் போகிறார்!" என்று கூறியது. தொடர்ந்து ரிச்சார்ட்சனின் குரல் ஒலித்தது. "இங்கு பில் ரிச்சார்ட்சன் பேசுகிறேன் என்னுடைய அலுவலகத்தில் பணிபுரிய விரும்புகிறாயா? உனக்கு ஏற்ற ஒரு வேலை ஏற்பாடு செய்து தரும்படி எனக்கு முக்கியமான ஓர்

## அவளுக்கு ஒரு 'நேர்முகப் பரீச்சை'



இடத்திலிருந்து சிபார்சு கிடைத்திருக்கிறது. ஒக்டோபர் 31ம் திகதியன்று நீ என்னை வந்து சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது!" என்று தொலைபேசியை ரிச்சார்ட்சன் வைத்து விட்டார்.

மோனிக்காவுக்கு இது பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. ஜோர்டனும் அவளுக்கான ஒரு வேலையை நியூயோர்க்கில் ஏற்பாடு செய்து தருவதாக வாக்களித்திருந்திருந்தார். இப்பொழுது ஐ.நா. சபையில் வேலை கிடைப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இரண்டொரு தினங்களுக்குள் தான் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும் என்பதனால் மோனிக்கா குழப்பமடைந்தாள்.

கிளின்ரனுடன் தொடர்பு கொண்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற நோக்கத்துடன் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்து தரும்படி பெட்டிக் கியூரியிடம் கேட்டாள்.

அன்று மாலையில் கிளின்ரன் மோனிக்காவுடன் தொடர்பு கொண்டார். இருவருக்குமிடையே சிறிது நேரம் மகிழ்ச்சிகரமான உரையாடல் இடம் பெற்றது. இதன் பின்னர் பில் ரிச்சார்ட்சனுடன் ஏற்பட்ட தொலைபேசித் தொடர்புபற்றி கிளின்ரனிடம் கூறினாள். ஐ.நா. சபையில் போய் வேலை செய்வதற்கு விருப்பமில்லையென்றும் தனியார் நிறுவனமொன்றில் தொடர்பாடல் பணியில் வேலை செய்வதையே தான் பெரிதும் விரும்புவதாக கிளின்ரனிடம் கூறினாள்.

கிளின்ரன் தொலைபேசியில் சற்றுக் கடுமையாக "நான் தென்னமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் "எத்தகைய வேலையை நீ நியூயோர்க்கில் விரும்புவாய் என்று பட்டியல் போட்டு தரும்படி கேட்டிருந்தேன். உன்னுடைய பட்டியலில் முதலாவதாக இடம் பெற்றிருந்தது, ஐக்கிய நா.சபை அலுவலகப்பணி. அதன்படியே நான் ஐ.நா. சபையில் அமொக்காவின் நிரந்தர தூதுவராக விளங்கும் பில் ரிச்சார்ட்சனிடம் சிபார்சு செய்துள்ளேன். இதன் பிறகு நீ இப்பொழுது ஏதேதோ சொல்கிறாய். இப்பொழுது சொல்லு! ரிச்சன்ட்சனிடம் தொடர்பு கொண்டு நான் செய்த சிபாரிசினை வாபஸ் பெற்றுவிடட்டுமா? உனக்குத் தெரியுமா? தூதுவர் பில் ரிச்சார்ட்சன் ஒரு பெரிய பிரமுகர். அவருக்கு இப்பொழுது நான் என்ன சொல்ல?" என்று கேட்டார்.

மோனிக்கா தொலைபேசி மூலமாக தனது மயக்கும் சிரிப்பை உதிர்த்து, "வேணன் ஜோர்டனிடமும், தனியார் துறையில் பணியொன்றுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அவரிடம் நீங்கள் நிலைமையைக் கூறிப் பாருங்கள்!" என்று கெஞ்சினாள்.

பொய்யாக ஒரு கோபத்தைக் காட்டி, "சரி ஜோர்டனிடம் பேசிப் பார்க்கிறேன். ஆனால் அவர் இப்போது வாஷிங்டனில் இல்லை. எங்கிருக்கிறார் என்று கூடத் தெரியாது. இருப்பினும் அவர் வாஷிங்டன், திரும்பியதும், உனக்காக அவரிடம் பேசிப் பார்க்கிறேன்!" என்று கிளின்ரன் கூறினார்.

இதனைத் தொடர்ந்து தொலைபேசியிலேயே இருவரும் பலவிதமான-வழக்கமான கிளுகிளுப்பூட்டும் கதைகளைப் பேசி மகிழ்ந்தனர்.

கிளின்ரன் தென்னமெரிக்காவில் சுற்றுப் பயணம், மேற்கொண்டிருந்தபோது, ஓரிளம் பெண் தன்னை அணுகி, "என்னுடைய தலைத் தொப்பியிலிருந்த ஊசியைத் தனக்கு நினைவுப் பரிசாகத் தரும்படி கேட்டாள். அதற்கு நான் இதை மட்டும் என்னிடம் கேட்காதே! இதனை எனக்கு மிக முக்கியமான ஒருவர் பரிசாகத் தந்திருக்கிறார்; அவருடைய நினைவாக நான் எங்கு சென்றாலும் இதனை அணிந்து கொள்கிறேன். 'ஆகவே தர முடியாது' என்று கூறி விட்டேன். இப்பொழுது சொல்லு பார்ப்போம்-என் தொப்பியில் குத்தப்பட்டிருந்தது எனக்கு யாரரால் அளிக்கப்பட்ட ஊசி என்று? இப்பொழுது கூறுபார்க்கலாம் இந்த ஊசியை எனக்கு யார் கொடுத்தார்கள்!" என்று கிளின்ரன் கேட்டார்.

மோனிக்காவால் இந்த வினாவுக்கு விடையளிக்க முடியவில்லை. அவள் தொலைபேசியில் பலமாகச் சிரித்தாள். அந்த ஊசியை கிளின்ரனுக்கு நினைவுப் பரிசாக மோனிக்காவே கொடுத்திருந்தாள். அன்றைய உரையாடல் இருவருக்குமே பெருமகிழ்ச்சியை அளித்தது.

ஒக்டோபர் 30ம் திகதியன்று இரவு கிளின்ரனுடன் உரையாடுவதற்கு ஏற்பாடு செய்து தரும்படி பெட்டிக்கியூரியிடம் மோனிக்கா கேட்டாள். அடுத்தநாள் தூதுவர் பில் ரிச்சார்ட்சனிடம் அவள் நேர்முகப் பரீட்சைக்குச் செல்லவேண்டியிருந்தது. ஆகவே ரிச்சார்ட்சன் கேட்கும் கேள்விகளுக்கு தான் எவ்வாறு பதிலளிக்க வேண்டும், என்பதையிட்டு கிளின்ரனுடன் கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதனால். தொலைபேசி தொடர்பினை ஏற்பாடு செய்து தரும்படி கியூரிடம் கேட்டாள். அவள் கோரிக்கை நிறைவேறியது.

கிளின்ரன், "நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் உனக்கு நான் அறிவுரை கூற முடியுமா? நீதான் பெரிய அறிவாளியாயிற்றே. ரிச்சார்ட்சன் கேட்கும் கேள்விகளுக்கு உன்னால் நிச்சயமாக ஒழுங்கான பதில்களை அளிக்க முடியும். தைரியமாகப் போய் வா!" என்று வாழ்த்தினார் கிளின்ரன்.

கிளின்ரனுடன் தொலைபேசித்தெடர்பினை முடித்துக் கொண்ட மோனிக்கா, லிண்டாரிப்புடன் தொடர்பு கொண்டாள். அடுத்த நாள் தூதுவர் பில் ரிச்சார்ட்சனின் நேர்முகப்பரீட்சைக்குத் தான் செல்லப் போவதாக மோனிக்கா கூறினாள்.

அந்தச் சந்திப்பு எங்கே நடக்கப்போகிறது என்று லிண்டா கேட்டாள்.

"ரிச்சார்ட்சனுடைய வாட்டர் கேற் வளாகத்திலுள்ள இல்லத்தில் தான்!" என்று மோனிக்கா பதிலளித்தாள்.

இதனைக் கேட்டதும் லிண்டா கோபத்தில் கத்தினாள். "நீ அந்த இல்லத்துக்கு போகக் கூடாது. எல்லாரும் சேர்ந்து சதி செய்து உன்னை மாட்டிவிடப் பார்க்கிறார்கள். ஆகவே அங்குள்ள உணவு விடுதியில் நேர்முகப்பரீட்சையை வைக்கும் படி வற்புறுத்திக் கேள்!" என்று பொரிந்து தள்ளினாள்.

(வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## காலி வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☛ | எம்.சீ.எஸ்.முஹ்ஸினா, 258, நாவின்ன, உலுவிடிகே, காலி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

பாப்பா முரசு சிறுகதை

# 'என்னைப் பார் என் அழகைப் பார்'

பெரிய மாளிகை ஒன்றின் தோட்டத்தில் ஏராளமான ரோஜாச் செடிகள் இருந்தன.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை. ஒவ்வொன்றும் ஒரு வண்ணம்.

அந்த ரோஜாச் செடிகளை ஒரு முதியவர் நன்கு பராமரித்து வந்தார்.

அந்த மாளிகை ஒரு பிரபல சினிமா நடிகைக்குச் சொந்தமானது. அவருக்கு ரோஜா மலர்கள் என்றால் மிகவும் பிடிக்கும். அடர் சிவப்பு, சிவப்பு, இளஞ் சிவப்பு, வெள்ளை, ரோஸ், மஞ்சள், வெளிர் மஞ்சள் ஆகிய வண்ணங்களில் மலரும் அனைத்துப் பூக்களையும் தனது கூந்தலில் சூட்டி மகிழ்வார் அந்த நடிகை.

அந்த ரோஜாச் செடிகளைப் பராமரிப்பதற்கென்றே தோட்டக்காரரை வேலைக்கு வைத்திருந்தார் நடிகை.

தோட்டக்காரர் வெகு நாட்களாகவே அங்கு வேலை செய்தார். தோட்டம் முழுக்க பராமரிப்பதுதான் அவரது



வேலை என்றாலும், அந்த ரோஜாச் செடிகளுக்கு அதிக கவனம் எடுத்துப் பராமரிக்க வேண்டும் என்பது நடிகையின் கண்டிப்பான உத்தரவு.

அவர் தினமும் ரோஜாச் செடிகளுக்குத் தண்ணீர் விடுவார். காய்ந்த இலை தழைகளை அகற்றிச் சுத்தம் செய்வார். அளவாக உரம் இடுவார்.

நல்ல பராமரிப்பு!

ஒரு நாள்-

ஒரு சிவப்புநிற ரோஜா பூக்கும் செடியிலிருந்து, ஒரு மொட்டு, மெல்ல மலர்ந்து இதழ் விரித்தது.

அது அப்பொழுதுதான் இந்த உலகத்தையே பார்த்தது. ஒவ்வொரு இடத்தையும் பார்த்துப் பார்த்து அது ரசித்தது.

சூரியனை ரசித்தது. வானத்தை ரசித்தது. மெல்ல வருடிச் செல்லும் காற்றை ரசித்தது. பூமியை ரசித்தது. குளிர்ந்த நீரை ரசித்தது.

"அப்பா! என்ன சுகம்!" என்று அது அந்த இயற்கைச் சுகத்தை அனுபவித்தது.

அப்போது தான் அருகே வந்த அந்த முதிய தோட்டக்காரரை அது பார்த்தது. பார்த்ததும் முகத்தைச் சுழித்தது.

"இதென்ன- இவ்வளவு அழகான சூழ்நிலையில் இப்படி ஒரு அவலட்சணமான மனிதன்? கறுத்து, தோலெல்லாம் சுருங்கி... விரைவில் இவன் கதை முடியப் போகிறது. அது தெரியாமல் இன்னும் நடமாடிக் கொண்டிருக்கிறான். ஐயோ பாவம்!" என்று அந்தத் தோட்டக்காரரைப் பார்த்து இறமாப்புடன் பேசிக் கொண்டது. பிறந்தவுடனேயே, அதற்குத் தலைக்கனம் வந்து விட்டது. தன் அழகையும் இளமையையும் நினைத்துப் பூரித்தது. தன் இளமையை அந்த தோட்டக்கார முதியவரோடு ஒப்பிட்டு எள்ளி நகையாடியது.

நடுப்பகல் வேளை வந்தது. சூரியன் நேர் உச்சியில் நின்றான்.

அப்போது அந்த இளம் பூ முழுவதுமாக மலர்ந்து முன்பை விட அழகாகவும் வசீகரமாகவும் இருந்தது. மணம் வேறு தூக்கலாக வீசியது.

இப்போது அந்த ரோஜாவுக்கு இன்னும் தலைக்கனம் கூடியது.

"ஆஹா! இப்போது நான் என்ன அழகு... என்ன வசீகரம்.. என்ன மணம்... என்ன இளமைத் துடிப்பு... ஹூம்... அந்தத் தோட்டக்கர்ரனும் இருக்கிறானே, காய்ந்த சுள்ளி போல்... காலையில் பார்த்ததை விட இப்போது இன்னும் கிழமாகியிருக்கிறானே. இப்படி நிமிடத்துக்கு நிமிடம் இவன் கிழமாகிக் கொண்டே போனால் இன்னும் எத்தனை நிமிடங்கள் உயிர் வாழ்வானோ?" என்று பேசிச் சிரித்தது.

தோட்டக்காரர் அத்தனை ரோஜாச் செடிகளையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு வேறு பக்கம் சென்றார்.

அந்த ரோஜாப் பூ தொடர்ந்து தன்னைப் பற்றிப் புகழ்வதும், தோட்டக்காரரை இகழ்ந்தும் பெருமையடித்துக் கொண்டே இருந்தது.

மாலை வரை அந்தப் பெருமை நீடித்தது.

இருள் வரத் தொடங்கிய போது-

அந்த ரோஜாப் பூ சட்டென்று தளர்ந்தது. பகல் முழுக்கவசீகரமாக இருந்த அதன் இதழ்கள், பொலிவிழந்து சுருங்கின.

உடனே அது திடுக்கிட்டது.

"ஐயோ! திடீரென்று எனக்கு என்னாகி விட்டது? என்னால் நிற்க முடியவில்லையே. என் உடம்பெல்லாம் சுருங்கி விட்டதே. என் இளமை எங்கே? என் அழகு எங்கே? என் மணம் எங்கே? ஐயோ.. இதென்ன... என் உடலில் ஒரு சில பகுதிகள் கீழே உதிர்ந்து விழுகின்றனவே... கடவுளே... இதென்ன... எனக்குத்தான் ஆயுள் குறைவோ? விரைவில் இறந்து விடுவேன் போலிருக்...!"

ரோஜா சொல்லி முடிக்கவில்லை.


செடியிலிருந்து உதிர்ந்து 'சொத்தென்று கீழே விழுந்தது.


ஆமாம்! உண்மையில் அந்தப் பூவின் ஆயுள் முடிந்து விட்டது.

மறுநாள்-

ரோஜாச் செடிகளைப் பார்வையிட வந்த அந்த முதிய தோட்டக்காரர் உதிர்ந்து கிடந்த அந்த ரோஜாப் பூவை, குப்பை கூழங்களோடு அள்ளி வேலிக்கு அப்பால் போட்டான்.

தலைக்கனம் பிடித்தவர், தற்பெருமைக்காரர் ஆகியோரது வாழ்க்கை இந்த ரோஜாப் பூவைப்போலத்தான் சொல்லாமல், கொள்ளாமல் உதிர்ந்து போகும். ▪





போருக்குப் போகும் மன்னனுக்கு வாள் இருக்கும் இடம் தெரிகிறது. ஆனால் போகும் பாதைதான் குழப்பமாக இருக்கிறது. பாதை தெரியாமல் குழம்பும் மன்னனுக்கு சரியான பாதையைக் காட்டுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய் கடைசித் திகதி **23.09.2000.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 360**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 358

**பரிசுக்குரியவர்:**
க.பிரியதர்சினி,
மட்/புனித சிசிலியா பெண்கள் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.ஏ.எம். ஆதீப், மட்/கிழறியா வித்தியாலயம், காத்தான்குடி-02. | சி.மிதுனா, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| சாமிலா அநூஷிகா, புனித மரியாள் பாடசாலை, அவிசாவளை. | அ.ல. பஸ்மியா, கமு/ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை-03. |
| செ.எ.யூட் பெஸ்பேர்க், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | எம். ஷாஜாத் முகம்மத், மட்/மெத்தைப்பள்ளி வித்தியாலயம், காத்தான்குடி. |
| தெ. துவாரகா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்;வவுனியா. | பாத்திமா றுஸ்கா நளீர், மத்திய கல்லூரி(தேசிய பாடசாலை) மூதூர். |
| கே. கமல்கண்ணா, க/ஒல்ட் பிக்கோக் த.வி., புஸ்சல்லாவ. | பரசுராமன் விஜயவதனன், விபுலானந்தன் மத்திய கல்லூரி, கரைதீவு-08. |

## அபூர்வ தவளையினங்கள்



தவளை இனத்தில் குரைக்கும் தவளை, செங்குத்துத் தவளை என்னும், இரு அபூர்வ இனங்கள் உள்ளன. இந்த இருவகைத் தவளைகளும் அமெரிக்காவில் உள்ளன.

பொதுவாகத் தவளை இனங்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்ததும் வால்பேத்தைகளாக வந்து, அதன் பின் படிப்படியாகத் தான் தவளை உருவத்திற்கு வரும்.

ஆனால் குரைக்கும் தவளையும், செங்குத்துத் தவளையும் முட்டையில் இருந்து வெளியே வரும்போதே தவளையாகவே வரும்.

## முட்களின் ராணி



மணப்பெண்ணின் கையில் இருக்கும் பூச்செண்டு போலிருக்கும் இவர் நட்சத்திர மீன் இனத்தைச் சேர்ந்தவர். இவரது பெயர் 'முட்களின் ராணி'!

இந்த மீனினம் என்ன செய்யும் தெரியுமா?

சுமார் 100 வருடங்களாக உருவாகியிருக்கும் பவளப்பாறைகளை ஒரே நாளில் தின்று தீர்த்து விடும்.

வடபசுபிக் பகுதியில் 1860 ஆண்டில் ஐயாயிரத்து இருநூறு சதுர மீட்டர் வரையில் பரவியிருந்த பவளப் பாறைகளை பத்தே ஆண்டுகளில் ஒரு கூட்டமான 'முட்களின் ராணிகள்' சேர்ந்து பாழாக்கி விட்டன.

பவளப்பாறைகளை ஒரு வழி பண்ணும் இந்த 'முட்களின் ராணிகள். 'டாய்டன் ஸ்நெய்ல்ஸ்' என்ற நத்தைகளுக்கு சரியான பயம். இந்த நத்தைகள் இருக்கும் பக்கம் 'முட்களின் ராணிகள்' தலைவைத்துப் படுக்க மாட்டார்கள்.



## செய்து பாருங்கள்

<u>தேவையானவை:</u>

கறுப்பு ஸ்கெட்ச் பேனா ஒன்று, 6x6 சென்டிமீட்டர் வெள்ளை கடதாசி அட்டை.

<u>செய்முறை :</u>

படத்தில் இருப்பது போல் முகம் வரைந்து கறுப்பு வர்ணம் அடித்துத் தலைப்பாகைக்கு வேறு வர்ணம் அடித்து விடுங்கள்.

இதில் என்ன பெரிதாக இருக்கிறது என்று கேட்கிறீர்களா? இந்தப் படத்தில் இன்னொரு படமும் தெரியும்.

எப்படி?

படத்தைத் தலைகீழாகத் திருப்பிப் பாருங்கள். ▪



## விறு விறு தொடர்

13



மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

விஸ்வநாத் முகம் முழுக்க வியர்வைப் புள்ளிகள்

கர்சீப் எடுத்து துடைத்தவாறு கட்டிலில் அமர்ந்தார்.

சில நிமிடங்கள் எதுவும் பேசவில்லை.

"கவலைப்படாதீங்க டாடி. எனக்கு பரத்மேல நம்பிக்கை இருக்கு. எப்படியும் அவனைப் பிடிச்சிடுவான்.!"

"அதெப்படிப்பா கவலைப்படாம இருக்க முடியும்? அந்தப் பாவி ஆகாஷ் உயிருக்கு குறி வெச்சிருக்கானே!"

"ஒண்ணும் நடக்காதுப்பா!"

"யாருக்கும் தெரியாம ரகசியமா வந்து பார்சல் வெச்சுட்டுப் போயிருக்கான். எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா வெள்ளைப் புடவை வெச்சிருப்பான். அதுவும் இப்போ தப்பிச்சிருக்கான்னு வேற சொல்றியே.... எனக்கு கவலையா இருக்குப்பா!"

"தைரியமா இருங்க!"

"இது உயிர்ப் பிரச்சனை விஷால்!"

"அதனால என்ன செய்யணும்ப்பா?"

"காதல்ல தோத்தவன் அவன்! வெறியோட இருக்கறவன்!"

"அதனால?"

"நாளைக்கு எந்த அசம்பாவிதமும் நடக்காதுன்னு நிச்சயமா சொல்ல முடியுமா விஷால்?"

"என்ன சொல்ல வர்றீங்க டாடி!."

"நாளைக்கு போலீஸ் பாதுகாப்போட இந்தக் கல்யாணத்தை நடத்திட்டாலும்.... அவனைப் பிடிக்கலைன்னா அது டேன்ஜர்தானே? தினம் ஆகாஷ்க்கு பாதுகாப்பு தர முடியுமா?"

"ஏன் அப்படி நினைக்கறீங்க? அவனைப் புடிச்சுடுவாங்க டாடி!"

"ஆகாஷ் எங்கே? கூப்பிடு அவனை!"

"எதுக்கு இப்போ ஆகாஷைக் கூப்பிடணும்?"

"விஷால், நிறுத்திடலாம் விஷால்! கல்யாணத்தை நிறுத்திடலாம். முதல் கோணல் முற்றிலும் கோணல் மாதிரி ஆயிடுச்சி பாரு! ஆரம்பத்தில உங்க அண்ணன் தீபிகாவை லவ் பண்றதா சொன்னப்பவே நான் எதிர்த்தேன். அதையும் இதையும் சொல்லி எல்லாருமா சேர்ந்து என்னை சமாதானப்படுத்தினீங்க! இப்போ பார்த்தியா, அடுத்தடுத்து எத்தனைப் பிரச்சனை! வேணாம். கல்யாணத்தை நிறுத்திடலாம். எனக்கு என் ஆகாஷோட உயிர்தான் முக்கியம்!"

"சபாஷ்!" என்று கை தட்டினான் விஷால்.

"என்ன விஷால்?"

"என்ன அருமையா நடிக்கிறீங்க டாடி? இப்படி ஒரு சூழ்நிலைக்குக் கொண்டு வந்து கல்யாணத்தை நிறுத்தறதுதானே உங்க பிளான்?"

"என் பிளானா?"

"போதும் டாடி! வேஷம் போட்டது போதும்! எல்லாத்துக்கும் நீங்கதான் சூத்தரதாரி!"

"உளறாதே! ஆகாஷைக் கூப்பிடு!"

"முடியாது டாடி. இந்தக் கல்யாணம் நடக்கணும். நடத்தாகணும்!"

அப்போது அங்கிருந்த டெலிஃபோன் ஒலித்தது.

அவசரமாக அதை எடுக்கச் சென்ற விஸ்வநாத்தை கை நீட்டித் தடுத்தான் விஷால்.

"நான் எடுக்கறேன் டாடி!"

"இரு. ஏதாச்சும் பர்சனல் காலா இருக்கும்."

"பரவால்லை, நான் எடுக்கறேன்."

விஷால் ஃபோனை எடுத்துக்காதில் வைத்தான்.

விஷால் தன் அப்பாவை முந்திக் கொண்டு ஒலித்த ஃபோனை எடுத்துக் காதில் வைத்தான்.

ஆனால் எதுவும் பேசாமல் எதிர்முனை பேசக் காத்திருந்தான். எதிர்முனையும் மௌனம் சாதித்தது.

விஷால் பொறுமையாய் 'ஹலோ' சொல்வதைக் கட்டுப்படுத்தி நிற்க, எதிர்முனையும் பொறுமையாய் அமைதிபரப்பியது.

விஷால் ஒரு முறை அப்பாவைப் பார்த்துக் கொண்டான்.

எதிர் முனை 'லொடக்'கென்று வைக்கப் பட்டது.

இவனும் ஏமாற்றத்துடன் ஃபோனை வைத்தான்.

"யாருப்பா ஃபோன்ல?" என்றார் விஸ்வநாத்.

"ரஞ்சித்!"

"என்னது?"

"அப்படியின்னு நான் யூகிக்கிறேன். அவன் பேச நினைச்சது உங்ககூட! உங்கக் குரல் கேட்டதும் தான் பேசணும்னு நீங்க அவனுக்கு உத்தரவு போட்டிருக்கீங்களோ என்னவோ...."

"நான்சென்ஸ்! விஷால்! நீ அநாவசியமாப் பேசறே!"

"நான் உங்களை சந்தேகப்படறதில் நியாயம் இருக்கு டாடி!."

"முட்டாள்தனமாப் பேசாதே!"

"முதல்ல இந்தக் கல்யாணத்தை கடுமையா எதிர்த்தவர் நீங்கதான்!"

"அதுக்காக? உளறாதே! இப்ப நீ ஆகாஷை இங்கே கூட்டிட்டு வரப்போறியா இல்லை நாம அவன் ரூமுக்கு போகலாமா?"

"ஆகாஷ் நிம்மதியா தூங்கிட்டிருக்கான்."

"அவனுக்கு ஆபத்தை எடுத்துச் சொல்லணும் விஷால்."

"சொல்லலாம். அதுக்கு முன்னாடி என் கேள்விக்கு நீங்க பதில் சொல்லுங்க."

"என்ன?"

"ரஞ்சித்தைத் தூண்டிவிட்டு இந்தக் கல்யாணத்தை நிறுத்தற ஏற்பாடுகள்ல மறைமுகமா இறங்கியிருக்கிறது நீங்க இல்லையா?"

"நோ!"

"அப்படீன்னா நேர்மையா பதில் சொல்லுங்க. இப்ப கொஞ்சம் முன் னாடி நீங்க ஃபோன்ல யார்கிட்ட பேசிட்டிருந்தீங்க?"

"அதான் சொன்னேனே, என் பிசினெஸ் ஃபிரண்ட்!"

"பொய்! சுத்தப் பொய்!"

"நான் எதுக்குப் பொய் சொல்லணும்?"

"சரி, உங்க பிசினெஸ் ஃபிரண்டு யாரு? அவர் பேரென்ன?"

விஸ்வநாத் தடுமாறினார், "அது... வந்து!" சட்டென்று ஒரு பெயர் கிடைக்காமல் திணறினார்.

"பார்த்தீர்களா, திணர்றீங்க?"

"சட்டுன்னு நினைவுக்கு வரவில்லை... யெஸ்.... விக்ரம்?"

"எந்த விக்ரம்?"

"பாம்பே யார்ன் இண்டஸ்ட்ரீஸ் விக்ரம்!"

"அவர்தானே? சந்தேகமில்லையே."

"இதில என்ன சந்தேகம்?"

"இன்னிக்கு ஈவினிங் அவர் என்கிட்ட ஃபோன்ல பேசினார். இந்தக் கல்யாணத்தில கலந்துக்க முடியாத சூழ்நிலைல இருக்கிறதாச் சொல்லி ஆகாஷ்க்கு வாழ்த்தும் சொன்னார்!."

"சொன்னான். அதுக்கப்புறம் திடீர்னு முடிவு செஞ்சி புறப்பட்டு வந்துட்டான்."

"நாட் பாசிபிள்! அவர் என்கிட்ட பேசினது ஈவினிங் ஏழு மணிக்கு. இப்போ மணி ரெண்டு இருபது."

"என்னடா கோர்ட் மாதிரி கேக்கறே?"

"டாடி, அவர் என்கிட்ட பாம்பேலேர்ந்து பேசலை, நியூயார்க்லேர்ந்து பேசினார். ஏழு மணிக்கு அப்புறம். நியூயார்க்ல ஒருத்தர் விமானத்தில புறப்பட்டு ரெண்டு மணிக்கு சென்னை வந்துட முடியும்னு சொல்றீங்களா? அப்படி அதிவேக ஃபிளைட் புதுசா ஏதாச்சும் விட்டிருக்காங்களா டாடி?"

கர்ச்சிப் எடுத்து முகத்தில் துளிர்த்த வியர்வைப் புள்ளிகளை ஒற்றிக் கொண்டார் விஸ்வநாத்.

"உண்மையைச் சொல்லுங்க. உங்ககிட்ட ஃபோன்ல பேசினது மிஸ்டர் விக்ரம் இல்லை."

"யெஸ். விக்ரம் இல்லைதான்!"

"அப்ப யாரு?"

"அது யாரா இருந்தா என்ன?"

"அது ரஞ்சித்னு நான் சொல்றேன்.

"நோ!"

"அப்ப யாருன்னு சொல்லுங்க!"

"விஷால், இது என் பர்சனல் மேட்டர். நீ ரொம்ப எல்லை தாண்டி பேசிட்டிருக்கே! உன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்லணும்னு எனக்கு அவசியம் இல்லை! ஆனா, இப்படி எல்லா கல்யாண ஏற்பாடுகளையும் கிராண்டா செஞ்சிட்டு அப்புறம் அதை நிறுத்த சதி வேலை செய்யற அளவுக்கு நான் சீப்பான ஆள் இல்லை, நகரு!" என்று அவன் தோளைப் பிடித்து நகர்த்தி விட்டு ஆகாஷின் அறையை நோக்கி நடந்தார்.

"நோ டாடி! ஆகாஷை டிஸ்டர்ப் செய்யாதீங்க. அவனுக்கு டென்ஷன் கொடுக்காதீங்க!" என்று கெஞ்சியவாறு கூடவே நடந்தான் விஷால்.

**"மை** குட்னெஸ்!" என்று வியந்தாள் அப்ஸரா.

"இவ்வளவு சீக்கிரம் குற்றவாளியோட சம்பந்தப்பட்டவங்களைத் தேடி நாங்க வந்துட்டதில உங்களுக்கு ஆச்சர்யமா இருக்கா?" என்றாள் சுசீலா.

"நான்சென்ஸ்! அந்த பிளடிராஸ்கல் ரஞ்சித்தோட நான் சம்பந்தப் பட்டிருக்கேனா?"

"நடிக்க வேண்டாம்! ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி நீங்க ரஞ்சித்தோட ஃபோன்ல பேசினீங்களா, இல்லையா?" என்றான் பரத்.

"யெஸ் பேசினேன்."

"பின்னே?"

"ஒரு ஆளோட பேசினா அவனோட எனக்குப் பழக்கம்னு அர்த்தமா?"

"நடுராத்திரி பேசினா அது சாதாரண பழக்கமா இருக்க முடியாது!"

எரிச்சலுற்றாள் அப்ஸரா.

"சார், நீங்க என்னை சந்தேகப்படறது அநாவசியம்! நீங்க சொல்ற ஆகாஷ் பத்தியோ தீபிகா பத்தியோ எனக்கு எதுவும் தெரியாது. அந்த ரஞ்சித் ராஸ்கலை இன்னிக்குதான் மீட் செஞ்சேன். ரொம்ப அடாவடித்தனமா என்கிட்டே நடந்துகிட்டான். எனக்கு மனசு தாங்கலை. அதான் இப்போ கொஞ்சம் முன்னாடி கூப்புட்டு கன்னா பின்னான்னு திட்டினேன். அப்பவும் அவன் அநாகரிகமாதான் பேசினான். அவன் மேல என்ன மாதிரி நடவடிக்கை எடுக்கறதுன்னு யோசிச்சிட்டு இருந்தப்பதான் நீங்க வந்தீங்க."

"கொஞ்சம் விபரமா சொல்ல முடியுமா?"

அப்ஸரா ஹோட்டலின் நீச்சல் குளத்தில் துவங்கிய பிரச்சனையில் ஆரம்பித்து விரிவாகச் சொல்லத் துவங்கினாள்.

அவள் சொல்லி முடித்ததும் பரத் வீடியோவிலிருந்து எடுத்த ரஞ்சித்தின் மாறுவேட புகைப்படத்தை எடுத்துக்காட்டினான்.

"இவர் தான் நீங்க சொல்ற ரஞ்சித் தோட சித்தப்பாவா?"

வாங்கிப் பார்த்து, "அட! ஆமாம் சார்!"

"இவருக்குத்தான் ஆட்டோவுக்குக் கொடுக்க ஐநூறு ரூபாய்க்கு சில்லறை கொடுத்தீங்களா?"

"ஆமாம்!."

"ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டர் நீங்க. ஒரு ஆளு வேஷம் போட்டிருக்கறதுகூட உங்களுக்குத் தெரியலையா? நல்லா உத்துப் பாருங்க,"

"இது வேஷம்! இந்த தாடி ஒட்டுத் தாடி ரஞ்சித் நான் சொல்ற ஆகாஷை கொலை செய்ற நோக்கத்தோட அந்த ஹோட்டல்ல தங்கியிருந்திருக்கான். எதிர்பாராத விதமாக உங்களோட மோதல் ஏற்பட்டுடுச்சி. அவன் மிரட்டல் பார்சலை கல்யாண மண்டபத்தில் ரகசியமா வைக்கிறதுக்கு மாறு வேடத்தில புறப்பட்டப்ப நீங்க அவனைத் தேடி சண்டை போடறதுக்காக ரூமுக்கே போயிட்டீங்க. உடனே தான் ரஞ்சித்தோட சித்தப்பான்னு நாடகமாடி புறப்பட்டுப் போய்ட்டான். ரிசப்ஷன்லேர்ந்து திரும்பினதும் மறுபடி சந்திச்சப்பவும் அதே நாடகத்தைத் தொடர்ந்திருக்கான்."

"ச்சே!" என்றாள் அப்ஸரா, "என்னை அவமானப்படுத்தினதோட இல்லாம முட்டாளாக்கிட்டானே! ஏற்கனவே டெலிஃபோன்ல அவன் ஆபாசமாப் பேசினதுல அவன் மேல பயங்கர கோபத்தில இருந்தேன். இப்போ அது இன்னும் அதிகமாயிடுச்சி." (தொடர்ந்து வரும்)

## மறுபக்கம்

06

## எம்.ஆர்.ராதா

*சிறிய வயதிலேயே எம்.ஆர்.ராதாவிடம் ஒப்பனைக் கலைஞராக ('மேக்-அப் மேன்') பணியாற்றியவர் கஜபதி. எம்.ஆர்.ராதாவின் மறைவிற்குப் பின் அவரது மகன் ராதாரவிற்கும் ராதாவின் பேரன் வாசு விக்ரமிற்கும் (இவர் எம்.ஆர். ஆர்.வாசுவின் மகன்) ஒப்பனைக் கலைஞராகப் பணியாற்றி வருகிறார்.*

*எம்.ஆர்.ராதாவுடன் பணியாற்றிய காலத்தில் அவரிடம் கண்ட-கேட்ட விஷயங்களை சில வருடங்களுக்கு முன் தமிழகப் பத்திரிகை ஒன்றின் வார இணைப்பில் பகிர்ந்திருந்தார். அவற்றில் இருந்து சிலவற்றை உங்களுக்குத் தருகிறோம்.*

**ரா**தா அதற்கு,"நான் கடவுள் இல்லைன்னு சொல்லி நாத்திக நாடகம் போடறதால தான், கடவுள் உண்டுன்னு சொல்லி பக்தி நாடகம் போடுற உங்க நாடகத்துக்கு கூட்டம் வருது. என் மீது இருக்கிற கோபத்திலே ஆஸ்திகர்கள் உங்க நாடகத்துக்கு வர்றான். நாளைக்கே, நான் என் நாடகத்தை வேற ஊருக்கு மாத்திட்டுப் போயிட்டா, அப்புறம் உங்க நாடகத்துக்கு



எவனும் வரமாட்டான். அப்புறம் நீங்க ஈ ஓட்ட வேண்டியதுதான். இப்ப என்ன சொல்றீங்க; பணம் கொடுக்கறீங்களா அல்லது நாளைக்கே நான் நாடகக் குழுவோடு வேறு ஊருக்குப் புறப்படவா?" என்று கேட்டார்.

கொஞ்சம் யோசித்த நவாப் ராஜமாணிக்கம் பேசாமல் உள்ளே போய், ஒரு பெருந்தொகையைக் கொண்டு வந்து ராதாவிடம் கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

'**ஆ**யிரம் ரூபாய்' படத்தில் ராதா வில்லனாக நடித்துக் கொண்டிருந்தார். கே.எஸ். கோபால கிருஷ்ணன் டைரக்‌ஷன்.

ஒருநாள் மாலை ஆறு மணிக்கு படப்பிடிப்பு, ராதா மேக்கப்புடன் ரெடியாகி செட்டுக்கு வந்து விட்டார். அவருடன் நடிக்க வேண்டிய நாகேஷ் வரவில்லை.

அப்போது நாகேஷ் சினிமாவோடு நாடகங்களிலும் நடித்துக் கொண்டிருந்தார்.

நாடகம் முடிந்து எட்டு மணிக்கெல்லாம் படப்பிடிப்புக்கு வந்து விடுவதாக சொல்லியிருந்தாராம்.

மணி எட்டாயிற்று; ஒன்பதாயிற்று; பத்தும் ஆயிற்று. நாகேஷ் வரவில்லை.

ராதா ரொம்பவும் கடுப்பாகிப் போனார். "பாருய்யா; நான் எப்பேர்ப்பட்ட நடிகன், நேத்து வந்த புது நடிகனுக்காகவெல்லாம் இப்படி 'தேவுடு' காத்துக் கொண்டு 'உட்கார்ந்திருக்கணுமா?" என்று திட்டினார்.

ராதாடென்‌ஷனாகி விட்டதைப் பார்த்து, கே.எஸ்.ஜி., க்கும் டென்‌ஷன். நாகேஷ் 'இப்படிப் பண்ணி விட்டாரே! இனிமேல் படப்பிடிப்பை கான்சல் செய்துதான் தீர வேண்டும்' என்று முடிவு செய்தார் கே.எஸ்.ஜி.!

ஆனால், நாகேஷ் வருவதற்குள்ளாகவே படப்பிடிப்பை கேன்சல் செய்தால், 'நாகேஷ் வராததால்தான் கேன்சல்,' என்று ஆகிவிடும். அதனால், நாகேஷ் வரட்டும். அவர் வந்த பிறகு, கேன்சல் செய்ய வேண்டும். அப்போதுதான் நாகேஷுக்கும் உரைக்கும்; எம்.ஆர். ராதாவும் சமாதானம் ஆவார் என்று முடிவு செய்தார்.

அதேபோல, நாகேஷ் பத்தரை மணி சுமாருக்கு அவசர அவசரமாக வந்தார்.

ராதா, நாகேஷை கூப்பிட்டு கோபமாகத் திட்டினார். "நீ நாடகத்திற்குத்தான் போ; வேறு எங்குதான் போ.

ஆனால், போன் பண்ணி 'என்னால் படப்பிடிப்புக்கு இத்தனை மணிக்குத்தான் வர முடியும்,' என்று ஒரு வார்த்தை சொல்லி விடு. மற்ற நடிகர்களும் அதே நேரத்திற்கு வருவார்கள். உன் ஒருவனுக்காக மற்றவர்கள் எல்லாரும் மேக்கப் போட்டு காத்திருக்க முடியுமா?" என்று திட்டினார்.

கே.எஸ்.ஜி., ராதாவிடம் வந்து, "இல்லண்ணே! இன்னிக்கு படப்பிடிப்பு வேண்டாம். கான்சல். நாகேஷ் வந்துட்டா, அதுக்காக ஷூட்டிங்கை ஸ்டார்ட் பண்ணனுமா? முடியாது, நீங்க வீட்டுக்குப் புறப்படுங்க. நாளைக்கு ஷூட்டிங் வச்சுக்குவோம்," என்றார். ராதாவும் அமைதியானார்.

அதேபோல படப்பிடிப்பு கான்சல் செய்யப்பட்டு, மறுநாள் ஷூட்டிங் நடந்தது.

நாகேஷை ராதா கூப்பிட்டு, "இங்கே வாப்பா! நேத்து நான் ஏதோ கோபத்திலே உன்னை பேசிட்டேன். மனசிலே வைச்சுக்காதே," என்றார்.

நாகேஷும் "அண்ணே! என்னை திட்டறதுக்கு உங்களுக்கு உரிமை இருக்குண்ணே. நான் பண்ணினதும் மிஸ்டேக் தான்," என்றார்.

ராதாவிற்கு சிவாஜி கணேசன் நடிப்பைப் பற்றி உயர்வான அபிப்பிராயம் உண்டு. "நான் இளமையில் நாடகத்தில் செய்த ஸ்டைலைத்தான் சிவாஜி இப்போது சினிமாவில் செய்கிறார். எனக்கு இளமை போய்விட்டதால், என் பாணியை இப்போதைய வயதுக்குத் தகுந்த மாதிரி மாற்றிக் கொண்டேன்," என்று கூட ராதா என்னிடத்தில் சொல்லி இருக்கிறார்.

ஒருமுறை நானும், ராதாவும் காரில் போகும்போது, ராதா சென்னார்; "இந்த சிவாஜி, தான் நடிக்கிற படத்திலே எல்லாம் காட்சிக்குக் காட்சி அந்த ஆளே வந்துகிட்டு இருக்கான்யா, அதுதான் ரொம்ப ஓவர் டோஸா தெரியுது. படம் ஆரம்பிச்சு ஒரு ரீலுக்கு அந்த ஆளு வரணும். அப்புறம் இடைவேளை டையத்துக்கு கொஞ்சம் முன்னாலே வரணும். அப்புறம் கிளைமாக்ஸுக்கு நாலைந்து சீன் முன்னாலே வந்து கிளைமக்ஸ் வரைக்கும் நடிச்சி, நான்தான்டா நடிகர் திலகம்கிற மாதிரி புரூப் பண்ணணும். அதை விட்டுட்டு, எல்லா சீலேயும் இவரே வந்தா, சலிப்புதான் வருது," என்றார் ராதா.

**மு**.கருணாநிதிக்கு 'கலைஞர்' என்ற பட்டத்தைக் கொடுத்தது ராதாதான். (பட்டுக்கோட்டை அழகிரிதான் கலைஞர் கருணாநிதி என்று ஒரு மேடையில் விளித்துப்பேசினார். ஆனாலும், கலைஞர் என்று பட்டமாகப் போட்டு போஸ்டர் அடித்தது ராதாதான்.) இதை கருணாநிதியே ராதா வீட்டுத் திருமண விழா ஒன்றில் குறிப்பிட்டுப் பேசினார்.

அந்த விழாவில் சிவாஜி பேசும்போது, "ராதாண்ணன் யார் யாருக்கோ என்னென்னவோ கொடுத்திருக்கிறார். ஆனால், எனக்கு அவரது 'கலை'யைக் கொடுத்திருக்கிறார். அந்த நடிப்புக் கலை என்னை என்றும் வாழ வைக்கும்," என்று பேசினார்.

கருணாநிதி பேசும் போது, "எம்.ஆர்.ராதா, 'இழந்த காதல்' என்ற நாடகத்தில், 'ஜெகதீஷ்' என்ற கேரக்டரில் நடித்ததை நான் பார்த்திருக்கிறேன். அற்புதமான நடிப்பு, மேடை நாடகத்தில், நடிகர்கள் தங்கள் பின்புறத்தைக் காட்டியபடி நின்று நடிக்கக் கூடாது. மேடையில் அப்படி இப்படி திரும்பும் போதுகூட, பின்புறமாக திரும்பக் கூடாது என்பது மேடை நாடக விதி. ஆனால், அந்த விதியை மீறி, ராதா அந்த நாடகத்தில், அறிமுகமாகிற காட்சியிலேயே தன் பின்புறத்தைக் காட்டியபடி, நாற்காலியில் இறந்து கிடக்கும் தன் தங்கையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, நீண்ட வசனம் பேசி உணர்ச்சிகரமாக நடிப்பார்.

"அதே வேகத்தில் அவர் ரசிகர்கள் பக்கம் திரும்பும் போது, அவரது சுருளான ரோமம் கூட, நளினமாக வளைந்து நடிக்கும். அந்த ராதாவுக்காக நான் 'தூக்கு மேடை' என்ற நாடகத்துக்கு கதை வசனம் எழுதிக் கொடுத்தேன். தமிழகம் முழுக்க வெற்றிக்கொடி நாட்டிய நாடகம் அது. அந்த நாடகத்தில், 'பாண்டியன்' என்ற கேரக்ரரில் நானும் நடித்தேன். அப்போதுதான் ராதாண்ணன் எனக்கு 'கலைஞர்' என்ற பட்டத்தைக் கொடுத்தார்." என்று பேசினார்.

ராதா இறந்து, அவரது முதல் நினைவு நாளின் போது, திருச்சியில் ராதாவின் சிலையைத் திறந்து வைத்து கருணாநிதி பேசினார். அப்போதும், ராதாதான் தனக்கு 'கலைஞர்' என்ற பட்டத்தைக் கொடுத்ததாகக் குறிப்பிட்டார்.

(நிறைவு)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 20

## திருமலை தெப்பத் திருவிழா

## இரா. பத்மநாதன்

மாதுமை அம்பாள் சமேத திருக்கோணை நாதேஸ்வரப் பெருமான் உறையும் திருக்கோணேஸ்வரம் அமைந்திருப்பதனால் திருகோணமலை புராணக்காலப் பெருமை வாய்ந்தது. திருக்கோணேஸ்வரம் பாடல் பெற்ற திருத்தலம்.

தமிழ் நாட்டிலுள்ள காஞ்சி மாநகர் எங்கணும் சைவத்திருத்தலங்கள் எவ்வாறு நிறைந்திருக்கின்றனவோ, அதே போல் திருகோணமலை நகரில் திரும்பிய பக்கமெல்லாம் சைவத் திருத்தலங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

திரு.எஸ்.டி.சிவநாயகம் அவர்களின் பிறப்பிடம் திருகோணமலை நகரமே. பின்னர் அவர் மட்டக்களப்பில் குடிபுகுந்து மட்டுநகர் வாசியானார். தொடர்ந்து அவருடைய எழுத்துப் பணி அவரைக் கொழும்பு நகரவாசியாக மாற்றிவிட்டது.

சிவநாயகம் அவர்கள் தனது இளமைப் பிராயத்தை திருமலையில் கழித்தாலும் திருக்கோணைநாதப் பெருமானின் தலை சிறந்த உற்சவமான தெப்பத் திருவிழாவை அவர் கண்டதில்லை. 1983ம் ஆண்டு சித்திரை மாத வருடாந்த உற்சவத்தின் போது கோணேஸ்வரம் சென்றார். ஏப்ரல் 16ம் திகதி இரவு நடைபெற்ற தெப்பத்திரு விழாவைப் பார்த்திருக்கிறார். அவரை அன்று பரவசப்படுத்திய திருவிழாவைப் பற்றி 'சிந்தாமணி' வார இதழில் திரு. சிவநாயகம் அவர்கள் எழுதிய அருமையான கட்டுரையை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.எம்.கே.செல்வராஜா அவர்கள் படிவம் எடுத்து அனுப்பியிருந்தார். அக்கட்டுரையை இங்கு தருகிறேன்.

உலகத்தில் எங்கும் இல்லாத ஒரு புதுமைத் திருவிழா திருகோணமலையில் வருடா வருடம் நடைபெறுகிறது!

திருக்கோணேஸ்வரம் ஸ்ரீ மாதுமை அம்பாள் சமேதகோணைநாதேஸ்வரப் பெருமானின் தெப்பத் திருவிழாவைத் தான் குறிப்பிடுகிறேன்.

இந்தக் கோலாகலமான தெப்பத்திரு விழா இவ்வருடம் நேற்றைய தினம், அதாவது 16.04.1983 சனிக்கிழமை இரவு நடந்து முடிந்தது. இந்தத் திருவிழாவைக் கையேற்று வருடா வருடம் பிரமாதமாக நடத்தி முடிப்பவர்கள் திருகோணமலைத் துறைமுக சரக்குக் கூட்டுத்தாபன ஊழியர்கள் ஆவர்.

இப்படியொரு பாரிய திருவிழாவை ஒழுங்கு முறையாக முன்னின்று நடத்துபவர்கள் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.எம்.கே. செல்வராசா (ஜே.பி.யு.எம்.) கௌரவ செயலாளர் பண்டிதர் இ.வடிவேல், பொருலாளர் திரு.சி.ஆறுமுகம் ஆகியோராவர்.

திரு.எம்.கே.செல்வராசா திருகோணமலையில் முன்னணியில் நிற்கும் ஒரு சட்டத்தரணியாவார். அத்தோடு அவர் அடிக்கடி திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல நீதிஸ்தலங்களில் நீதிபதியாகவும் கடமையாற்றி வருகிறார்.


திரு.எம்.கே.செல்வராசா பரிபாலன சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து, கோணேஸ்வர ஆலயம் பல திருப்பணிகளையும், பல நிர்மாண வேலைகளையும், பல முன்னேற்றங்களையும் கண்டிருக்கிறது.

கும்பாபிஷேகங்களும் நடைபெற்றிருக்கின்றன.

ஆஜானுபாகுவான தோற்றமுடைய வர் திரு.செல்வராசா. ஸ்ரீ கிருஷ்ணனைப் போன்ற அவருடைய கரிய திருமேனியில், கழுத்திலிருந்து தொப்புள் வரை திறந்த மார்பில் தொங்கும் தடித்த தங்க வடச் சங்கிலியோடு அவர் காட்சி தருவது தலைவர் பதவிக்கு ஏற்ற ஒரு பொருத்தமான பேர்வழிதான் அவர் என்ற நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கும்.

திரு.செல்வராசா என்னை எப்போதும் அண்ணா என்றே அன்புடன் அழைப்பார். இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு முறை அவர் என்னைக் கொழும்பில் சந்தித்த பொழுது, "அண்ணா. நீங்கள் அவசியம் திருகோணமலைக்கு வர வேண்டும்" என்றார்.

"இது என்ன தம்பி விசித்திர அழைப்பு!



திருகோணமலை எனது பிறந்த ஊர். அங்கு அடிக்கடி நான் சென்று வருகிறேன். புதிதாக ஒருதரம் வர வேண்டுமா?" என்று கேட்டேன்.

அதற்கு பதில் கூறாமல் அவர், நீங்கள் தெப்பத் திருவிழா பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

எனக்கு கொஞ்சம் எரிச்சலாகக் கூட இருந்தது. நான் இந்தியாவில் சிறிது காலம் படித்தவன். அடிக்கடி இந்தியா சென்று வருபவன். அங்கு அநேகம் கோயில்கள் இருக்கின்றன. பல கோயில்களில் அழகான தெப்பக்குளங்களும் இருக்கின்றன. அந்தத் தெப்பக்குளங்களில் வருடா வருடம் தெப்பத் திருவிழாக்கள் நடப்பதுண்டு.

ஏன், மதுரையை எடுத்துக் கொண்டால் கூட, அங்கு மாரியம்மன் தெப்பக் குளம் இருக்கிறது. திருச்சியில் மலைக் கோட்டைக்குள்ளேயே தெப்பக் குளம் இருக்கிறது. அங்கெல்லாம் வருடா வருடம் தெப்பத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அவற்றை எல்லாம் நான் பார்த்திருக்கிறேன்.

இப்படிப்பட்ட என்னைப் பார்த்து, கேவலம். "நீங்கள் தெப்பத் திருவிழா பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்பதா? அப்படிக் கேட்டால் எனக்கு-எரிச்சல் வராதா?

நான் தெப்பத் திருவிழாக்களை ஏற்கனவே பார்த்த விவரங்களை எல்லாம் சுருக்கமாக திரு.செல்வராசாவுக்கு எடுத்துச் சொன்னேன்.

நான் கூறியவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்டு விட்டு, "அது சரி அண்ணா, நீங்கள் திருகோணமலைக்கு வந்து கோணேஸ்வரப் பெருமானின் தெப்பத்திருவிழாவை ஒரு தரம் பாருங்கள்" என்று மேலும் வற்புறுத்தினார் அவர்.

நான் திருகோணமலையில் மாணவனாக இருந்த காலத்தில் தெப்பத் திருவிழா என்று ஒன்று அங்கு நடைபெற்றதில்லை.

மூவாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த கோணேசர் ஆலயத்தை கி.பி. 1624ஆம் ஆண்டு-தமிழ் மக்களின் புத்தாண்டுத் தினமாகிய சித்திரை வருடப் பிறப்பன்று போர்த்துகீஸத் தளபதி ஒருவன் தரைமட்டமாக்கினான். அதன் பின்னர் சுவாமி மலையின் உச்சியில், கடலினுள்ளே உயர்ந்து நிற்கும் கற்பாறையில் நின்று சிதாகாசவெளியில் மலைப்பூசை மட்டும் நடைபெற்று வந்தது. அப்போதெல்லாம் ஏது தெப்பத் திருவிழா?


1950க்கும் 1960க்கும் இடையில் திருக்கோணேஸ்வரம் புதுப்பிக்கப்பட்டது. புதிய கோயில் அழகுற அமைக்கப்பட்டது.

ஆலய பரிபாலன சபைக்கு திரு.செல்வராசா தலைவராக வந்தார். அதன் பின்னரே புதிய புதிய திருவிழாக்கள், புதிய புதிய நகர் வலங்கள், புதிய புதிய பூஜைகள், புதிய புதிய கொண்டாட்டங்கள் எல்லாம் திட்டமிட்டு நடைபெறத் திருவருள் பாலித்தது. அப்படி ஏற்படுத்தப்பட்ட திவ்விய வைபவங்களில் ஒன்றுதான் இந்தத் தெப்பத் திருவிழாவும் ஆகும்.

இந்தியக் கோயில்கள் பலவற்றில தெப்பத் திருவிழாக்கள் நடைபெற்ற போதிலும், திருகோணமலையில் நடைபெறும் தெப்பத் திருவிழா போன்று ஒரு புதுமையான தெப்பத் திருவிழா உலகில் வேறு எங்கும் நடைபெறுவதாக நான் அறிந்ததில்லை.

மற்ற மற்றக் கோயில்களில் எல்லாம் அதிக பட்சம் கால்மைல் நீளம், கால் மைல் அகலம் உள்ள தெப்பக் குளங்களில் தான் தெப்பத்தை மிதக்க விடுவார்கள் அதில் எழுந்தருளி மூர்த்தம் ஏற்றப்பட்டு விழா நடைபெறும்.

திரு.செல்வராசாவின் அழைப்பை ஏற்று திருகோணமலை சென்ற போதுதான் கோணை நாயகரின் தெப்பத் திருவிழா எத்தகைய ஒரு பிரமாண்டமான திருவிழா என்பதை என்னால் உணர முடிந்தது.



திரு சிவநாயகம் அவர்களுடைய திருமலை தெப்பத்திருவிழா பற்றிய விவரணம் இத்துடன் முற்றுப் பெற்றது. இக்கட்டுரை தொடரும் என்று முடிவில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் எமக்கு இதன் தொடர்ச்சி கிடைக்கவில்லை. ஆகவே திருக்கோணைநாதரின் தெப்பத்திருவிழா பற்றியும் அங்கு நடைபெறும் புதுமையான தீர்த்தோற்சவம் பற்றியும் இங்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

மலையுச்சியில் உள்ள ஆலயத்திலிருந்து மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமாள் வசந்த மண்டபத்தில் இடம் பெறும் சோடோபசாரப் பூசைகளைத் தொடர்ந்து கீழே கோட்டை வாயில் வரை எழுந்தருளி வருவார்.

திருக்கோணைநாதப் பெருமான் உறையும் திருமலை மூன்று புறமும் கடல் சூழ்ந்துள்ளது. கடற்கரையில் அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ள தெப்பம் காத்திருக்கும். சுவாமியை வலது புறமாக எடுத்து வந்து அலை கடலின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் தெப்பத்தின் மீது வைப்பார்கள்.

மேள தாள வாத்தியங்கள் முழங்க பக்தர்களின் அரோகரா கோஷம் வானைப் பிளக்க, தெப்பம் கடலில் திருமலையைச் சுற்றி இடது புறமாகவுள்ள கரையை வந்தடையும்.

தெப்பத்தைச் சூழ்ந்து எண்ணற்ற படகுகளில் பக்தர்கள் கடலில் சுற்றி வருவார்கள். இது உலகில் வேறு எங்கணுமே காண முடியாத அற்புதத்திருவிழாவாகும்.

தெப்பத்திருவிழாவைப் போல் திருக்கோணேஸ்வரத்தில் இடம் பெறும் தீர்த்தோற்சவமும் வேறு எங்கனுமே காண முடியாத புதுமையான நிகழ்ச்சியாகும்.

பண்டைப் பெருமைவாய்ந்த திருக்கோணேஸ்வரம் காலத்திற்குக் காலம் பல வகையான மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. பல தடவைகள் திருக்கோணேஸ்வர ஆலயம் இடிக்கப்பட்டு அவ்வப்போது புனருத்தாரணப் பணிகள் நடைபெற்று அவ்வப்போது ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டு வந்துள்ளன. ஃபிரிட்டிஷார் காலத்தில் இம்மலையைத் தங்கள் கோட்டையாக அமைத்து விட்டனர். ஃபட்டரிக் கோட்டை என்று இதற்குப் பெயர் சூட்டினர். இப்போது அரச அலுவலகங்கள் காணப்படும் கச்சேரியின் முன்புறம் பாபநாசம் திருக்குளம் அமைந்திருந்தது. இக்குளத்தை மூடி விட்டார்கள். ஒரேயொரு இடத்தில் ஒரு கிணறை மட்டும் அமைத்திருக்கிறார்கள்.

தீர்த்தத் திருவிழாவன்று சுவாமி இந்தத் தீர்த்தக் கிணறுக்கு அருகில் உள்ள ஒரு கொட்டகையில் கொண்டு வந்து வைக்கப்படும். கடற்படையினர் இயந்திர சாதனங்கள் மூலம் கிணற்றிலுள்ள நீரை குழாய் மூலம் இறைத்து அதிலிருந்து வானுயர பீச்சியடிக்கப்படும் நீரில் பக்தர்கள் அனைவரும் தீர்த்தமாடுவார்கள்.

ஆகவே திரு.சிவநாயகம் அவர்கள் குறிப்பிட்டது போல் 'திருமலைத் தெப்பத் திருவிழா உலகத்திற்கு ஒரு புதுமை' என்பது மட்டுமல்லாமல் அங்கு இடம் பெறும் 'தீர்தோற்சவமும் உலகத்திற்கு ஒரு புதுமை' என்று கூறிவைக்க விரும்புகிறேன். **(இன்னும் வரும்)**

## செழியன் மறைவு ஈடற்ற பேரிழப்பு

**திரு.** செழியன்.ஜெ.பேரின்பநாயகம் அவர்களுடைய மறைவு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்த ஓர் இடியாக விளங்குகிறது. இவர் மாணவப்பருவத்திலேயே எழுத்துலகில் காலடி எடுத்து வைத்தவர்.

மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் மாணவனாக இருக்கும் போதே தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு தொண்டுகள் பல புரிந்தவர்.

இந்நாட்டின் இனப்பிரச்சனை தலையெடுத்து தமிழ் மக்கள் இன்னல்கள் பலவற்றை அனுபவித்து வந்த காலகட்டத்தில் மட்டக்களப்பு சமாதான சபையின் செயலாளராக இருந்து அளப்பரிய சேவை செய்தவர். அப்பாவிப் பொது மக்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படும் போதும் ஆயுதப்படையினரின் துன்புறுத்தல்களுக்கு ஆளாகும் போதும் அங்கெல்லாம் ஓடோடிச் சென்று அவர்களை விடுவிக்க அரும்பாடுபட்டுழைத்தவர். இத்தகைய சீரிய தொண்டினால் அவர் மட்டக்களப்பு மாநகரசபையின் பிதாவானார். அவருடைய பதவிக் காலத்தில் அரிய பல தொண்டுகளைச் செய்து மட்டக்களப்பை பசுமை சூழ்ந்த நகரமாக மாற்றியமைத்தார்.

எத்தகைய பதவி ஏற்ற போதும் அவர் தமது எழுத்துப் பணியை விட்டு விடவில்லை. முரசில் அவருடைய சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், ஆகியன இடம் பெற்றுள்ளன. 'உதாரா' என்ற புனைபெயரில் புகுந்து பல தகவல்களை நகைச்சுவை ததும்ப எழுதி வந்திருக்கிறார்.

அமரர் செழியன் பேரின்பநாயகத்தின் மறைவு ஒரு பெரும் இடை வெளியை ஏற்படுத்தியிருக்கிறது. அன்னாரின் குடும்பத்தாருக்கு முரசு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 74**

## அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
> —கண்ணதாசன்—

மதுவைக் குடிப்பதில்லை. மாமிசத்தைக் கடிப்பதில்லை. மங்கையரைப் பிடிப்பதில்லை என்று பேசிவிட்டு, அனைத்தையும் பள்ளியறையிலே வைத்திருக்கும் யோக்கியனைத்தான் நாடு கண்டு கொண்டிருக்கிறது.

அநுபவிப்பதைத் தவிர்க்க முடியவில்லை என்றால், அநுபவியுங்கள்; ஆனால் உண்மையை ஊருக்குச் சொல்லி விடுங்கள், என்பதே என் முழக்கமாகும்.

நான் குடிப்பேன், அந்தரங்கத்தில்; ஆனால் அரங்கத்தில் அதை மறுத்ததில்லை.

எனக்கு எத்தனை பெண்களிடம் சகவாசமும், பழக்கமும் உண்டோ அத்தனையும் கதைகளாக வந்துவிடும்.

எதற்காக நான் அவற்றை மறைக்க வேண்டும்?

யாருக்கு நான் பயப்பட வேண்டும்?

உங்கள் சமூக கௌரவத்தில் இருந்து என்னை ஒதுக்கி வைத்து விட்டாலும் சரியே, நான் போலி வேஷதாரியாக வாழத் தயாராக இல்லை.

என்னை ராஜா வேஷம் போடச் சொன்னால், நாடு கேட்பேன், ஆள.

என்னை தகப்பன் வேஷம் போடச் சொன்னால், ஒரு மனைவி கேட்பேன், வாழ.

அந்தரங்கத்தில் ஒருவனாகவும், அரங்கத்தில் ஒருவனாகவும் நடிப்பவனுக்குத்தானே உலகத்தில் மரியாதை என்கிறீர்களா?

அவன் மரியாதை ஒரு கட்டத்தில் சந்தி சிரிக்கும். நானோ எவனையும் எப்போதும் சந்தியில் நிறுத்துவேன்.

நானோர் திறந்த புத்தகம், திரையில்லாத மேடை.

ஆனால் எவரையும் எந்நேரத்திலும் என்னால் விமர்சிக்க முடியும்.

ஆனால் துர்பாக்கியம் பிடித்த பாவப்பட்ட ஜன்மங்கள் அக்கிரமக்காரர்களுக்கு பலி ஆடாகும்போது அதைத் தவிர்க்க முடியாமல் நான் தவிக்கிறேன்.

காரணம், நான் பதவியிலே இல்லை.

என் கையில் இருப்பது பேனா ஒன்றே!

'காக்கை உன் தலைக்கு மேலே வட்டமிடுவதை உன்னால் தடுக்க முடியாது; அதை உன் தலையிலே கூடுகட்டிக் குஞ்சு பொறிக்காமல் தடுக்க முடியும்' என்று ஒரு பழமொழி உண்டு.

சில காக்கைகள் சிலர் தலைகளில் குடும்பமே நடத்துகின்றன.

பதவியில் இருப்பதால் அது முடிகிறது.

படுமோசமான இந்தச் சமுதாய அமைப்பில் நாணயமானவன், வசதியற்றவனாக இருந்தால் அவன் அவதிப்பட நேரிடுகிறது.

நாணயம் கெட்டவன் அதிகாரத்திற்கு வந்து விட்டால், ஏழையும் அநுபவிக்க முடிகிறது.

பணக்காரர்களின் பணத்தோடும், ஏழைப் பெண்களின் மானத் தோடும் அது விளையாடுகிறது.



இரவு பதினொரு மணிக்கு மேல் சிலர் நினைவிழந்து கிடக்கிறார்கள்; காலையில் அவர்களே மகாத்மாக்களாகி விடுகிறார்கள்; இதை யாரிடம் போய் சொல்வது?

ஒரு தடவை தேவலோகத்துக்குச் சென்று இறைவனைச் சந்தித்து விட்டு மீண்டும் பூலோகத்துக்குத் திரும்ப முடியுமானால் சிலருக்குக் கொடிய நோய்களைக் கொடுக்குமாறு அவனை நான் வற்புறுத்துவேன்.

அவர்களுடைய பெயர்களை என்னால் வெளியிட முடியவில்லை. காரணம் அவர்கள் அரங்கத்தில் பெரிய மனிதர்களாக உலாவிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது அந்தரங்கத்தைப் பற்றி நான் சொல்வது பூலோகத்தில் எந்த முட்டாளுக்குப் புரியப் போகிறது?

-இப்படி நான் பேசிவிட்டு, அனைவரையும் அழைத்துக் கொண்டு வெளியில் வந்தேன்.

'எங்கள் உத்தமத் தலைவர் வாழ்க' என்று ஒரு கூட்டம் ஊர்வலமாகப் போய்க் கொண்டிருந்தது.

நாங்கள் ஏறி உட்கார்ந்த காருக்குள்ளே ஏசுநாதர் படம் மாட்டி இருந்தது.

"எங்களை மேய்ப்பனே, இந்த ஆடுகளையும் நீங்கள் தான் மேய்க்கிறீர்களா?" என்று கேட்டேன் நான்.

சந்திரபுஷ்கரணியும், கற்பகமும், கொஞ்ச நேரம் கவலையை மறந்து சிரித்தார்கள்.

(அந்தரங்கம் முடிந்தது)

# தேன் தொட்டால்....



வழக்கமாக, மதியம் இரண்டு மணிக்கு உறங்கச் சென்றால் மாலை ஐந்து மணிக்கு மனைவி தலைமாட்டில் தேனீரைக் கொண்டு வந்து வைத்துவிட்டு எழுப்பினாலும் முணங்கி, பிரண்டு புரண்டு எழும்புபவன்; இன்று நான்கு மணிக்கே எழும்பிவிட்டான். எழுந்தது மட்டுமல்ல, 'கட கட' என்று கிணற்றடிக்குச் சென்று, 'மள மள' என்று நீரை மொண்டு மேனியில் ஊற்றிக்கொண்டு, 'கிடு கிடு' என்று உடலைத் துடைத்துவிட்டு, 'மட மட' என்று உடுப்பை மாற்றிக்கொண்டு, 'சட சட'என்று தலையை வாரிக்கொண்டு, 'திரு திரு' என்று முழித்த வண்ணம் உலாவிக்கொண்டிருந்தான் அவன்.

என்னதான் குசினியில் வேலை செய்து கொண்டிருந்தாலும், இவற்றையெல்லாம் அவன் மனைவி கவனிக்காமல் இல்லை. அவளுக்கு விளங்கிவிட்டது. தன் கணவன் எங்கோ போவதற்காகத்தான் இந்த எடுப்பெல்லாம் என்று. தன் கணவனின் ஒவ்வொரு அசைவையும் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றாள் அவள். அதற்காக அவள் கணவனை அடக்கி ஆள்பவள் என்று எண்ணிவிடக் கூடாது. கணவனின் குணமறிந்து, அவனின் இயல்புக்கேற்ப தன்னை வளைத்து அவன் மனம் நோகாமலும், தனக்கு கஷ்டம் வராமலும் பாங்காகக் குடும்பத்தைக் கொண்டு நடத்தும் இல்லத்தரசி அவள். வள்ளுவருக்கு ஏற்ற வாசுகி போல்.

"ஏங்க! எங்கயாவது போகப்போறீங்களா?"

ஒன்றுமே தெரியாதவள்போல், கையில் தேனீர்க்கப்போடு வந்து நின்றாள் அவள் முன்னால்.

எதிர்பாராத அவளின் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளமுடியாமலும், விளங்கிக் கொள்ளாமல் இருக்கமுடியாமலும் சமாளித்தவனாய், "இல்லையே!" என்று சர்வ சாதாரணமாகக் கூறுவதுபோல் கூறிக் கொண்டே, தேனீரை வாங்கிப் பருகத் தொடங்கினாள்.

"அப்படியென்றால் நீங்கள் எங்கோ போகப்போறீங்க," என்றாள் கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டே.

குடித்தத் தேனீர் அவன் தொண்டைக்குள் பொறுத்தது-புரக்கேறியது.

அவள் அவன் உச்சியில் தட்டிவிட்டாள்.

"இதுக்குத்தான் நான் நேரத்தோடு எழும்பிறதில்லை.... இன்டைக்கெண்டு நித்திரை வரயில்ல. அதோட ஒரே புளுக்கமாக இருந்தது. குளிச்சன். உனக்கு உடனே மூக்கில் வேர்த்திடுமே!

கோபிப்பதுபோல் பேசியபோதும், அவன் மன அடித்தளத்தில் தன் மனைவியின் நுண அறிவை மெச்சாமல் இருக்க முடியவில்லை.

"சரி! சரி! அதுக்கேன் இப்படிக் கோவிக்கிறீங்க? நீங்க இன்டைக்குக் குளிச்சதைப் பார்த்து எனக்கு ஒரே சந்தோஷம். அது தான் கேட்டனான்!"

"அப்ப. நான் எங்கயாவது புறப்பட்டால் தான் குளிப்பன். அப்படித்தானே?"

"சீச்சீ.... நீங்க ஒவ்வொருகிழமையும் இரண்டு தரம் குளிப்பீங்க என்று எனக்குத் தெரியும். இண்டைக்கு ஒரு நாள் முந்திக் குளிச்சிற்றீங்க அதுதான்...."

அவன் எரிச்சலோடு திரும்பினான். அங்கே அவளைக் காணவில்லை.

அதென்னவோ உண்மைதான். குளிக்க என்று தான் சோப்போடு கிணற்றிற்குப் போவான். வரும் போது, உடம்பை மட்டும் துடைத்துக் கொண்டு வருவான். குளிக்கப்படு சோம்பல். கள்ளன்.

"ஏங்க நீங்க ஒரு இடமும் போக இல்லைத்தானே?" மீண்டும் கேட்டுக் கொண்டே குசினியில் இருந்து வெளியே வந்தாள்.

"ஐயோ!... நான் தெரியாமல் குளிச்சுப் போட்டு படுற பாடு....." உரக்கக் கத்தினான்.

"சரி, சரி அதைவிடுங்க; இந்தாபாருங்க. இந்தப்பால்காரரான் பால் கொண்டுவர ஆறு மணி ஆகிடும். அதோட அந்தப் பால் தண்ணியாகவே இருக்கும். நீங்க கொஞ்சம் நேரத்தோட போனீங்களென்டால், நேரவே நின்று, பால் கறந்து உடனே தண்ணிகலக்க விடாமல் பாலை வாங்கி வந்து விடலாம். நானும் கொஞ்சம் வெள்ளணையோடேயே அடுப்புவேலையை முடிச்சுக் கொண்டு குசினியை விட்டு வெளியே வந்திடுவன்!" என்றாள்.

அவனுக்குத் 'திக்' என்றது. ஒரு டுப் அடித்துவிட்டு, தாபியோட லெட்சுமியில் ஓடுற ஆங்கிலப்படம் பார்க்கத்தான் இவ்வளவு தடபுடலும். அதோட இன்றுதான் அந்தப் படத்தின் கடைசிநாள். அதுக்குமேல் அவனால் யோசிக்க முடியவில்லை.

மணியைப் பார்த்தான்.

ஐந்து.

படம் ஆறுமுப்பதுக்குத்தானே. நேரம் இருக்கு. மனதைத் தேற்றிக் கொண்டான்.

"இந்தாங்க போத்தல்!" அவனிடம் போத்தலை நீட்டியவள்,

"என்னங்க யோசிக்கிறீங்க?" என்றாள்.

மௌனமாக போத்தலை வாங்கிக் கொண்டான். சையிக்கலை வெளியே எடுத்தான்.

## [illegible]வந்தன்

பெரியகடை ஆஸ்பத்திரி அடிக்குச் சென்று பாலை வாங்கிக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்துக்கொண்டே கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஐந்தே முக்கால். பெரு மூச்சொன்று வெளியே வந்தது.

"எங்கட கிராமத்தில எத்தனை எருமை எத்தனை பசுவக் கட்டிப் பால் கறந்திருப்பன், எத்தனை பேருக்கு என்ர கையால எவ்வளவு பாலைத்தான் அளந்து சும்மா கொடுத்திருப்பன். இந்தப் பிரச்சனையால மாடும் போச்சு கன்றும் போச்சு வீடும் போச்சு, இங்க வந்து தண்ணிப்பாலக் காசு கொடுத்து வாங்கிக் குடிக்கவேண்டி இருக்கும்!" என்று கூறிக் கொண்டே பால்போத்தலைத் தூக்கிச் சாடையாக ஆட்டிப்பார்த்தாள்.

"இந்த மனுசன் அனுப்பின நேரத்துக்கு நான் சும்மா இருந்திருக்கலாம், இந்தப்பாலும் தண்ணியாத்தான் இருக்கு. ஏன்தான் இந்தமாதிரி அநியாயம் செய்யிறாங்களோ தெரிய இல்ல!" முணுமுணுத்துக் கொண்டே குசினிக்குள் சென்றாள் பால்போத்தலோட,

"இப்பத்தைய மாடெல்லாம் கொம்பியூட்டர் படிச்சிருக்கு, அதுகளுக்குத் தெரியும் எத்தனவீதத் தண்ணியோட எத்தனை வீதப் பாலைக் கொடுக்கவேணும் எண்டு!"

கூறிக்கொண்டே அறையில் இருந்து வெளியே வந்தான் தாபி.

"நீ....?" என்று வியப்போடு கேட்குமுன்பே, கையைக் காட்டி அவனைப் பேசவிடாமல், தொடர்ந்தான் தாபி.

"எல்லாம் மனிசியிற்ற சொல்லிற்றன், நீ போய் முகத்தைத் துடைத்து வெளிக்கிட்டு கெதியா வா, நான் வெளியில நிற்கிறன்!" என்று கூறிக்கொண்டே வெளியே சென்றான் தாபி.

தண்ணீரைக் கையால் தொட்டு முகத்தில் பூசித் துண்டால் துவட்டிவிட்டுப் பவுடரைப் பூசிக்கொண்டே, மனைவியிடம் சொல்லிவிட்டுப் போவதற்காக குசினிக்குள் எட்டிப்பார்த்தான். அவனுக்குத் 'திக்' என்று இருந்தது, "என்ன இது?" அவனை அறியாமலே அவன் வாயில் இருந்து. பதட்டதோடு வார்த்தைகள் வெளியே வந்து விழுந்தன.

"அந்தப் பிள்ளைத்தாச்சி பாவம். கன நாளாக என்னட்ட ஒரு அரைப்போத்தல் சுத்தமான பால் வாங்கித் தாங்கக்கா என்று கேட்டிது, அதுதான்!"..... என்று இழுத்தாள்.

"அதுக்கு.... நீ ஏன் இதில தண்ணி கலக்கிறாய்?" என்று கேட்ட அவனை "நீங்க சும்மா இருங்க. உங்களுக்கு ஒன்றும் தெரியாது!" என்று பதிலுக்கு மடக்கி விட்டு, அவனையும் விலக்கிக் கொண்டு வெளியேறினாள் தண்ணிகலந்த பால்போத்தலை கையில் ஏந்தியபடி.

# வீட்டுக் கடன்

அலுவலகத்திலிருந்து அப்பொழுதுதான் வந்த தியாகன் அலுவலக பேக்கைத் தூக்கி எறிந்துவிட்டு புவனாவைத் திட்டிக் கொண்டிருந்தான். "ஒப்பீசில மனேஜர் பைலைக் காணல்லெண்டு எனக்குப் பேசினார்..... உனக்குக் காஸ்குக்கர் தேவைப்படுது.... என்ன உங்கப்பா எனக்கு லெச்சக்கணக்கில சீதனம் தந்தவங்களோ? எல்லாம் வாங்கி வைக்க..... ஒப்பீசில கரைச்சலெண்டு வீட்டுக்கு வந்தா இங்கேயும் தொல்ல..... சீ....!" அவனது பேச்சில் ஆத்திரம் நிரம்பியிருந்தது.

புவனா ஓடிப்போய் கட்டிலில் விழுந்து அழ ஆரம்பித்தாள். தியாகன் கதிரையில் அமர்ந்தபடி கன்னத்தில் கையூன்றிக் கொண்டிருந்தான். 'நான் எப்படியிருந்தாலும் புவனாவிற்கு இப்படித் திட்டியிருக்கக் கூடாது!' என்று எண்ணினான். உள்ளே எழுந்து போனான். புவனாவின் தலையில் அன்பாகத் தடவினான்.

"புவனா... அழாத, ஐயம் சாரி..... ஏதோ



ஆத்திரத்துல சொல்லிட்டன்..... இங்க பாரு ஒப்பிசிலையும் கரைச்சல் கொடுத்திட்டாங்க. அதனால அப்படிப் பேசிட்டன். எழும்பு புவனா..... எனக்குப் பசிக்குது. தேத்தண்ணி போடன்!" சமாதானப்படுத்தினான் தியாகன்.

"நீங்க தானே சீதனமெல்லாம் வேணாம்... நீ தான் எனக்குச் சீதனம் எண்டு அன்றைக்குச் சொன்னீங்க.... இப்ப எங்க வீட்டுல சீதனம் தரலென்றதை குத்திக் காட்டுறீங்களே!" படபடவென்று கதைத்து விட்டு கண்களில் இருந்து வடிந்து கொண்டிருந்த கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்தபடி தேநீர் போடுவதற்காகக் குசினிக்குள் புகுந்தாள்.

தியாகனும் புவனாவும் காதலித்துத்தான் கல்யாண பந்தத்தில் இணைந்தவர்கள். திருமணம் முடித்து இப்பொழுது தான் ஆறு மாதங்களாகின்றன. புவனாவும், தியாகனும் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்கள். தியாகன் தற்போது கச்சேரியில் இலிகிதராக வேலை பார்க்கிறான். காதலித்தவளைக் கைவிடாமல் மணம் முடித்தவன். புவனா ஒரே ஒரு பிள்ளை. என்றாலும் சீதனம் என்று அவள் வீட்டில் கொடுப்பதற்கு எதுவுமில்லை. வயல் மேட்டில் ஒரு துண்டுக்காணியும் ஊருக்குள் ஒரு பழைய வீடுமே அவர்களிடம் இருந்தது. சீதனமாக அந்த வீட்டைக் கொடுத்துவிட்டு, காணித் துண்டில் ஒரு குடிசையைக் கட்டி புவனாவின் தாயும் தகப்பனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தியாகன் கொஞ்சம் கொஞ்சமாக உழைத்துத்தான் வீட்டிற்குரிய பொருட்களையெல்லாம் வாங்கிக் கொண்டிருக்கிறான். ரி.வி, ரேடியோ என்று ஓர் ஆறு மாதத்தில் வாங்கிவிட்டான்.

"ஏங்க... சமையல் வேலைய நேரத்தோட முடிக்கிறதுக்கு காஸ் குக்கர் ஒன்று வாங்கிட்டா உதவுமே... அடுப்புப் புகையால எனக்கு வேற அஸ்மாவும் குறையுதில்லை.... பக்கத்து வீட்டு சீதா கட்டுப்பணத்தில வாங்கியிருக்காளாம்.... நீங்களும் விசாரித்துப் பாருங்களன்!" என்று அடிக்கடி புவனா சொல்லுவாள்.

அவனால் ஒரு மாதத்தில் சம்பாதிக்கும் மூவாயிரம் ரூபாவில் உடனடியாக முடியுமா? "அடுத்தடுத்த மாதங்களில் வாங்குவம்!" என்று பல மாதங்களாகச் சொல்லிவந்தான். இன்றும் அவள் அதைப்பற்றிய பேச்செடுத்ததால் சண்டை வெடித்தது. "புவனா.... புள்ள... புவனா....!" புவனாவின் தாய் கையில் வாழைப்பழம் ஒரு சீப்புடன் வீட்டிற்குள் நுழைந்தாள். அம்மாவைக் கண்ட புவனா தேனீர்க் கோப்பையைத் தியாகனிடம் கொடுத்துவிட்டு "வாங்கம்மா.... என்ன இந்த வெய்யில்ல வந்திருக்கிற?" தலைமுடியைக் கோலிக் கொண்டை கட்டியபடி கேட்டாள்.

தியாகன் தேநீர்க் கோப்பையை எடுத்துக் கொண்டு மாமியைப் பார்த்துச் சிரித்துவிட்டு முற்றத்திற்குப் போனான்.

"வீட்டில போட்ட பழம். உனக்கு கதலிப் பழமெண்டால் நல்லவிருப்பமே. அதான் கொண்டு வந்தனான்.... என்னடி கண்ணெல்லாம் சிவந்திருக்கு.... உடம்புக்கு ஏதாச்சும் வருத்தமா?" அவளின் கையைப் பிடித்துத் தாய் கேட்க; அவள் தாயின் தோளின் மீது சாய்ந்து அழத் தொடங்கினாள். கணவனுடன் நடந்த சம்பவத்தை விளக்கமாகச் சொன்னாள்.

"நீ ஒன்னுக்கும் யோசிக்காத.... மாப்பிள்ள ஏதோ கோபத்துல சொல்லிட்டார்!" என்றபடி மகளைத் தேற்றிவிட்டு, வீட்டுக்குப் புறப்பட்டாள் அவளின் தாய்.

நாட்கள் பின்னோக்கி நகர ஆரம்பித்தன. அன்று அலுவலகத்திலிருந்து வந்த தியாகன் அவசர அவசரமாக புவனாவைக் கூப்பிட்டான். "புவனா...... உங்க அப்பா என்ட எக்கவுண்டில ஒரு லட்சம் போட்டிருக்கிறார்.... நீ ஏதாச்சும் சொன்னியா?" வியப்புடன் கேட்டான்.

"இல்லியே.... நான் ஒன்னும் சொல்லலியே.... நீங்க அன்றைக்கு சீதனம் தரலென்று பேசினதைத்தான் அம்மாட்ட சொன்னனான்...... இவ்வளவு காசு எப்படி வந்திருக்கும் அவங்களுக்கு?" அவளுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. என்ன? ஏதென்று கேட்கவேண்டும் என்றிருந்தது அவளுக்கு. அறைக்குள் போய் அவசரமாகச் சேலை கட்டிக் கொண்டு தமது பெற்றோர் வசிக்கும் குடிசையை நோக்கி நடந்தாள்.

அவள் எண்ணமெல்லாம் அவர்களுக்கு ஒரு லட்சம் பணம் வந்த வழியை அறிந்து கொள்வதாகவே அமைந்திருந்தது.

"புவனா எங்க அவசரமாகப் போற?" வழியில் புவனாவின் தகப்பன் கண்டதும் கேட்டார். அவரது முகம் முன்னரை விடச் சோர்ந்திருந்தது. அவரைப் பார்த்ததும் அவளால் சில கணம் பேச முடியவில்லை.

"அப்பா... என்னப்பா இது. ஒரு லட்சம் உங்களுக்கு எப்படி வந்தது.... சொல்லுங்க?" கண்கள் இரண்டும் கலங்க பாசம் மிகுந்த வார்த்தைகளால் கேட்டாள்.

"இதப்பாரு புவனா... எப்படியிருந்தாலும் இந்தக் காலத்துல சீதனம் கொடுக்காதது எங்களோட பிழதானே..... அதால காணித் துண்டையும் வித்து அவருட்ட உன்ர சீதனத்தையும் கொடுத்திட்டம்.... இனி எல்லோருக்கும் நிம்மதி தானே!" என்றார்.

## அ. கோகுலதீபன்-கல்முனை

புவனாவின் கண்களிலிருந்து நீர் சொட்ட ஆரம்பித்தது. தனது தந்தையின் கையைப்பிடித்து அழுதாள். "அவரு அதுக்காகச் சொல்லலப்பா... ஏன் இப்படி அவசரப் பட்டனீங்க.... நீங்க இப்ப எங்க இருப்பீங்க? எங்களோட வீட்டுக்கு வாங்கோ!" அவளது பாசத்தை வார்த்தைகளுடன் சேர்த்து கண்ணீர்த்துளிகள் ஒவ்வொன்றும் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

"இல்ல புவனா நாங்க அங்கு வந்தாலும் ஆயிரம் பிரச்சனைகள் வரும். எங்களுக்குத் தானே அந்த வீடு இருக்கு....!" என்றபடி அவர் சுட்டிக்காட்டினார் அந்த 'பெரிய வீட்டை. அது ஒரு பரந்த வீடு. சொந்தம் இல்லாதோர்க்கும், சொந்தத்தால் கைவிடப் பட்டோர்க்கும் அடைக்கலம் கொடுக்கும் 'முதியோர் இல்லம்' என்ற பெயர்ப்பலகையைத் தாங்கியிருந்தது தான் அந்த வீடு.

# தேர்தல்

அன்றைய தினம் சிகப்புகரைவேட்டி, சால்வை, நெற்றியில் குங்குமப் பொட்டும், கையில் நான்கு விரலுக்கும் மோதிரம், கழுத்தில் செயினுடன் மிடுக்காக இருந்தார் திரு.ஜீவகுமார் அவர்கள். மிகவும் பதட்டமாகக் காணப்பட்டார். தேர்தல் முடிந்து இன்னும் சிறிது நேரத்தில் வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பித்துவிடும். அவருக்கு இது இரண்டாவது தேர்தல். முன்னைய தேர்தலில் வெற்றி பெற்றார். மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற நல்லெண்ணம் நிறையவே இருந்தது. பின்னர் அவருடைய செயலில் பலமாற்றங்கள், மக்களை மறந்தார், நிறையவே சுருட்டிக்கொண்டார். பிள்ளைகளின் பெயரிலே ஒரு மில்லும், இரண்டு தென்னந்தோப்பும் வாங்கிக் கொண்டார்.

ஜீவகுமார் இந்தத்தேர்தலில்



## இனுவில் உத்திரன்

மக்களை கவருவதற்காக சில லட்சங்களை செலவு செய்தார். ஏனென்றால் முதலாவது தேர்தலில் இயல்பாகவே எதையும் ஏற்றுக்கொள்ளும் மனோ பாவம் இருந்தது. இப்போது அப்படி அல்ல. இது ஒரு கௌரவ பிரச்சனையாகிவிட்டது. இத்தேர்தலில் தோற்றால், அவர் செய்த ஊழல்கள் உண்மையாகி விடுமே என்ற பயத்தினால். காலையிலே உதவியாளர் புடைசூழ எல்லா மதக்கடவுள்களையுமே வணங்கிவிட்டு, இறுதியாக பிள்ளையார் கோயிலுக்கு வந்தார். இந்த தேர்தலில் வெற்றிபெற்றால் ஒரு லட்சம் ரூபாவைக் காணிக்கை செலுத்துவதாகவும் வேண்டிகொண்டார்.

இரவு 11 மணி. முதல்கட்ட முடிவுகள் வெளியிடப்பட்டன. அதில் திரு ஜீவகுமார் மற்றவர்களைவிட முன்னணியில் இருந்தார். "என்னை ஒருத்தரும் அசைக்கேலாது!" உடனே சோடா போத்தல்கள் உடைக்கப் பட்டன. பட்டாசுக்கள் கொழுத்தப்பட்டன. ஜீவகுமார் சந்தோஷத்தில் மிதந்தார். "ஐயா நீங்கள் லட்ச ரூபா தருவதாய் அந்த பிள்ளையாருக்கு வேண்டுதல் செய்தபோதே எனக்கு தெரியும், சுட்டாயம் வெற்றி பெற்று விடுவீர்கள் என்று!" என ஓர் உதவியாளன் கூறியபோது "அடே முட்டாள் நான் ஒரு அரசியல்வாதி. இது பிள்ளையாருக்கு தெரியாதா என்ன? பிள்ளையாருக்கு என்னத்துக்கு காசு? சேமிப்பு கணக்கிலையா போடப் போறார். ஒரு மூன்று தேங்காய் அடித்துவிடு போதும். எனக்கு தெரியும் எங்கடை சனங்களை வலுசுலபமாகவே ஏமாத்திவிடலாம். எனிமிச்சத்தை அடுத்தத் தேர்தல்லை பார்த்துக்கொள்ளுவம்!" என்றார்.

அடுத்த நாள் காலை மதுபோதை தெளிந்து எழுந்தவருக்கு வேலைக்காரன் வந்து அந்த அதிர்ச்சியான செய்தியை கூறினான். "நீங்கள் படுதோல்வியாம் ஐயா!" திரும்பிப்பார்த்தார். கூட இருந்த ஒருவரையுமே காணவில்லை. சுவரில் மாட்டப்பட்ட பிள்ளையார் படம் மட்டும் தெரிந்தது. "எட முட்டாளே! எல்லாரையுமே எல்லாநேரத்திலையும் ஏமாற்றிவிடமுடியாது. என்பது உனக்கு தெரியாதாப்பா!" என்று கூறுவதைப் போல் இருந்தது அந்தப் படம்! தலையிலே கையை வைத்துக் கொண்டு "கடவுளே!" என்று ஒரு தடவை அழைத்தார். இப்போது கடவுளே என்று அழைத்தது பிள்ளையாரை அல்ல, மக்களைபோல இருந்தது. வாழ்க ஜனநாயகம்.

# நெஞ்சைக் களவாடியவள்!



உச்சிக்கு நகர்ந்து கொண்டிருந்த சூரியன் நிலத்தில் மரங்களின் நிழலைச் சுருக்கிக் கொண்டிருந்தான். பருந்தைக் கண்டு தாயின் அடியில் சென்று ஒளிந்து கொள்ளும் குஞ்சுகள் போல நிழல்கள் மரத்தின் அடிக்குள் பதுங்கச் சென்றன.

ஆல மரமொன்றின் வேரில் சாய்ந்து அமர்ந்திருந்தான் சசாங்கன். இமை திறந்து வெய்யிலைப் பார்த்தால் விழிப்படல நீரும் வற்றிவிடுமோ என்று அஞ்சும்படி இருந்தது சூரியச் சீற்றம்.

கண்மூடிச் சாய்ந்திருந்தவன், இடையிடையே விழி திறந்து சுற்றுமுற்றம் பார்த்துக் கொண்டான். அவனது மாடுகளும் அங்கங்கே இருந்த மரங்களினடியில் தஞ்சமடைந்திருந்தன. காலை மேய்ச்சலை அசைபோட்டபடி

## இலக்கிய நயம்

அவை படுத்திருந்தன. சூரிய வெம்மையைத் தாம் வாங்கிக் கொண்டு, கீழே தஞ்சமடையும் உயிர்களுக்குத் தாய்மை நிழலை அளித்துக் கொண்டிருந்த மரக்கிளைகளைப் பார்த்தான். இலைகள் தங்கத் தகடுகளாக மின்னின.

கண்ணயர்ந்தான்.

ஜல்..... ஜல்..... ஜல்....

கொலுசொலி கேட்டு சசாங்கன் மனமும் கண்களும் விழித்துக் கொண்டன.

தலையில் மோர்ப் பானையோடு கயல் வந்துகொண்டிருந்தாள். மோர் விற்றுத் திரும்புகிறாள். நடை தளர்ந்திருந்தது. அந்தக் களைத்த நடையிலும் அவள் ஒயில் வளர்ந்திருந்தது கண்டு சசாங்கன் மனம் கிளர்ந்தது.

அங்கங்கே அகன்றும் சிறுத்தும் நகரும் நதியென வந்துகொண்டிருந்தாள்.

பருத்து அகன்றிருந்தவை கண்களும், தோள்களும், இடுப்பின் கீழ் இறங்கிய பகுதியும்.

சுருங்கிச் சிறுத்திருந்தவை நெற்றியும், இடையும், பாதமும். வளைவுகளும் மேடு பள்ளங்களுமாக வந்துகொண்டிருந்த அந்த நதியசைவில் நனைந்து சிலிர்த்தது சசாங்கன் மனம்.

ஆலமரத்தின் கீழ் வந்து தலைப் பானையை இறக்கிவைத்து விட்டுப் பெருமூச்செறிந்தவள், முகத்தைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். பின்னர் அந்த முந்தானை கொண்டு முகத்துக்கு விசிறினாள். கடைக்கண் வீச்சில் இவனை வெட்டினாள். மறுகணமே அவனை ஒரு பொருட்டாகக் கருதாதவள் போல் குனிந்து முந்தானையால் கைகளைத் துடைத்தாள்.

"கயல்! மோர் விற்றுக் களைத்து விட்டாயல்லவா? சற்று உட்காரேன்...."

விழிச் சமுத்திரத்தை மறுபடி நிமிர்த்தினாள். ஆமாம், அவள் முகத்திலிருந்த மீன்களுக்குள் சசாங்கன் சமுத்திரத்தைக் கண்டான். மீனுக்குள் கடல்!

"மோர் விற்று வருவது எனக்கு வருத்தம் தருவதல்ல, இது எம் குலத்தொழில்தான். நீ மட்டும் என்னவாம்.... கையில் கம்போடு மாடுகள்தானே மேய்த்துக் கொண்டிருக்கிறாய்....?"

"இதோ பார்! ஏன் எதற்கெடுத்தாலும் கோபப்படுகிறாய்? இத்தகைய அழகுத் தேவதை ஒன்று வாடித் தளர்வது எனக்கு வருத்தமாயிருக்காதா?"

மீண்டும் கண்ணால் தூண்டிலை எறிந்தான். மீனுக்குத் தூண்டில் போடுவது சரி, மீனே தூண்டிலாகக் குத்தி இழுக்கிறதே! சசாங்கன் நிலை குலைந்தான். வலி உணர்ந்தான்.

"நீ உன் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? எனக்கு ஆயரென்றா? உன் மனத்துக்குள் தேவ ஞாயிற்றுத் தெய்வத்தின் மகன் தான் புகுந்து கொண்டிருக்கிறான்...."

சசாங்கன் மனம் துணுக்குற்றான்.

"இதனால் தான் கயல், நான் எதையுமே பேசவேண்டாம் என்று முதலில் எண்ணினேன். நீ என்னைச் சனி பிடித்தவன் என்றல்லவா ஏசுகிறாய். மலர் முகமும் மயிலிறகின் குருத்துப் போன்ற பற்களும், மூங்கில் தோள்களும், போர்க்களத்தில் பகைவரை உண்ணும் கொடிய ஆயுதங்கள் போல் என்னை உண்ணும் உன் கண்களும் உன்னுடன் பேசாமலிருக்க என்னை விடுகின்றதாயில்லை...." என்று கூறி அவள் கண்களைப் பார்த்தான்.

'நகைத்தே கொல்லவல்லேன்' என்று திமிருடன் சிரித்தன அவள் கண்கள். அவளின் கோப விளையாட்டு அவனுக்குப் புரியாமலில்லை. தொடர்ந்து சொன்னான்.

"உன் கண்களும், தோள்களும் என்னை நம்புகின்றன. என்னிடத்தில் உறவுகொள்ள விழைகின்றன. ஆனால் நீயோ எதையும் அறியாதவள் போல என்னிடத்தில் நடிக்கிறாய். உன் மனதை ஒளித்துப் பேசும் உன்னிடம் நான் எப்படிப் பேசமுடியும்?"

"அப்படியென்றால் பேசாதே!"

அவளது அலட்சியம் அவனுக்கு விசனத்தை ஏற்படுத்தியது.

"பதில் பேசாமல் இங்கிருந்து போக உன்னை விடமாட்டேன்!" என்றான் சசாங்கன்.

"என்ன இது குழந்தைப் பேச்சுப் பேசுகிறாய். ஏதோ காணததைக்

## தருவது முழடில்யன்

கண்டதுபோல் அங்கங்களை அளந்து பார்க்கிறாய். உன் குறுகுறுத்த கண்ணால் என்னில் எதையோ தேடுகிறாய். நான் உன்னிடம் எதையாவது வாங்கிச் சென்றேனா சொல்லு. ஏன் இப்படிப் படுத்துகிறாய்?" மேலும் அலட்சியம் தொனிக்கும் குரலில் கயல் கேட்டாள்.

சசாங்கன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"என்ன கொண்டு சென்றாய் என்றா கேட்கிறாய்? அந்த முல்லை மலர்க் காட்டின் நதிக்கரையில் வைத்து என்ன செய்தாய்? மாவடுவைப் பிளந்தது போன்ற உன் கண்களால் என் நெஞ்சத்தையே களவாடிச் சென்ற கள்ளியல்லவா நீ?"

கயலின் இதழ்க் கடையில் ஏளனச் சிரிப்பு நெளிந்தது.

"உன் நெஞ்சை எடுத்துச் சென்று நான் என்ன செய்ய முடியும்? அதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்ய? தாயக்கட்டம் உருட்டவா முடியும்? வயல்வெளியில் வேலை செய்கிற என் அண்ணனுக்கு அது உணவு கொண்டு போய்க் கொடுக்குமா? அல்லது பசுக்களை மேய்க்கிற என் தந்தை பால்கறக்கக் கலயம் கொண்டு போய்க் கொடுக்குமா? அதுவுமில்லாவிட்டால், தினையறுத்த புனத்திலே என் தாயார் மேயவிட்டிருக்கும் கன்றை அது மேய்ந்தபின் போய்க் கூட்டி வருமா?" என்று மடமடவெனக் கேட்டாள்.

சசாங்கன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"உண்மையில் என்னை உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையா பெண்ணே? என் நெஞ்சம் உன் அடிமையல்லவா? நீ ஏவும் தொழில்களையெல்லாம் செய்து முடிப்பதையே அது தன் பாக்கியமாய்க் கருதும் என்பதை நீ அறியாயா? அலட்சியமாய்ப் பேசாதே..... என் நெஞ்சை நீ அறிவாய். அதன் கடன் உன் கண்கள் இடும் பணிக்குக் கட்டுண்டு நடப்பதே....."

...........

கொண்டது,  
அளைமாறிப் பெயர் தருவாய்  
அதிறியோ அஞ்ஞான்று  
தளவமலர் ததைந்ததோர்  
கானச்சிற்றாற்றயல்  
இளமாங்காய் போழ்ந்தன்ன  
கண்ணினால் என் நெஞ்சம்  
களமாக்கொண்டு ஆண்டாய் ஓர்  
கள்வியை அல்லையோ;  
நின் நெஞ்சம் களமாக்கொண்டு  
யாம் ஆளல் எமக்கு எவன் எளிதாகும்;  
புனத்துளான் எந்தைக்குப்  
புகாய் உய்த்துக் கொடுப்பதோ  
இனந்துளான் என்னைக்குக்  
கலத்தொடு செல்வதோ  
தினைக்காலுள் யாய் விட்ட  
கன்று மேய்க்கிற்பதோ;  
அனைத்தாக......

(கலி: 25-34)

# ஸ்போர்ட்ஸ்

## மூன்று பாகிஸ்தான் வீரர்கள் இடைநிறுத்தம்



ஷஹிட் அஃப்ரிடி, ஹசன் ரசா, அத்திப்-உஸ்-ஸமான் ஆகிய மூன்று வீரர்களும் சிங்கப்பூரில் அண்மையில் நடந்த போட்டியில் பங்குபெறச் செல்வதற்காக, பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள ஹொட்டலில் தங்கியிருந்தார்கள்.

அப்போது சில பெண் இரசிகைகள் இவர்களுடைய அறைகளுக்குள் சென்றுள்ளார்கள். இதன் காரணமாக இவர்கள் மூவரும் தலா 50 ஆயிரம் ரூபா அபராதத்துடன் தற்காலிகமாக அணியில் இருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளனர்.

தாம் தங்கியிருந்த ஹொட்டல் அறைகளுக்குள் சில பெண்களை வர அனுமதித்ததற்காக பாகிஸ்தான் வீரர்கள் மூவர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

விசாரணைகளின் முடிவில் பாலியல் ரீதியான தவறுகள் நடந்ததற்கு ஆதாரம், எதுவுமில்லை எனத் தீர்ப்பளிக்கப்பட்ட போதிலும், அந்த 3 வீரர்களும் நைரோபியில் நடைபெறவிருக்கும் மினி உலகக் கோப்பைப் போட்டியில் பங்குபெறவிருக்கும் பாகிஸ்தான் அணியில் சேர்க்கப்படவில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகி யாவார் சயிட், இதுபற்றிக் கூறும் போது,

"வீரர்கள் மூவரும் குற்றமிழைத்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ள போதிலும், அவர்கள் அணியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பது தேவையற்றது.

இருப்பினும் வீரர்கள் மூவரும் தமது அறைகளுக்குள் பெண் இரசிகைகளை வர அனுமதிக்காமல் இருந்திருக்க வேண்டும்," என்று தெரிவித்துள்ளார். ●

## இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் அடுத்த வருடம் மோதவுள்ளன

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அடுத்த வருட ஆரம்பத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளது. அங்கு இந்தியாவுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

அவுஸ்திரேலிய அணி மனேஜர் ஸ்டீவ் பேர்னார்ட் மற்றும் கிரிக்கெட் நடவடிக்கை நிர்வாகி றிச்சர்ட் வட்சன் ஆகியோர் இந்தியாவுக்குச் சென்று இந்தப் போட்டிகள் பற்றிக் கலந்தாலோசிக்கவுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுடன் இந்திய அணி மோதும் 3 டெஸ்ட் போட்டிகளும் இந்திய முக்கிய நகரங்களான மும்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ●

# சிந்தியா பதில்கள்

**★ தன்னைப் பற்றி உயர்வாகக் கூறிக் கொண்டு மற்றவர்களை ஏன், தமது நண்பனைக்கூட கிண்டல் செய்து திரிபவர்கள் பற்றி கூறுங்கள்?**

வி.ராசகுமார், குருக்கள்மடம்.

*ஒருநாள் சோக்ரட்டீஸிடம் ஒருவன் வந்தான். அவன், "உங்களது நண்பர்களில் ஒருவரைப் பற்றிக் கூறவேண்டும்" என்று ஆரம்பித்தான், சோக்கரட்டீஸ் அவனை இடைமறித்து, "நீ முதலில் நன்கு ஆராய்ந்து பார்த்து எனக்குச் சொல்லவேண்டியது நீ கூறப்போகும் விஷயம் நிச்சயமாக உண்மையானதா?" என்றார்.*

*"இல்லை. இது வேறு ஒருவர் மூலமாக நான் கேள்விப் பட்ட ஒரு செய்தி."*

*"இரண்டாவது. நீ என்னிடம் கூற விரும்பும் விஷயம் நல்லதாக இருக்கும் என நம்புகிறேன்."*

*"இல்லை. நான் கூற வந்தது நல்ல செய்தியல்ல."*

*"சரி, மூன்றாவது. நீ அந்த விஷயத்தை என்னிடம் கூறியே ஆகவேண்டும் என்பதற்கு ஏதேனும் அவசியமான காரணங்கள் உண்டா?"*

*"உண்மையில் அதை உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் ஏதுமில்லை."*

*"நீங்கள் சொல்ல விரும்பும் விஷயம் நிச்சயப்படுத்தப்பட்ட உண்மையல்ல, நல்லதுமல்ல, அவசியமுமல்ல, இப்படியிருக்க நாம் இருவருமே இந்த விஷயத்தைப் பற்றிப் பேசாமல் மறந்துவிடுவதுதான் நல்லது" என்றார் சோக்ரட்டீஸ்.*

●●

**★ சிந்தியா! இசையமைப்பாளர் தேவாவின் விலாசத்தைத் தருவீர்களா?**

பி.ரம்யா, கொட்டகலை.

*சி.தேவா, 10 பத்மநாபன் தெரு, தியாகராய நகர், சென்னை-600 017.*

●●

**★ மற்றவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தி, அதைப் பார்த்து சிரிப்பவர்களைப் பற்றி?**

ஆர்.கோணேஸ்வரன், நுவரெலியா,

*எல்லாம் இந்தப் பழமொழிகள் ஏற்படுத்துகிற துன்பம்! 'வாய் விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்பதை அவர்கள் பாணியில் செய்து பார்க்கிறார்கள். கேவலமான நோயாளிகள்!*

●●

**★ சிந்தியா, நான் எனது மாமாவின் மகளைக் காதலிக்கிறேன். அது ஒருவருக்கும் பிடிக்கவில்லை. என்ன செய்வதென்று சொல்லுங்கள்?**

கே.சுபாவரன், திருகோணமலை.

*குறைந்தபட்சம் அந்த மாமாவின் மகளுக்குமா உங்களைப் பிடிக்காமல் போய்விட்டது? என்ன உலகமடா இது! மனதைத் தளரவிடாதீர்கள். வேறொரு பெண் கிடைக்காமலா போய்விடுவாள்.*


●●

**★ ஒலிம்பிக் போட்டி ஆயத்தங்கள் எப்படி சிந்தியா?**

எஸ்.பிரியா, கொட்டகலை.

*200 நாடுகளிலிருந்து 10,305 வீரர்கள் கலந்துகொள்ளப் போகும் மில்லேனிய ஒலிம்பிக்கை பிரமாண்டமாகச் செய்துகாட்டுவதற்காகவே, ஒலிம்பிக்கின் ஆரம்ப இடமான கிரேக்கத்தின் கோரிக்கையை நிராகரித்து அவுஸ்திலேயாவுக்கு அந்த வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. ஏற்பாடுகள் பலமாகத்தான் உள்ளன.*

●●




**★ உலகில் பணத்துக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம்?**

எஸ்.புவனேந்திரன், அக்கரைப்பற்று.

*ஆசைப் படுமளவுக்கு செயல்பட முடியாமல் போன வயதான அறிஞர் ஒருவர் இப்படிச் சொல்லியிருக்கிறார்.*

*"ம்... பணமிருந்தால் எதையும் செய்து விடலாம் என்று இளைஞர்கள்தான் கருதுகிறார்கள். வயதாகிவிட்டால் உண்மை அதுவல்ல என்பதைப் புரிந்து கொள்வார்கள்....."*

●●

**★ சலிப்பு என்ற வார்த்தையை எம்மிடமிருந்து அகற்றிவிடுவது எப்படி?**

எஸ்.பத்மா, கொழும்பு-10.

*உற்சாகம் என்ற வார்த்தையை நமக்குள் ஒட்டி வைத்துக் கொள்வதன் மூலம்தான்.*

●●

**★ சில வானொலி நிலையங்கள் முதன் முறையாக ஒலிபரப்பும் பாடல்களையே 'புதிய பாடல்கள்' என்று சொல்லி ஒலிபரப்புகின்றன. இன்னும் சில வானொலி நிலையங்கள் ஐந்தாறு மாதங்களுக்கு முன் வந்த பாடல்களையும் 'புதிய பாடல்கள்' என்று ஒலிபரப்புகின்றன. 'புதிய பாடல்கள்' என்று சொல்வதற்கு எது எல்லை சிந்தியா?**

இரா.சுகந்தன், மட்டக்களப்பு.

*எம்.எஸ்.வி, கே.வி.எம். காலத்தவர்களுக்கு இளையராஜா பாடல்கள் புதியவையாகத் தெரியும், இளையராஜா காலத்தவர்களுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் புதியவராய்த் தெரிவார். ரஹ்மான் காலத்தவர்களுக்கு நேற்றைய ரஹ்மான் பாடல்களும் பழசாகிவிடும். பழசென்றும் புதுசென்றும் பாடல்களுக்கு வயதெல்லை பிரிப்பது நீங்கள்தான். அதிலிருந்து தெரிந்துகொள்ளப்படுவது பாடலின் வயதல்ல உங்களின் வயது!*

●●

**★ சக்தி T.V யில் 'மீண்டும் மீண்டும் கோமாளிகள்' எப்படி?**

எம். ஆர்.நஸ்லியா, யடவத்த.

*நம் நாட்டு தமிழ்த் தயாரிப்பிலும் முதல் முறையாக உயர்தர தொழினுட்பத்தைப் பார்க்க முடிவது மிகுந்த மகிழ்ச்சி தருகிறது.*

●●

**★ இலங்கை வானொலியின் பவளவிழாக் கொண்டாட்டம் எப்படியிருந்தது சிந்தியா?**

வி.மாலதி, கொழும்பு-13.

*இப்படி ஏதாவது நடந்தாலே சில நாட்களுக்கு அதன் குறைகளும், விடுபடுதல்களும் தான் பரபரப்பாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும். வர்த்தக சேவை கண்டுகொள்ளப்படவில்லை, வானொலியின் பழைய கலைஞர்களைக் கௌரவித்ததில் பாரபட்சம்... என்று இப்போது பலதும் பத்தும்தான் கதைக்கப்படும். ஆனால் எதிர்காலத்தில் தன் குறுகிய தலைமைக்காலத்தையும் அழியவிடாமல் பொறித்துவிட்டதில் தமிழ்ச்சேவையின் அம்மாவுக்கு வெற்றிதான்!*

●●

**★ சிந்தியா! காதலில் தோல்விகண்ட ஒருவர் பற்றி உங்களுக்குத் தெரிந்த ஏதாவது ஒரு கதை?**

ந.கணகலிங்கம், பொகவந்தலாவ.

*காதலில் தோல்வி கண்ட ஒருவன் அந்தக் காட்டுக்கு வந்தான். அவனும், காதலியும் சேர்ந்து தங்கள் பெயர்களைச் செதுக்கிய மரத்தின் அருகே சென்றான்.*

*"ஆலமரமே, எங்கள் நெருக்கமான தொடர்பை நன்கு அறிந்துள்ள உன்னால் பேச முடிந்தால் என்ன சொல்வாய்?" என்று புலம்பினான்.*

*"நான் ஆலமரம் இல்லை, அரசமரம் என்று சொல்லும்" என்றான் மரத்தின் மேல் ஏறியிருந்த ஒரு விறகுவெட்டி.*

**ஒரு** சாதாரண பாம்புக்காக தனது உடலை கருடனுக்காக உணவாகக் கொடுத்து தனது உயிரையே தியாகம் செய்ய முன் வந்த அரசன் மீது கருடன் பெருமதிப்பு கொண்டது. அரசனுடைய தியாகத்தை மெச்சி அவனை உண்ணாமல் விட்டுவிட்டது. ஏற்கனவே தான் உணவாகக் கொண்ட பாம்புகளையும் உயிர் பெற்றுவர வைத்தது.

இவ்வாறு கதையைக் கூறி முடித்த வேதாளம், "இந்த கதையில் வரும் அரசனும் கருடனும் உயிர்களின் மீது கருணை கொண்ட தன்மையே காண்கிறோம். இருப்பினும், உயிரின் மீது அதிகமான இரக்கம் வைத்துள்ளவர் அரசனா? கருடனா?" என்று கேட்டது.

இதற்கு பதில் கூறிய விக்கிரமாதித்தன், "அரசனோ பகுத்தறிவுள்ளவன். அவனுக்கு இரக்க சிந்தை ஏற்படுவது இயல்பு. ஆனால் கருடன் அவ்வாறல்ல. அதற்கு பகுத்தறிவே கிடையாது. ஆகவே அரசனைவிட கருடனிடத்திலேயே, ஜீவகாருண்யம் மிகுந்து காணப்படுகின்றது!" என்று புதிரை விடுவித்தான்.

இந்தப் பதிலைக் கேட்டதும் வேதாளம்

"நான் உன்மீது மையல் கொண்டது உண்மை. ஆனால் நீயோ இன்று இன்னொருத்தருடைய மனைவியாகிவிட்டாய். பிறன் மனைவியைத் தீண்டுவது பெரும் பாவம். உன்னை நான் தொடமாட்டேன். நீ சென்று வருவாயாக!" என்று கூறி மரியாதையாக அனுப்பிவைத் தான்.

இவ்வாறு கூறி அதிகாரியின் மனைவியைத் திரும்பி அனுப்பி வைத்தாலும் கூட,

## 'அரக்கனுக்காண இரை'

அவள் மீது அரசன் வைத்த மோகம் தீரவில்லை. அவளை நினைத்தே அவன் உள்ளமும் உடலும் உருகியது.

சில நாட்களில் அரசன் இறந்து போனான். அரசன் இறந்ததை அறிந்து அந்த அதிகாரியும் இறந்து விட்டான்.

இவ்வாறு கதையைக் கூறி முடித்த வேதாளம் தனது புதிர்க் கேள்வியை விக்கிரமாதித்தனிடம் கேட்டது.

"இந்தக் கதையில் வரும் அழகியை விரும்பிய அரசன், அவளை மணந்த அதிகாரி ஆகிய இருவரும் இறந்தனர். இவர்களில் சிறந்தவன் யார்?" என்று கேட்டது.

விக்கிரமாதித்தன் "மாற்றான் மனைவி

அவர்களை விழுங்காமல் விடுவதா னால் தான் கூறும் நிபந்தனைக்கு உட்பட்டே யாக வேண்டும். என்று அரக்கன் கூறினான்.

"ஒரு குடும்பத்தில் தலைமகனாகவும் பெற்றோர் உயிருடன் இருப்பவனாகவும் ஓர் இளைஞனை எனக்கு உணவாகக் கொடுத்தால் நான் உங்கள் இருவரையும் விட்டு விடுகிறேன்!" என்று அரக்கன் கூறினான். அரக்கன் கூறியபடியே ஓர் இளைஞனை

எப்படியாவது கொண்டு வந்து கொடுத்து விடுவதாக வாக்குறுதி அளித்து விட்டு, அரசன் தனது நாடு திரும்பினான்.

தனது மந்திரி பிரதானிகளை அழைத்து, "தாய்க்குத் தலைமகனாகவும் தனது பெற்றோரை இழக்காமலும் உள்ள ஒரு வாலிபனை விலை கொடுத்து வாங்க முடியுமா?" என்று கேட்டான்.

'அரசனுடைய உண்மையான நோக்கம் என்னவென்று தெரியாத ஏழை பிராமணன் ஒருவன் முன் வந்தான்.

பிராமணனுக்கு ஒரு தொகை பணத்தைக் கொடுத்து அவனுடைய மகனை அரசன் காட்டுக்குக் கூட்டிக் கொண்டு சென்றான்.

# மன்னாதி மன்னன் 23

விக்கிரமாதித்தனுடைய முதுகிலிருந்து துள்ளிப் பாய்ந்து ஓடிச் சென்று மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

விக்கிரமாதித்தன் வேதாளத்தைத் தொடர்ந்துச் சென்று முருங்கை மரத்திலேறி அதனைப் பிடித்துக் கொண்டு புறப்பட்டான்.

இப்பொழுது வேதாளம் விக்கிரமாதித்தனிடம் தனது இருபதாவது கதையைச் சொல்லத் தொடங்கியது.

### இருபதாவது புதிர்க்கதை

**க**னகபுரத்தை ஆட்சி புரிந்த விசாகரன் என்ற மன்னன் அவனுடைய நகரத்தில் வர்த்தகனாக விருந்த ஒரு கோமுட்டிச் செட்டியின் மகள் மீது மையல் கொண்டான்.

அந்த நகரத்திலேயே மிக அழகியாக இருந்த அவளைத் தங்கள் மனைவியாக்க பலர் முயற்சி எடுத்தனர்.

மன்னன் விசாகரன் கோமுட்டிச் செட்டியிடம் நேரடியாகவே அவனுடைய மகளைத் தனக்கு மணமுடித்துத் தரும்படி கேட்டான். மன்னனுடைய கோரிக்கைக்கு இசைந்த செட்டி மன்னருடைய சாதகத்தை - மணப் பொருத்தம் பார்ப்பதற்காக கேட்டுப் பெற்றுக் கொண்டான்.

அரண்மனை சோதிடர்களிடம் இருவருடைய சாதகங்களும் கொடுக்கப்பட்டன. அவர்கள் விரிவாக அராய்ந்த பின்னர் "இந்தப் பெண்ணை அரசர் மணமுடிக்க முடியாது. இருவருடைய சாதகத்துக்கும் எதுவுமே பொருந்தவில்லை. ஆகவே திருமண ஏற்பாட்டை கைவிட்டு விடுங்கள்!" என்று சோதிடர்கள் உறுதியாக கூறினார்கள்.

இதனால் அரசன் மிகவும் வேதனைப் பட்டான். அரண்மனையிலுள்ள உயர் அதிகாரி யொருவருக்கு அந்த அழகிய பெண்ணை மணமுடித்து வைக்க ஏற்பாடு செய்தான் மன்னன்.

ஒரு நாள் அதிகாரி தன்னுடைய மனைவியை அழைத்துக் கொண்டு அரண்மனை வீதியொன்றில் சென்று கொண்டிருக்கும் போது அந்த அழகியை அரசன் கண்டான். 'இந்தப் பேரழகியை என்னால் அடைய முடியவில்லையே, என்று ஏங்கினான். அரசனுடைய ஏக்கத்தை அந்த அதிகாரி புரிந்து கொண்டான்.

இருவரும் அவர்கள் இல்லம் திரும்பியதும் மனைவியிடம் அந்த அதிகாரி, "பெண்ணே! அரசன் உன்னை ஏற்கனவே விரும்பி இருந்தான். ஆனால் சாதகம் சரி யில்லையென்பதனால் உன்னை தனது மனைவியாக்கிக் கொள்ள அரசனால் முடியாமல் போய் விட்டது. உன்னை அடைய முடியாமல் அரசர் படும் வேதனையைப் பார்த்து நான் மனம் வெதும்புகிறேன் நீ இன்று மட்டும் அரசரிடம் சென்று அவரை மகிழ்வித்து விட்டு நாளை மீண்டும் என்னிடம் திரும்பி வருவாயாக!" என்று கூறி அவளை அனுப்பி வைத்தான்.

அவளும் அரண்மனைக் குச் சென்று அரசனைக் கண்டு தன் கணவன் தனக்கு இட்ட கட்டளையைப் பற்றி எடுத் துரைத்தாள்.

அதிகாரியின் மனைவி கூறிய வார்த்தைகளைக் கேட்டு அரசன் துணுக்குற்றான்.

யைத் தீண்ட மாட்டேன். என்று கூறிய மன்னவனே சிறந்தவர்!" என்று விடை கூறினான்.

இந்தப்பதிலைக் கேட்ட வேதாளம் ஓடிச் சென்று மீண்டும் முருங்கை மரத்தில் தாவியேறிக் கொண்டது. விக்கிரமாதித்தனும் பின் தொடர்ந்து சென்று அதனைப் பிடித்து தன் முதுகில் சுமந்த வண்ணம் மீண்டும் நடக்கலானான்.



### இருபத்தோராவது புதிர்க்கதை

**சி**த்திரபுத்தன் என்றோர் அரசன் மகிழாபுரியை ஆண்டு வந்தான். நாட்டைப் பரிபாலிப்பதைப் பார்க்கிலும் அந்த மன்னனுடைய நாட்டம் காட்டுக்குச் சென்று விலங்குகளை வேட்டையாடுவதில்தான் அதிகமிருந்தது.

அன்றொரு நாளில் சித்திரபுத்தன் வேட்டைக்குச் சென்றபோது அழகான பெண்ணொருத்தி ஒரு வேப்பமரத்தடியில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். அவளுடைய அழகில் மன்னன் மயங்கி நின்றான்.

"பெண்ணே! நீ யார்? தனியாக இங்கே ஏன் நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

அந்தப் பெண், "இந்தக் காட்டில் தவம் செய்து கொண்டிருக்கும் தாகை முனிவரின் மகள் நான். என் தந்தையின் பூசைக்கு மலர் பறிக்க வந்தேன்!" என்று கூறினாள்.

இவ்வாறு இவர்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருக்கும்போது பலமாக கர்ஜனை செய்து கொண்டு ஓர் அரக்கன் அங்கு வந்தான். இருவரையும் விழுங்கப் போவதாக அரக்கன் கூறினான்.

அரக்கனை இனிய வார்த்தை கள் கூறி மடக்கிய சித்திரபுத்தன், தங்களை உயிரோடு விட்டு விடுமாறு கெஞ்சி மன்றாடினான்.

அரசருடைய வருகையை எதிர்பார்த்து அரக்கன் காத்துக் கொண்டிருந்தான்.

பிராமண இளைஞனைப் பார்த்ததும் அரக்கனுக்கு வாயில் நீர் சுரந்தது. அரசன் அரக்கனைப் பார்த்து "இதோ நீ கேட்டுக் கொண்டபடி பெற்றோருக்கு மூத்தவனான இந்த இளைஞனை உனக்கு இரையாக்கக் கொண்டு வந்திருக்கிறேன். இவனுடைய பெற்றோர் உயிருடன்தான் இருக்கிறார்கள்?" என்று கூறினான்.

பிராமண இளைஞனுக்கு அப்பொழுது தான் உண்மை புலப்பட்டது. தனது பெற்றாரிடம் உண்மையை மறைத்து, அரக்கனுக்கு இரையாக்க அரசன் தன்னை இங்கு கொண்டு வந்திருக்கிறான் என்பதை எண்ணியதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவனை விழுங்குவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேதாளம், அந்த இளைஞன் சிரித்ததற்குக் காரணம் தெரியாமல் அப்படியே நின்றது.

இந்த இடத்தில் வேதாளம் கதையை முடித்துக் கொண்டு விக்கிரமாதித்தனைப் பார்த்து, "தன்னை விழுங்குவதற்கு ஆயத்தமாக நின்ற அரக்கனைப் பார்த்து அந்த இளைஞன் ஏன் சிரித்தான்?" ஏன்று கேட்டது.

விக்கிரமாதித்தன் காரணத்தைச் சொல்லத் தொடங்கினான்.

"ஒரு பிள்ளைக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் அப்பிள்ளை தன் பெற்றோரிடம் செல்ல வேண்டும். தனது பெற்றோரால் ஒரு பிள்ளைக்குத் தீங்கு நேரிடுமானால்

## இராஜகுமாரன்

அரசனிடம் முறையிட வேண்டும். அரசனே தீங்கு செய்ய முற்பட்டால், ஆண்டவனிடம் முறை யிட வேண்டும். ஆண்டவனே தீங்கு செய்ய நேர்ந்தால் எவரிடம்தான் போய் முறையிட முடியும்? என்று அந்த இளைஞன் எண்ணினான். இதனால்தான் அவன் சிரித்தான்!" என்று விக்கிரமாதித்தன் புதிரை விடு வித்தான்.

இதைக்கேட்டு வேதாளம் விக்கிரமாதித்தனிடமிருந்து விடுபட்டு ஓடிச் சென்று மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது .விக்கிரமாதித்தன் வேதாளத்தை பின் தொடர்ந்து ஓடிச் சென்று முருங்கை மரத்தி லேறி அதனைப் பிடித்துக் கொண்டு தோளில் சுமந்த வண்ணம் நடந்தான். வேதாளம் தன் இருபத்திரண்டாவது புதிர்க்கதையைச் சொல்லத் தொடங்கியது.

(மன்னன் வருவான்...)

# வாக்கு வேட்டை வேட்பாளர்களுக்கு

தேர்தல் களத்தில் குதித்துள்ள நமது வேட்பாளர்களுக்கு 'மதன்' வழங்கும் ஆலோசனைகளை முரசு தருகிறது. பயன்படுத்தி (வாக்கு)ப் பலன் பெறுங்கள்.

(நன்றி : 'மதன்' ஜோக்ஸ்)



கீழே உள்ள பெரியோர்களே... மாடியில் நிற்கும் தாய்மார்களே!



''டி.வி-யில் தேர்தல் பிரசாரம் செய்ய அனுமதி தரமுடியாதாம்!.. தராவிட்டால் போயேன்...!''



''‘மைக்’தான் சார்... சும்மா தமாஷுக்கு இப்படிப் பண்ணி வெச்சிருக்கோம்... நீங்க பாட்டுக்குப் பேசுங்க...!''



அருள் ஜூவல்லர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:

165, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

Website: www.lppik.com/atul

436331


# சின்னம்




← அவுஸ்திரேலிய நகரான சிட்னியில் நடக்கும் ஒலிம்பிக் போட்டிச் சின்னம் தான் இது.

அவுஸ்திரேலிய ஆதிவாசிகளான அபோரிஜின்களின் ஆயுதம் 'பூமராங்' ஆகும். அபோரிஜின்களின் வேட்டை ஆயுதமான முக்கோண வடிவிலான பூமராங்கின் மேல் ஒருவர் ஓடுவது போலவும் சூரியனும் அதன் பின் பாறைகளும் ஒலிம்பிக் சின்னமாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சின்னத்தில் இருக்கும் பல்வேறு வகையான நிறங்கள் அவுஸ்திரேலியாவின் இயற்கை அழகைப் பிரதிபலிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளன.

இதுவரைகாலமும் ஒலிம்பிக் போட்டிகளின் சின்னங்களாக பறவைகளும் மிருகங்களுமே இருந்து வந்தன. இம்முறை அவுஸ்திரேலிய பழங்குடியினரின் வேட்டை ஆயுதம் சின்னமாக்கப்பட்டிருப்பதன் மூலம் புதுமையாக உள்ளது.




ஸ்ரீ கல்யாணி ஜூவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657




# வசதிகள்

→ சிட்னி ஒலிம்பிக்கை கண்டுகளிக்க அவுஸ்திரேலிய அரச பல வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. அவற்றில் ஒன்றுதான் ஒலிம்பிக் விளையாட்டரங்கிற்குச் செல்ல அமைக்கப்பட்ட இந்த பிரமாண்ட புகையிரத நிலையம்.

95 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட இந்த புகையிர நிலையத்திற்குள் ஒரே நேரத்தில் சுமார் 50 ஆயிரம் பேர் வரை வசதியாக வந்து போகலாம்.

↓ 27வது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் பிரதான விளையாட்டரங்கம் தான் இது. பிரமாண்டமான முறையில் சிட்னியில் இந்த அதி நவீன அரங்கு நிர்மாணிக்கப்பட்டது.

ஏறத்தாழ ஒரு இலட்சம் பார்வையாளர்களைக் கொண்டிருக்கக் கூடிய இந்த அரங்கிற்குச் செல்ல 5 நிமிடங்களுக்கு ஒரு பஸ் உள்ளது.


# அரங்கு



# பயிற்சி

↑ சிட்னி ஒலிம்பிக் போட்டிகள் செப்டம்பர் 15ம் திகதி தொடங்கி அக்டோபர் முதலாம் திகதி வரை நடைபெறுகின்றன. அதன்பின் அக்டோபர் 18ம் திகதி முதல் 29ம் திகதி வரை 11 நாட்கள் ஊனமுற்றவர்களுக்கான பராலிம்பிக் போட்டிகள் சிட்னியில் நடைபெறவுள்ளன.

இதில் சுமார் 4 ஆயிரம் ஊனமுற்ற விளையாட்டு வீரர்கள் பங்கு கொள்கிறார்கள். அதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார் ஒரு வீரர்.




# காந்தர்

↘ மலேசிய நாட்டில் ஈப்போ நகரிலுள்ள லின் தோ லின் என்ற 69 வயது நிரம்பிய இந்தபா தன் உடலில் இரும்பிலானான பல பொருட்களை ஒட்ட வைத்துக் கொண்டு நிற்கிறார். இவற்றை தன்னுடலில் பிசின் அல்லது வேறு ஒட்டவைக்கும் பொருட்களின் உதவியோடு தன்னுடலில் பிணைக்கவில்லை. உலோகத்தாலான பொருட்களைக் கவர்ந்திழுக்கும் காந்தசக்தி இவருடைய உடம்பில் இயல்பாகவே தோன்றியிருக்கிறது.

9 வருடங்களுக்கு முன்னர் லின் ஒரு சஞ்சிகையில் மின்சக்தியைப் பற்றி ஒரு கட்டுரையைப் படித்துள்ளார். அதனைத் தொடர்ந்து ஏதோவொரு வகையில் காந்தசக்தியை தனது உடலில் உருவாக்கிக் கொண்டார். இவருடைய மூன்று புதல்வர்களும் ஒரு பேரனும் கூட தங்கள் உடல்களில் காந்தசக்தியைத் திரட்டி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அபூர்வமான இந்த சக்தியைப் பெற்ற லின்னும் அவருடைய புதல்வர்களும் அவர்களுடைய ஊரில் பலரை ஈர்த்திழுக்கும் நிலையிலுள்ளனர். தம்மை நாடி வருவோர்களுக்கு இவர்கள் இலவசமாகவே சாதனை புரிந்து காட்டுகிறார்கள்.



## 3வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி. புஸ்பராசா பிரவீனா (யோபிஹா)

11.09.2000



திருகோணமலையை சேர்ந்த புஸ்பராசா-இந்திராணி தம்பதியின் செல்வப்புதல்வி பிரவீனா (யோபிஹா) தனது மூன்றாவது பிறந்தநாளை கொழும்பில் தனதில்லத்தில் தங்கை கிருத்திகாவுடன் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, தங்கை கிருத்திகா, அம்மம்மா, பாட்டி, மாமாமார்-நடராஜ, தங்கேஸ்வரன், தினேஸ்குமார், பெரியம்மாமார் சித்ரா, யோகா, மாமிமார் செல்வமலர், ஷைலஜா, சித்தி பரமேஸ், சித்தா ஸ்டாலின், அண்ணாமார் பிரதாப், கரன், தீபன், தனஞ்ஜன், சுசாந்தன், துஷ்யந்தன், அருண்பிரசாந்த், இரவீன்டிரன், தம்பி நிதர்ஷான், அக்கா விநோதாஷினி, மச்சான்மார் ஜொனாதன், கிருஷ்டி, மச்சாள் நாஷிகா, ஜெனிட்டா ஆண்டிமார் சாமிலா, சுகிர்தா, யசோ, கனகா, யோகா, நந்தினி, சீதா, விஜிதா, அங்கிள்மார் குகன், கிருபா ஆகியோரும் மூர்த்தி குடும்பத்தார், பவான் குடும்பத்தார், சாந்தன் குடும்பத்தார், அரிச்சந்திரா குடும்பத்தார், வசந்தன் குடும்பத்தார், கவமுனை பூபாலரட்னம் குடும்பத்தார் ஆகியோரும்.

திருமலை அப்பம்மா, அத்தைமார், மாமாமார், சித்திமார், சித்தாமார், யோகநாதனம் குடும்பத்தார், சிந்து அத்தை, நந்தன் குடும்பத்தார், அன்னபிள்ளை குடும்பத்தார், நாஜிமுமன் குடும்பத்தார், முருகாநந்தம் குடும்பத்தார் அனைவரும் பிரவீனாவை பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் துர்க்கை அம்மன் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: மூர்த்தி ஜுவலர்ஸ் வெள்ளவத்தை.

# அரிதானவை

↓ உலகிலுள்ள எண்ணற்ற ஜீவராசிகளில் ஒவ்வொரு இனத்திலும், உருவ அமைப்பிலும் குணாதிசயங்களிலும் வேறுபட்ட வகைகளும் காணப்படுகின்றன. உலகிலேயே மிகவும் அரிதான வையும் அதிசயமானவையும் தான் இந்த முதலைக் குஞ்சுகள். பிறந்தது ஆறே ஆறு நாட்களான இவற்றின் பிறப்பிடம் நியூகினியா.

இப்போது ஜெர்மன் நாட்டின் ஃபோர்பட்டால் உயிரியல் பூங்காவில் உள்ளன. இந்த அரிதான இன முதலைகள் கரும் புள்ளிகளைக் கொண்ட நீல நிறமானவை.

உயிரியல் ஆராய்ச்சியாளர்களின் பெரு முயற்சியால் குஞ்சு பொரிக்க வைக்கப்பட்டது. இத்துடன் இரண்டாவது முறையாகும். இந்த அரிய முதலைகளை ஜெர்மனியைத் தவிர உலகின் வேறெந்த இடத்திலும் காண முடியாது.



(பட உதவி: ஆர். எஸ். வாணி-லெபனான்)